www.padippakam.com

# தாயகம்

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்



40/

ஜனவரி உ004

படிப்பகம்

www.padippakam.com

# கல்லெறி தூரம்



சர்வ வல்லமையுடைய பேரரசின் ஆசியுடனும்
அணு ஆயுத வல்லமையுடனும்
அவற்றைக் காவிச் செல்லும் ஏவுகணைகளுடனும்
இஸ்ரேல்
பலஸ்தீனத்தின் விடுதலைப் போராளிகளை இலக்கு வைக்கிறது
பலஸ்தீனத்தின் ஒவ்வொரு அராபியனையும் இலக்கு வைக்கிறது
குண்டு துளையாத கவச வாகனங்கள்
போராளிகளின் இருப்பிடங்களைத் தகர்க்கின்றன.
ஒவ்வொரு பலஸ்தீன நகரத்தையும் தரைமட்டமாக்குகின்றன
உளவுச் செய்மதிகள் வழிகாட்டலுடன் உலங்கு வானூர்திகள்
போராளிகளின் வாகனங்கள் மீது குண்டெறிகின்றன.
அதிவேக விசைப்படகுகள் அலைகளை ஆளுகையில்
குறிதவறாத எறிகணைகள்
போராளிகளின் பயிற்சிப் பாசறைகளை நிர்மூலமாக்குகின்றன
பலஸ்தீன அகதி முகாங்களையும் நிர்மூலமாக்குகின்றன.
ஸியோனிஸத்தின் உளவு நிறுவனம்
தனது தகவற் தொழில் நுட்ப வல்லமையுடன்
ஒவ்வொரு பலஸ்தீனியனையும் ஒரு பயங்கரவாதியாக நோக்குகிறது
பலஸ்தீனம் சுவர் சூழ்ந்த ஒரு சிறைக் கூடமாகிறது
சுவருக்கு அப்பால் இஸ்ரேலும் ஒரு சிறைக்கூடமாகிறது.
போராளிகள் ஆயுதமேந்தி உலாவுகிறார்கள்
போராளிகள் ஆயுதங்களாகி உலாவுகிறார்கள்
ஸியோனிசம் இன்னும் உக்கிரமாகப்
போராளிகளை இலக்கு வைக்கிறது
பலஸ்தீனத்தை இலக்கு வைக்கிறது
விடுதலை இன்னும் வெகு தொலைவில் என்கிறார்கள்
அரசியல் அவதானிகள்

தனது மண்ணைக் குறிவைக்கும்
ஆயுதமேந்திய அயலவன்மீது கல்லெறிகிறான்
ஒரு பலஸ்தீனச் சிறுவன்
விடுதலை கூப்பிடு தொலைவில். கல்லெறி தொலைவில்
என்கிறேன் நான்.

*– சிவா –*

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான காலாண்டிதழ்

**பிரதம ஆசிரியர்:**
க.தணிகாசலம்
தொ.பே.இல. 021-2223629

**ஆசிரியர் குழு:**
இ.முருகையன்
சி.சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ.தேவராஜா
கல்வயல் வே.குமாரசாமி
அழ.பகீரதன்
ஜெ.சற்குருநாதன்
மாவை வரோதயன்

**பக்க வடிவமைப்பு:**
சிவபரதன்
நகுலன்

**விநியோகச் செயலர்:**
க.ஆனந்தகுமாரசாமி

**வெளியீடு:**
தேசிய கலை இலக்கியப் பேரவை
405, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

**அச்சுப்பதிவு:**
ஜே.எஸ். பிறிண்டேஸ்,
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு.

சந்தா விபரம்
**உள்நாடு:**
ஓர் ஆண்டு ரூ160.00 4 இதழ்கள்
ஈர் ஆண்டு ரூ300.00 8 இதழ்கள்
**வெளிநாடு:**
ஓர் ஆண்டு 8 அமெரிக்க டொலர்

## உள்ளே....

### கவிதை



சோ.பத்மநாதன்
த.ஜெயசீலன்
பவித்திரன்
வனஜா நடராஜா
பொ.கோபிநாத்
பிரசன்னாவரூன்
கரவைதாசன்
தங்கேஸ்வரன் பார்த்தீபன்
அதிசயன் செல்வராசன்
அரங்கா றாதா
மு.தியாகராசா
ஞாலசீர்த்தி மீநிலங்கோ
சிவசேகரம்

### சிறுகதை



பரமன்
மணி
வனஜா நடராஜா
நீ.பி.அருளானந்தம்
தாட்சாயணி

### கட்டுரை



அண்ணா இராசேந்திரம்
திருமதி சாந்தினி சிவநேசன்
தணிகையன்
குழந்தை ம.சண்முகலிங்கம்
சோ.தேவராஜா
பொன்.கோபிநாத்
க.வேல்தஞ்சன்
றஜனி
மெய்யவன்
ஊரோடி

### முகப்பு அட்டைப்படம்

கொழும்பில் நடைபெற்ற சிங்கள தமிழ் கலைக்கூடல்

படிப்பகம்

www.padippakam.com

தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான காலாண்டிதழ் இதழ்: 49 ஜனவரி 2004

# சமாதானமும் அதிகார இழுபறியும்

இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்த சமாதானத்துக்கான முயற்சிகள் தடைப்படுவதற்கு ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கையும் ஒரு காரணமாக-துரதிஸ்டமே. எனினும் மீண்டும் 'சமாதானத்துக்கான யுத்தம்' எனப் பிரகடனப்படுத்தாமல் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து, பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர்வதற்கான முயற்சிகளுக்கு உதவுவதாக கூறுவது நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற உதவுவதாக அமைகிறது.

இருபதாண்டு யுத்தத்தின் பாதிப்பை உணர்ந்த இலங்கையின் சகல இன மக்களும் இன்று சமாதானத்தையே விரும்புகின்றனர். சமாதானத்துக்கும், அரசியல் தீர்வுக்கும் எதிராக நிற்கும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, வெளிநாட்டுச் சக்திகளும் மக்களின் வெறுப்புக்குள்ளாகும் நிலை இன்று வளர்ந்துவருகிறது. இதனால் இன்று சமாதானத்துக்கான குரலை பல்வேறு சக்திகளும் பல்வேறு நோக்கங்களுடன் வலியுறுத்தி நிற்கின்றன. அதிலும் நிரந்தர சமாதானத்தை நோக்கிய நகர்வில் – பல்லின மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி – அரசியல் தீர்வை எட்டுவதற்கான வழியில் அக்கறையற்று, தூரவிலகி நின்றபடி தத்தமது அதிகாரங்களை நிலைநிறுத்துவதிலேயே இவர்கள் கவனமாக உள்ளனர்.

யுத்தநிறுத்தம், சமாதானம் என்பவை இனமுரண்பாட்டு யுத்தத்தில் ஓர் இடைநிலை. அதுவே சமாதானத்துக்கான இறுதிநிலை அல்ல. இருபதாண்டு யுத்தத்தில் யுத்தநிறுத்தம், சமாதானம் என்பது புதிய ஒன்றல்ல. அவை இதற்கு முன்பும் பலதடவைகள் முன்னெடுக்கப்பட்டு தோல்வி கண்டவைதான். எனவே நீதியான ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கான முயற்சியில் திறந்த மனத்துடன் செயற்படுவதே நிரந்தர சமாதானத்துக்கான ஒரே வழியாகும். இதை விடுத்து அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் ஏதுமின்றி காலத்தை நீட்டிச்செல்வது முறுகல்நிலையை மீண்டும் தோற்றுவிக்க வாய்ப்பாக அமையலாம்.

ஒரு அரசியல் தீர்வை முழுமையாக முன்னெடுக்கும் அதிகாரமற்ற பிரதமர் சமாதானத்துக்கான நகர்வை இரண்டு ஆண்டுகள் முன்.தள்ளி வந்துள்ளார். மேலும் பத்து ஆண்டுகள் – அமெரிக்காவின் ஆசியுடன் – சமாதானத்தை இழுத்தடித்துச் செல்ல இருந்த தனது திட்டத்தை ஜனாதிபதி முறியடித்து விட்டதாக பிரதமர் தனது கட்சியின் ஆண்டுக்கூட்டத்தில் ஆதங்கப்பட்டுள்ளார். அடுத்த ஜனாதிபதியாக அமர்வதற்கான அரசியல் முன்னெடுப்பு அவருடையது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பிரதமரால் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த தனது அதிகாரத்தை வெளிப்படுத்த தருணம் பார்த்திருந்த ஜனாதிபதி, பிரதமரின் அமெரிக்க விஜயத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். இலங்கை அரசியலில் இருந்துவரும் இந்திய – அமெரிக்க ஆதிக்கக் காய் நகர்த்துதலைப் பயன்படுத்தி – இந்தியாவின் ஆசியுடன் – அதிகாரப் போட்டிக் களத்தில் ஜனாதிபதி இறங்கியுள்ளார். இதற்கு ஜே.வி.பியினரையும் துணையாக்கிக் கொண்டுள்ளார்.

அந்நிய ஆதிக்க சக்திகளைச் சார்ந்து தமது அதிகாரங்களை தக்கவைக்க முடிவதால் தேசத்து மக்களின் ஒற்றுமை பற்றியோ, தேசத்தின் இறைமை, சுதந்திரம் பற்றியோ இவர்கள் அக்கறை கொள்வதில்லை. இதுவே அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக இனமுறுகல் நிலை நீண்டு தொடர்வதற்கு அடிப்படைக் காரணமாகும். ஆளுங்கட்சி தீர்வை வைத்தால், எதிர்க்கட்சி குழப்புகின்ற – அரைநூற்றாண்டு கால அரசியல் அதிகார இழுபறிக்கு பலியாகி வந்திருப்பவர்கள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் என்பது மனங்கொள்ளப்பட வேண்டும். அதுவும் பாராளுமன்ற ஆசனங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட இந்த இனவாத 'அரசியல் நாடகத்தை' இருபதாண்டு யுத்த அழிவுகளின் பின்னரும் தொடர்வது மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகும்.

அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டியது எனினும் அதன் சூத்திரத்தால் – இருகட்சிகளின் கைகளிலும் அதிகாரம் இருக்கும் ஒரு நிலையில்தான் இந்த இரண்டு ஆண்டுகால சமாதானம் இன்னும் நீடிக்கிறது. ஓரளவுக்கேனும் இரு கட்சிகளும் அதிகாரச்சமநிலை பெற்றிருக்கும் இவ்வாய்ப்பை பயன்படுத்தி தேசிய இனப்பிரச்சினைக்கு ஒன்றுபட்டு தீர்வினை முன்வைக்க முடியும். அவ்வாறன்றி மீண்டும் தேர்தல் மூலம் தத்தமது அரசியல், பதவி, அதிகாரத்தை பலப்படுத்த எண்ணுவது நாட்டுக்கும், மக்களுக்கும் நல்ல விளைவுகளைத் தரப்போவதில்லை. தேசிய இனங்களின் சுதந்திரமான இருப்புக்கான குரலை அம்மக்களிடையே வேறுபாடுகளை விதைத்துப் பெறும் பெரும்பான்மை பலத்துடனும், அந்நிய ஆதிக்க சக்திகளின் ஒத்துழைப்புடனும் நசுக்க எண்ணுவது – அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக புரையோடிப் போயிருக்கும் – இனவாதம் எனும் வரலாற்றுப் புண்ணை அடுத்த சந்ததிக்கும் தொற்ற வைப்பதாகவே அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

# அடிமையின் ஏலம்

*இரு நூற்றாண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 'அடிமைகளை' அமெரிக்காவில் விலைபேசி விற்பதற்கான விளம்பரச் சுவரொட்டி*

இப்பொழுதுதான் வைன்வாட் றைஸ் கோஸ்ரிலிருந்து வந்துள்ள -தேர்ந்தெடுக்கப்பட்ட சரக்கு - நல்ல ஆரோக்கி யமுள்ள 250 நீக்ரோக்கள் - அஸ்பெலி படகுத்துறைக்கு அருகே பான்ஸ் வியான் கப்பற்தளத்தில் மே மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை விற்பனை செய்யப்பட இருக்கிறது. பெரியம்மை நோய்த் தொற்றிலிருந்து மிகக் கூடிய கவனத்துடன் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளது. முன் கூட்டியே தொடர்புகொள்ளவும்.




விற்பனை தொடங்கியது
ஆற்றாமையோடு
வெடித்த விம்மல்கள்
வேதனையையும்
துயரத்தையும் வெளியிட
பாதுகாப்பற்று
தாழ்வுற்று நின்றனர்
இளம் பெண்கள்,

அருமைக் குழந்தைகள்
விலைபோவதைக் கண்டு
கண்ணீர் ஆறாய்ப் பெருக
அன்னையர் நின்றனர்
கொடுங்கோலர்
தம்மைப் பொன்னுக்கு விற்கையில்
எழுந்த கசந்த ஓலங்கள்
கேட்பாரற்று நலிந்து போயின.

வாலிபம் கொழிக்கும் தன் மனாளனை
காதலும் உண்மையும் கனிய
சொல்லில் அடங்கா சோகத்தோடு
அப்பெண்
நெடிது நோக்கினாள்.

கடவுளின் கை செய்த குற்றத்தால்
பாவப்பட்ட கறுப்பரான ஆண்களும்
கீச்சிடும் நலிந்த குழந்தை களும் கூட
அத்துயர் சுமந்த கட்டத்தில்.

அன்புக்குரியவர்கள்
முரட்டுத்தனமாகப் பறிக்கப்படுகையில்
அந்த இதயம் அனுபவிக்கும் வேதனை
அன்பு வற்றிய உங்களுக்கு
தெரிந்திருக்க நியாயமில்லை.

அன்பு மனைவியரைப்
பிரியும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட
கணவருடைய கையறு நிலையும்
அவர்கள் நெஞ்சை அமுக்கும் சுமையும்
உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை

ஆங்கில மூலம்: Frances E.W.Harper
தமிழாக்கம் : சோ.ப.


படிப்பகம்

www.padippakam.com

# இங்கும் அங்கும்

ஏங்கற் பா

இங்கே:

இடி இடிக்குது மின்னல் வெட்டுது
மழையும் கொட்டுது
ஏழை எங்கள் குடிசை கூரை
எங்கும் ஒழுகுது
ஓட்டை வழி வானும் கொட்டுது
குடிசைத் திண்ணை ஊறி நனையுது
வெளிச்சமில்லாக் குடிசைக்குள்ளே
மின்னல் கீற்று எம்மைக் காட்டுது
குடிசைத்தட்டி, பத்தி எல்லாம்
இத்து வீழுகுது
குளிர் அடிக்குது கூதல் ஓடுது
உடலும் விறைக்குது.

என்றன் தம்பி தங்கை போர்வை இன்றி
குளிரில் நடுங்கி குந்தியிருப்பவர்
மாடாய் உழைத்து ஓடாய்ப் போன
எங்கள் அப்பா இப்ப
மூன்று நாளாய்க் காச்சலிலே
முடங்கிப் போனாரே
மருந்து வாங்க காசுமில்லை
வாய் நனைக்க வழியுமில்லை
அப்பா அருகில் அம்மா நின்று
வெம்பி வெம்பி விசும்புவாரே
அம்மா என்ன செய்வார், பாவம் எங்கு போவார்
வழியிருப்பின் கூறீர்!

அடுப்படியில் பூனை நன்றாய் தூங்குதல்லோ
நமது வாயும் வயிறும் பசியால் ஒட்டுதல்லோ

பிச்சை எடுத்து பசியைப் போக்க
எம்மால் ஆகாது
இல்லார் எல்லாம் உள்ளார் ஆக
மாறுவதெப்போது?

வல்லான் வகுத்தது சட்டமென்றால்
நல்லான் எங்கே
ஏதிலிகள் நாம் உயர
வழியுந்தான் எங்கே!

அங்கே:

நாட்டைச் சுரண்டி ஊரைச் சுரண்டி
உழைப்பைச் சுரண்டி கொழுத்த கூட்டம்
மாடி வீடு கோடி பணம் சேர்த்த கூட்டம்
வாக்குக் கேட்டு வேட்டு வைக்க
வந்த கூட்டம்
அவர் போகும் ஊர்தி வாழும் வசதி
பேசும் பெருங்கூட்டம்!

இங்கே ஏழை மக்கள் கந்தலுடன் ஏதிலியாய்
ஏங்கும் நிலை
இதைப் பார்த்தும் ஏனோ ஆண்டவனோ
அம்மனையில் தூங்குகிறாரே

எங்கே:

ஏழை வாழ உலகம் உண்டா
தெரிந்தால் சொல்லும்
சாதி குலம் நோக்கா ஞாலம்
கண்டால் கூறும்.

மாடி வாழ்க்கை சேரி வாழ்க்கை
இல்லா நாடுண்டா?
ஏய்த்துப் பிழைக்கும் பாவிகள் வாழாத்
தேசமிங்குண்டா?

மதத்தை விட்டு மதியை நாடி
வாழும் மக்கள் எங்கே?

ஊரும் வாழ உலகும் வாழ
வழிகள் காண்போர் வாரீர்!

-ஞாலசீர்த்தி மீநிலங்கோ-



படிப்பகம்

www.padippakam.com

# புரிதல்

'பரமன்'



இரண்டு சோதனைச் சாவடிகளையும் தாண்டி பஸ் மீண்டும் புறப்பட்டது. போகும் போது இருந்த உற்சாகமான மனோநிலை பயண அலுப்பாலும் உறக்கமின்மையாலும் எல்லோரிடமும் சற்றுக் குறைந்திருந்தது. இளைஞர்கள் சிலர் மட்டும் அது ஒரு பிரத்தியேக பஸ் என்பதை வெளிப்படுத்துவது போல்

பஸ்ஸின் இரச்சலையும் மீறி உரத்துக் கத்தி பகிடிகள் விட்டு கலகலப்பாக இருக்க முயற்சித்தனர். அவர்களது பகிடிகள் ரமேஸின் காதில் விழுந்தாலும் அவையும் பயணக்களைப்பால் அர்த்தமற்றவையாக தொய்ந்து போவதாகவே அவனால் உணர முடிந்தது. கொழும் புக்குச் செல்லும் போது அவனும் அந்த நண்பர்களோடு சேர்ந்து பயணத்தைக் கலகலப்பாக்குவதில் மிகவும் உற்சாகமாகவே இருந்தான். வரும்பொழுது பயண இடைவெளியில் தேனீர் அருந்துவதற்காக பஸ் நிறுத்தப்பட்ட போது அடுத்த பஸ்ஸில் வந்து இறங்கிய மூத்த கலைஞர் ஒருவருடன் நடந்த குறுகிய நேர உரையாடலில் அவர் கேட்ட கேள்வி ரமேசுக்குள் உறங்கிக்கிடந்த வாழ்வின் அறிவார்ந்த அனுபவ உணர்வுகளை தட்டி எழுப்பிவிட்டிருந்தது.

"தம்பி எங்கடை வயசுக்கு இப்படிப் பயண அனுபவங்கள் புதிசில்லை நீர் இந்த பிரச்சனைக்குள்ளேயே பிறந்து வளர்ந்தவர் எண்டு நினைக்கிறன். இந்த ஒன்றுகூடலிலை உங்கடை அனுபவம் எப்பிடி?"

"ஓ... புது அனுபவங்கள் நிறைய என்னாலை சடுதியாக இதுக்குப் பதில் சொல்லமுடியேல்லை.... மொத்தத்திலை..இது எங்களுக்கு பயனுள்ள நிகழ்ச்சிதான்"

பஸ்சாரதி ' கோணை ' அடித்து மீண்டும் புறப்படத் தயாரான போது அவசரமாக ரமேஸ் தனது பதிலை சுருக்கமாக முடிக்க... இருவரும் அவரவர் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர். அவனது மனம் மட்டும் அவரது கேள்விக்கான விடையை நோக்கி விரிந்து கொண்டிருந்தது.

"என்னடா ரமேஸ் கனவுலகத்திலை இருக்கிறான்"

"அப்பிடிக் கனவுலக ஆக்களைக் காண இஞ்சை வாய்ப்பில்லையே "

"வெளிக்கிட்டு மூண்டு நாள் அம்மா அப்பான்ரை ஞாபகம் வந்திருக்கும்."

"அங்கை நடந்த அடி தடியிலை பெடியன் பயந்து போனான். வீட்டை போய்த்தான் பார்வை பார்க்க வேணும்"

பகிடிகளை அவிழ்த்துவிட்ட மனக்கிளர்ச்சியில் 'ஓ..,ஓ..' என்று கத்தி பஸ்ஸிற்குள் எல்லோரும் ஆரவாரிக்கிறார்கள்-. அவன் மௌனமாக இருந்ததால் ஆரம்பத்தில் அவனை நோக்கி வந்த பகிடிகள் திசை மாறி எங்கெங்கோ சென்று இடையிடையே அவனை நோக்கி வந்து போனாலும் அந்த கலைஞர்களின் ஒன்று கூடலில் நடந்த சம்பவங்களையும் அனுபவங்களையும் அசைபோடுவதில் ரமேஸின் மனம் உள்ளூர மிகவும் உற்சாகமாக இருந்தது. ஒன்று கூடலுக்கு புறப்படுவதற்கு முன் வீட்டில் நடந்த உரையாடல் அவனது நினைவில் வந்தது.

"மகன் கொழும்புக்கு கூட்டத்துக்கு போகப் போறாராம்."

"உவரை ஏன் அங்கை, அவங்களைக் கண்டிட்டு 'ம்' எண்டு இருக்கவே"

"இவற்றை சிநேகிதரெல்லாம் போகினமாம்"

"பேப்பருகளைப் பாத்தாப் பிரச்சனை ஏதாலும் நடக்கும் போலை கிடக்கு, நாங்கள் மறிச்சாப் போலை நிக்கப் போறாரே, கவனமாப் போட்டு வரட்டன்"

அவன் புறப்படும் போது அவனது தந்தையார் சொன்ன வார்த்தைகளில் அர்த்தங்கள் பொதிந்துதான் இருந்தது. புத்தகங்கள் பத்திரிகைகள் என்று இன்னும் வாசிப்புப் பழக்கத்தை கைவிடாத அவர் நாட்டு


படிப்பகம்

www.padippakam.com

நடப்புக்களை முன்னறிந்து சொல்வதில் மட்டுமல்ல, ரமேஸினது சுபாவத்தையும் நன்றாகக் கணித்து வைத்திருந்தார்.

இராணுவ நடவடிக்கையின் போது தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து மீண்டும் வீடுகளுக்குத் திரும்பி வந்த பின் அடிக்கடி சுற்றி வளைப்புக்களும், தேடுதல்களும் இடம்பெற்றன. ஒவ்வொரு நாளும் அதிகாலை விடியலில் வீட்டைச் சுற்றி படையினர் நிற்பார்களோ என்ற அச்சத்துடன்தான் பொழுது விடிந்தது. இப்படி ஒரு அதிகாலைச் சுற்றிவளைப்பின் போது ரமேஸின் பாடசாலை நண்பன் ஒருவன் சுடப்பட்டு இறந்திருந்தான். இவைகளால் படையினர் மீது அவனுக்கு மிகுந்த வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஒரு நாள் சுற்றிவளைப்பில் அவன் பிடிபட்டு விசாரிக்கப்பட்ட போது அவனது முகத்தில் வெளிப்பட்ட வெறுப்புக்காகவே சந்தேகிக்கப்பட்டு படையினரால் துன்புறுத்தப்பட்டான். அது அவனது இயல்பு என்று கூறி அவனது தந்தையாரும், பக்கத்து வீட்டில் வசிக்கும் சிங்களம் தெரிந்த அவரது நண்பரும் செய்த நீண்ட பிரயத்தனத்துக்குப் பின்னர் தான் அவன் விடுவிக்கப்பட்டான்.

ரமேஸின் தந்தையார் அவனால் அப்படிச் சிரமத்துக்குள்ளான போதும் அவனுக்கு அவர்கள் மீதிருந்த வெறுப்புக்காக அவனைக் கடிந்து கொள்ளவில்லை. அவனது தாயார் மட்டும் ஊர் அயலில் நடப்பவற்றைக் கேள்வியுற்று அச்சமடைந்தவளாய் “ தம்பி அவங்களுக்கு முன்னாலை உப்பிடி விறைச்ச படி நில்லாதையடா” என்று அவனை மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

இப்படி ஒரு சுபாவமுடையவன் என்பதற்காகவே சமாதான ஒப்பந்தம் ஏற்படும் வரை உறவினர்கள் பல முறை அழைத்தும் அவன் கொழும்புக்குச் செல்வதை அவனது பெற்றோர் விரும்பவில்லை. சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்புதான் மூன்று நான்கு தடவைகள் அவன் கொழும்புக்குச் சென்று வந்தான். அதுவும் தமிழர்கள் அதிகம் பயணிக்கும் யாழ். கொழும்பு பஸ்ஸில் ஏறி வெள்ளவத்தையில் உள்ள உறவினர் வீட்டில் தங்கிவிட்டுத் திரும்பி விடுவதால் சிங்கள மக்களுடன் நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்பு அவனுக்கு ஏற்படவில்லை.

இதனால் அவனது தந்தையார் கூறியது போன்று அந்த மன இறுக்கத்திலிருந்து விடுபடாத மன நிலையிலேயே அவன் இருந்தான். கடந்த இரண்டு நாட்களாக நடந்த சிங்களக் கலைஞர்களின் ஒன்றுகூடலில் பெற்ற புதிய அனுபவங்களின் அடிப்படையில் முன்பு ஒரு முறை கொழும்புப் பயணத்தின் போது நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்.

** ** **

வழமை போல குணசிங்கபுரத்திலிருந்து வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடி வரை செல்லும் இரவு நேர இறுதி பஸ்ஸில் பதிவுசெய்யப்பட்ட இருக்கையில் சென்று ரமேஸ் அமர்ந்தான். இருக்கைகள் யாவும் நிரம்பிய பின் வந்து ஏறிய நோயாளித் தாயாரும் இளம் பெண்ணும் முன்புறத்திலிருந்த இருக்கைக் கம்பிகளைப் பிடித்த படி நின்றனர். ஆடம்பரமான ஆடை அணிகள் எதுவுமில்லாமல் வறுமையின் நிழல் படிந்த அவர்களின் தோற்றம் சிங்களப் பெண்களாக இருப்பார்களோ என்ற எண்ணத்தையே ரமேஸிடம் ஏற்படுத்தி இருந்தது. அவர்கள் நின்ற இடத்துக்கு அருகே இருந்த ஒருவர் தான் எழுந்து நின்று கொண்டு அந்த இளம் பெண்ணின் தாயாருக்கு இடமளித்த போது அவர்களுக்கிடையே நடந்த உரையாடல் அவனது ஊகத்தைப் பொய்ப்பித்தது. வழமை போல அனுராதபுரத்துக்கு இடையில் இறங்கும் சிங்கள, முஸ்லிம் பயணிகள் பஸ்ஸின் எஞ்சிய இடங்களைப் அடைத்துக் கொண்டனர். அவர்களுள் மது போதையில் ஏறிய சிங்கள இளைஞனும் அவனது நண்பர்களும் ஏறும் போதே சிங்களத்தில் உரையாடிய அந்த உரத்த தொனி மொழி தெரியாததால் தங்களைக் கிண்டல் செய்வதாக இருக்குமோ என்ற ஐயத்தை ரமேஸ் மனதில் ஏற்படுத்தி இருந்தது

பஸ் புறப்பட்டு சிலாபத்தை தாண்டிச் சென்று கொண்டிருந்த போது பஸ்ஸின் பின் புற வரிசையிலிருந்து முன் நோக்கி நகர்ந்த படி மதுபோதையில் நின்ற சிங்கள இளைஞன் தாயாரின் இருக்கையைப் பிடித்த படி நின்று கொண்டு பயணம் செய்த அந்த இளம் பெண்ணின் அருகே வந்து நின்றான். சிறிது நேரம் நிதானமாக நின்ற அவன் பின்னர் பஸ்ஸின் வேக மாற்றங்களிலும், திருப்பங்களிலும் ஏற்படும்.சாய்வுகளைப் பயன்படுத்தி அந்தப் பெண் மீது சரிந்து அவளுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தான்.

அதனை அவதானித்துக் கொண்டிருந்த ரமேஸின் மனதில் ஆத்திர உணர்வு பொங்கி எழுந்தாலும் நண்பர்களின் பலத்துடன் நிற்கும் அவனுடன் மோத முற்பட்டால் தனியாகவே பயணம் செய்யும் தான் பாதிப்படைய நேரிடுமோ என்ற எண்ணம் அவனுக்குள் எழ மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்தான். அவனது இருக்கைக்கு நேரே நின்ற திடகாத்திரமான ஒரு சிங்கள இளைஞன் ரமேஸைப் போலவே மது போதையில் நிற்பவனது நடத்தைகளை அவதானித்துக் கொண்டிருந்தான். ரமேஸின்அவதானிப்பையும் மனக்குமுறலையும் அவனது முகபாவத்திலிருந்தே கண்டு கொண்டவனாக முகத்தை திருப்பி தனது முகபாவனையால் போதையில் நிற்பவனைக் காட்டிவிட்டு ரமேஸைப் பார்த்து நட்புடன் சிரித்தான். அந்தச் சிரிப்பைக்கூட போதையில் நிற்பவனோடு வந்த ஒரு சிங்கள இளைஞனின் “உன்னால் அவனை என்ன செய்யமுடியம்.” என்ற சவாலுடனான ஏளனச் சிரிப்பாகவே அவனால் உணரமுடிந்தது. இதனால் அவனது சிரிப்புக்குப் பதிலாக சிறுபுன்னகையைக் கூட வெளிப்படுத்த முடியாத நிலையில் ரமேஸ் முகத்தை 'ம்' என்று வைத்தபடி திருப்பிக்கொண்டான்.

சிறிதுதூரம் சென்றபின் மதுபோதையில் நின்ற இளைஞன் மீண்டும் அந்தப் பெண்ணின் மீது சாய்ந்து



படிப்பகம்

www.padippakam.com

அவள் அச்சத்துடனும் அருவருப்புடனும் விலகிக் கொண்ட போதும் தூங்கி விழுவது போல சரிந்து அவளது கன்னத்தில் உரசிக்கொண்டிருந்தான். அப்போதுதான் ரமேஸின் அருகே நின்ற அந்த சிங்கள இளைஞன் உரத்த குரலில் கோபம் தெறிக்க பேசியபடி அவனை நெருங்கினான். பதிலுக்கு போதையில் நின்றவனும் அவனது நண்பர்களும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அடிபிடிக்கும் தயாரான போது சாரதி பஸ்ஸை நிறுத்தி விட்டு அவர்களை நோக்கி வந்தான். உரத்தகுரலில் உறுதியுடன் அவனது செய்கையை கண்டித்த அந்த இளைஞன் கூறிய நியாயத்தை பலர் ஏற்க்க முன் வந்தனர். இதனால் போதையில் வந்த அந்த இளைஞனை அவனது நண்பர்களில் ஒருவனே அடித்து கண்டித்து அடக்கிய போதுதான் அங்கு அமைதி மீண்டும் நிலவியது.

பஸ் புறப்பட்டபோது அவளது தாயாரின் அருகே இருந்த ஒருவர் தனது இருக்கையை அந்த இளம் பெண்ணுக்குக் கொடுத்துவிட்டு எழுந்து நின்றார். மீண்டும் ரமேஸின் இருக்கைக்கு அருகே வந்து நின்ற அந்த இளைஞன் ரமேஸைப் பார்த்து சிரித்தான். இம்முறை ஒரு இயந்திரத்தனமான சிரிப்பையாவது வெளிக் காட்டவேண்டிய நிலைக்கு ரமேஸ் தள்ளப்பட்டான். அந்த சிங்கள இளைஞனின் நியாயத்துக்கான கலகக் குரலால் மோசமான துன்புறுத்தலில் இருந்து அந்தப் பெண் விடுவிக்கப்பட்டதற்காக ரமேஸ் உள்ளூர மகிழ்ந்தாலும் அவனது ஆளுமையை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு அவனால் வரமுடியவில்லை. ரமேஸ் கற்றிருந்த உளவியல் கல்வி அந்த இளைஞனது கலகக்குரலை பாலியல் அடிப்படையில் எழுந்த ஒரு பொறாமையின் வெளிப்பாடாக இருக்கலாம் என்றே அவனை எண்ணவைத்தது.

**   **   **

அப்படி ஒரு இறுக்கமான மனநிலையில் தான் இருந்ததற்காக இப்பொழுது அவன் வெட்கமும் வேதனையும் அடைந்தான். தனது இனத்தைச் சேர்ந்தவன் என்றும் பாராமல் அந்த இளம் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட வனமுறைக்கு எதிராக குரல் கொடுத்த அந்த நட்பு நிறைந்த முகத்துக்குரிய இளைஞனை நினைவுபடுத்திக் கொண்டான். எப்பொழுதாவது காண நேர்ந்தால் அவனது செயலுக்கு நன்றி கூறுவதுடன் தனது நிலைப்பாட்டுக்காக வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணினான்.

இந்த ஒன்று கூடல் பயணத்துக்கு அவன் வருவதற்கு விரும்பியதே தங்களைப் போன்ற இளம் எழுத் தாளர்கள், மூத்த கலைஞர்கள் எல்லோரும் ஒன்று கூடிச் சென்று வரும் பொழுது பெறும் அறிமுகங்கள் அனுபவப்பகிர்வுகளுக்கான நல்லதொரு வாய்ப்பை இழந்து விடக்கூடாது என்பதாகவே முதலில் அமைந்திருந்தது. ஆனால் அதையும் மீறி, ஒடுக்குமுறைகளுக் கெதிரான உணர்வுடன் அவன் விரும்பும் அந்த சுதந்திரமான வாழ்வுக்காக தம்முடன்




**கூலிக்கு வந்தவன்**

ஈழத்தின் முக்கிய மரபுக் கவிஞர் களில் ஒருவரான ச.வே.பஞ்சாட் சரம் அவர்களின் முதல் நாவலாக 'கூலிக்கு வந்தவன்' வெளிவந் துள்ளது.

விலை ரூ.170

வெளியீடு: தூண்டி இலக்கிய வட்டம்

கை கோர்த்து நிற்கும் சிங்கள இளைஞர்கள், யுவதிகள்,கலைஞர்கள் பயணக் களைப்பில் சென்ற அவர்களை வரவேற்று உபசரித்த போது முற்றிலும் ஒரு புதிய சூழலில் தான் இருப்பதாக அவன் உணர்ந்தான். உணவளித்து தங்குமிட வசதிகள் செய்து உரையாடி ஒன்றுபட்டு அவர்கள் பழகிய போது அவனது இளமைப் பருவத்திலிருந்தே அவன் பழகி அறியாத அந்த இனத்தவர் மீது கொண்டிருந்த வெறுப்புணர்விலிருந்து அவன் விடுபடுவதை உணர்ந்தான். மறுநாள் ஒன்று கூடலில் நடந்த சம்பவங்கள் மேலும் அந்த உணர்வுகளுக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்தது.

மறுநாள் அந்த மண்டபத்துக்குள் நுழையும் போதே "ஏதாவது நடக்கலாம்" என்ற தந்தையாரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தாலும், அவனுக்குள் எழுந்த அந்தப் புதிய உணர்வுக்கு தென்பையும் தெளிவையும் தருகின்ற வரவேற்புரைகள், இசைப்பாடல்கள் என நிகழ்ச்சிகள் தொடர்ந்த போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

மண்டபத்தின் பின் புறம் எழுந்த உரத்த கோசங்களும் வாக்குவாதங்களும் ஒலிபெருக்கியின் ஒலியையும் மீறி எழ மண்டபத்தை நிறைத்திருந்த மக்களிடையே சிறு பதற்ற நிலையைத் தோற்றுவித்தது. மேடையின் முன்புறம் இருந்த சிங்கள இளைஞர்கள் சிலர் வேகமாக பின்புறம் விரைந்தனர். இரவு வரவேற்பு நிகழ்வில் குளிர்பானம் வழங்கிய ஒரு இளம் பெண்ணும் சுத்தியலை கையில் எடுத்து இடுப்பில் மறைத்துக் கொண்டு கோபத்துடன் விரைந்து சென்றதை ரமேஸ் அவதானித்தான். அது அவனது ஊரில் உள்ள பெண்போராளிகளை நினைவூட்டுவதாக இருந்தது.

"அமைதியாக இருங்கள், உங்களது இருக்கைகளில் அமருங்கள், அது ஒரு சிறிய சலசலப்புத்தான் அதை எமது தோழர்கள் பார்த்துக் கொள்வார்கள், அமைதி யாக உங்கள் இருக்கைகளில் அமருங்கள்."

நிகழ்ச்சியை குழப்பவிடாமல் தடுப்பதற்காக மண்டப மேடையில் நின்று ஏற்பாட்டாளர்களில் ஒருவர் ஒலிபெருக்கியில் வேண்டுகோள் விடுத்தார். ரமேஸ் தனது சொந்த அனுபவத்தின் மூலம் அந்த ஒன்று கூடலின் உயர்வான நோக்கைப் புரிந்து கொண்டு அதைக் குழப்ப முனைந்தவர் மீது மிகுந்த வெறுப்படைந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

“தயவு செய்து இருங்கோ, அவங்கடை நோக்கத்துக்கு நாங்கள் இடம் கொடுக்கக் கூடாது. தயவு செய்து இருங்கோ”

இருக்கையிலிருந்து எழுந்து நிற்பவர்களையும், எழுந்து செல்ல முயல்பவர்களையும் ரமேஸ் அமைதிப்படுத்தி அமரவைத்தான்.

“பேரினவாதம் ஒழிக, தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமை வாழ்க”

இரவு அவர்களுக்கு உணவு இருப்பிட வசதிகள் செய்வதில் முன்னின்ற சிகப்பு ரீசேட் அணிந்த ஒரு சிங்கள இளைஞன் மண்டப வாசலில் இருந்த கதிரை ஒன்றின் மீது ஏறி ஏனைய தோழர்களுடன் இணைந்து ஆவேசத்துடன் சிங்கள மொழியில் உரத்தகுரலில் வெளிப்படுத்திய சுலோகங்களுடன் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

மண்டபத்துக்கு வெளியே நடைபெற்ற மோதலில் ‘சிஹல உறுமய’வினரின் காடைத்தனத்தை எதிர்கொண்டு கத்திக் குத்துக்கும் பொல்லடிகளுக்கும் இலக்காகி காயமடைந்த மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர் கூறிய போது ரமேஸ் உணர்ச்சி வசப்பட்டது போலவே மண்டபத்தில் கூடி இருந்த அனைவரும் சமாதானத்துக்கும் இனங்களின் ஒற்றுமைக்காகவும் இரத்தம் சிந்திய அந்த இளைஞர்களை நினைவு கூர்ந்தனர். இரவு ரமேஸ் தங்கியிருந்த விடுதியில் தொலைக்காட்சிச் செய்தியிலும் மறுநாள் பத்திரிகைகளிலும் மண்டபத்துக்கு வெளியே நடந்த மோதலின் போது எடுக்கப்பட்ட காட்சிகளைப் பார்த்திருந்தான். பஸ்ஸில் அவன் சந்தித்த அந்த சிங்கள இளைஞன் முதல் அந்நிகழ்ச்சியை குழப்பவிடாமல் தடுப்பதற்கு முன்னின்ற அந்த இளைஞர்களின் செயல்கள் யாவும் ஆழமான மனித உணர்வுகளின் வெளிப்பாடாக அவனுகுப் பட்டது. அத்தகைய உயர்ந்த உணர்வை ஏற்படுத்த வகைசெய்யும் அந்த நிகழ்ச்சியை எதிர்ப்பதில் பௌத்த பிக்குகள் பலரும் இணைந்திருந்தது ரமேசுக்கு வியப்பாக இருந்தது.

இறுதிநாள் நிகழ்ச்சிகள் முடிந்ததும் அந்த ஏற்பாட்டாளர்களிடம் விடை பெறுவதற்காக பலர் கூடி நின்றனர் பொதுவாக இத்தகைய நிகழ்ச்சிகளில் கூச்ச சுபாவத்துடன் ஒதுங்கிக்கொள்ளும் ரமேசும், உணர்வுபூர்வமாக கைகளைக் கொடுத்தும் கட்டி அணைத்தும் விடை பெறுபவர்களுள் ஒருவனாக நின்றான். ரீசேட் அணிந்த ஒரு இளைஞருக்கு கைகொடுத்து விட்டு, தமிழ் தெரிந்த அந்த ஏற்பாட்டாளரிடம் கைகளை நீட்டி “உங்களது நல்ல முயற்சிக்கு நன்றி” என ரமேஸ் கூறியபோது முன்பின் பழகி அறியாத இருவரும் உணர்வு மேலீட்டால் கட்டியணைத்து விடை பெற்றுக்கொண்டதை நினைவுபடுத்திப் பார்த்தான்.

“ரமேஸ் நான் இறங்கப்போறன்”

பயணப்பையைத் தோழில் மாட்டிக்கொண்டு அவனது இருக்கைக்கு அருகே வந்துநின்ற ரவியின் வார்த்தைகள் ரமேசின் நினைவோட்டத்தைக் குலைக்க சந்தேகத்துடன் பஸ்ஸின் ஜன்னலுக்கூடாக வெளியே அவதானித்தான் ரமேஸ். மாம்பழம் சந்திக் காவலரண்களை பஸ் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அவனோடு யாழ்நகரில் இறங்கி திருநெல்வேலிக்குச் செல்லவேண்டிய ரவி இடையில் ஏன் இறங்குகிறான் என்ற கேள்வி அவனுள் எழுகிறது.

“ஏன் ரவி இதிலை இறங்கிறீர்”

“இஞ்சைதான் இப்ப வீடு எடுத்திருக்கிறம், அந்த வீட்டைத் திருத்திப்போட்டு கூடின வாடகைக்கு குடுக்கப்போகினமாம்”

“உங்கடை சொந்தக்காறற்றை வீடுதானே அது?”

“சொந்தமும் பந்தமும், எல்லாம் பண உறவுகள்தான் ரமேஸ்”

தெல்லிப்பளையில் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டுவிட்ட அவனது வீட்டைவிட்டு வெளியேறி பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. மா, பலா, வேம்பு, விழாத்தி, இலுப்பை, இலந்தை என பசுமரச்சோலையாகவே இருந்த பெரிய வளவோடு கூடிய அவனது வீட்டு நிலத்துடன் அவனுக்கு இருந்த இனிய நினைவுகளை ரமேசுடன் அவன் பலமுறை பகிர்ந்து கொண்டிருக்கிறான். இடப்பெயர்வுக்குப் பின் நிரந்தரமாக ஓரிடத்தில் இருக்கமுடியாத நிலையில் அவனது குடும்பம் அலைந்தது. இது ஆறாவது இருப்பிடமாக இருந்தது. அவனது இளமைக் காலம் முழுவதும் இப்படியே கழிந்ததால் அவனது வார்த்தையிலும் வெளிப்பட்ட வெறுப்பும் சோகமும் ரமேசின் மனத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

“அது இருக்கட்டும் ரமேஸ், சஞ்சிகை இனி வராதோ எண்டு கேக்கிறாங்கள், கதை எப்ப தாறீர்?”

“இந்தக் கிழமைக்கை எப்பிடியும் தாறன், நடந்த கதைதான்”

“அதுதான் நல்லது, கெதியாத் தந்தாச் சரி, அந்தா அதுதான் ரமேஸ் வீடு... அண்ணை அந்தக் கேற்றடியிலை நிப்பாட்டுங்கோ... எல்லாருக்கும் போட்டுவாறன்”

மிதிபலகையில் நின்றபடி எல்லோருக்கும் கையசைத்துக் கூறிவிட்டு அவசரமாக இறங்குகிறான் ரவி.

தெருவோரத்து வீடுதான். ஆனால் ஷெல்லினால் பாதிக்கப்பட்ட ஒருபகுதி இன்னும் திருத்தப்படாமலே இருக்கிறது. அதுவும் திருத்தப்படும்போது....

மீண்டும் ரமேசின் மனதில் ஏற்படும் இறுக்கம் அவனது முகத்தில் வெளிப்படுகிறது. அது ஒரு ஆழமான புரிதலுடன் மட்டுமல்ல, தெளிதலுடனும்.



படிப்பகம்

www.padippakam.com

## கல்லெறிந்து கொண்டுதான்...

என் மனதில்
கல்லெறிந்தது நீதான்
ஜன்னிக்கும் போது
வெள்ளைப் பளிங்காய்
என் உள்ளம்
உடலாலும் உள்ளத்தாலும்
நான் வளர வளர
சமுதாயமே
பளிங்கான என் மனதில்
நீதானே கல்லெறிந்தாய்

ஓ! அன்று
பேதமற்று கள்ளங்கபடமற்று
என் மனது
இன்றோ இரும்புப் பிடிக்குள்
அதற்கு காரணம் நீதான்.
விழுமியங்களை உணர்த்தல்
உன் கடப்பாடு.
ஆனால் நீதான்
சுரண்டலையும்
அநாகரிகத்தையும்
விலங்குணர்வுகளையும்
என் பளிங்கு மனசுள்
உட்செலுத்தினாய்

உன்னால்த்தான்
சாக்கடையாகி விட்டதை
உணர்ந்த நான்
போராடி போராடி
என்மனதை
பளிங்காக்கிக் கொண்டு...
நீ எப்பொழுது
திருந்த உத்தேசம்
அல்லது கல்லெறிந்து
கொண்டு தான்...

வனஜா நடராஜா

## புத்தகப்பண்பாட்டுத் திருவிழா

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 30வது ஆண்டு நிறைவாக இலங்கை எழுத்தாளர்களின் 'புத்தகப் பண்பாட்டுத் திருவிழா' கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 2003, மார்கழி 29 முதல் 2004 தை 04 வரை சிறப்பாக நடந்தேறியது. ஈழத்து எழுத்தாளரின் நூல்கள் கண்காட்சி இலங்கையில் முதல் தடவையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தினந்தோறும் நூல்கள் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. கவிஞர் சுபத்திரன் அரங்கில் கவிதை நூல்கள் அறிமுகமும் பா.சத்தியசீலன் அரங்கில் பிள்ளை இலக்கிய நூல்கள் அறிமுகமும் யோ.பெனடிக்ற்பாலன் அரங்கில் சிறுகதை நூல்கள் அறிமுகமும் பொன்.கந்தையா அரங்கில் அரசியல் நூல்கள் அறிமுகமும் ஏ.ரி.பொன்னுத்துரை அரங்கில் நாடகநூல்கள் அறிமுகமும் க.கைலாசபதி அரங்கில் திறனாய்வு நூல்கள் அறிமுகமும் நிகழ்ந்தமையும் இதில் இளைய தலைமுறையினர் பங்கெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான இலங்கை எழுத்தாளர் புத்தகக் கண்காட்சி வருடந்தோறும் நடாத்துவதோடு இதனை வடக்கு கிழக்கு மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்படுவதும் அவசியமாகும்

## மட்டக்களப்பில் 'தாயகம்' கிடைக்குமிடம்

வாசகர்கள், விற்பனையாளர்கள் மட்டக்களப்பில் 'தாயகம்' இதழ்களை பெற்றுக்கொள்ள 'சுவைத்திரள்' நகைச்சுவைச் சஞ்சிகை அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகள்:
திக்கவயல் சி.தர்மு
சுவைத்திரள்
கவிதேசம்
481, பார் வீதி,
மட்டக்களப்பு.


படிப்பகம்

www.padippakam.com

சமூக நிறுவனங்களும்
சமூகச் செயற்பாடுகளும்




# பொன்விழாக் காணும் ஆத்திசூடி, கலைமகள் சனசமூகநிலையம்

-ஊரோடி

யாழ்நகரின் வடக்கில் கந்தர்மடம் ஆத்திசூடிப் பகுதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையம் கடந்த 2003, டிசம்பர் 28ம் திகதி தன் பொன் விழாவை சிறப்பாக நடத்தியது. யாழ். பல்கலைக் கழகம் உட்பட பல கல்வி நிறுவனங்கள் சூழ அமைந்துள்ள இந்நிலையம் இப் பகுதி மக்களின் கல்வி கலை பண்பாட்டு வளர்ச்சியில் சிறப்பான பங்கை வகித்து வநதுள்ளது.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் (1953ம் ஆண்டு) இவ்வூர் இளைஞர்கள் பெரியவர்களின் முயற்சியால் இந்நிலையம் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஓலைக்கொட்டிலாக இருந்த இந்நிலையம் படிப்படியாக வளர்ச்சிகண்டு பொன்விழா நினைவாக அமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டிடம், பின்புறத்தில் கேட்போர்கூடம் என விரிவடைந்து அழகுறக் காட்சி தருகிறது.

இதன் ஆரம்ப கால வளர்ச்சியில் பல அறிஞர்கள் அக்கறை கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவராக இவ்வூரின் அயல்பகுதியில் வாழ்ந்த பொதுவுடைமைவாதியும், அறிஞருமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்களைக் குறிப்பிடலாம். இந்நிலையத்தின் கீழ் மாதர்சங்கம், கலைக்குழு, விளையாட்டுக்கழகம் போன்ற பல அமைப்புக்களை ஏற்படுத்தி பல்வேறு பணிகளை முன்னெடுத்து வந்தனர். கலை இலக்கிய நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், ஊர்மக்களுக்கு தொழில் வாய்ப்பைத் தரும் கைத்தொழில் முயற்சிகள் என இப்பணிகள் பலவாக அமைந்தன. இந்நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட இசை, நாடக, இலக்கியப் போட்டிகள், விளையாட்டுப்போட்டிகளில் இளைஞர்கள், பெண்கள், மாணவர்களை பங்கொள்ளவைப்பதன் மூலம் ஆளுமை மிக்கவர்களாக அவர்களை உருவாக்க இந் நிலையம் உதவிவந்துள்ளது.

இச்செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதில் நவலியூர் செல்லத்துரை, கிங்ஸ்லி செல்வம், மறைந்த நாடகக் கலைஞர் ஜெயக்குமார், சோ. தேவராஜா, க. தணிகாசலம், ஆகியோரின் பங்கும் குறிப்பிடத்தக்கது. 'தாயகம்' கலை இலக்கிய சஞ்சிகையின் ஆரம்ப இதழ்கள் ஆத்திசூடி முகவரியிலிருந்தே வெளிவந்தது. இக்கலைமகள் சனசமூகநிலைய இளைஞர்கள் தமது ஊர்மக்களின் நலன்களில் மட்டும் அக்கறை கொண்டவர்களாக மட்டும் நின்றுவிடாமல் நிலப்பிரபுத்துவ சாதிய ஒடுக்குமுறை, ஆதிக்க அரசியல் போன்றவற்றை தகர்த்தெறியும் முயற்சியிலும், சமூகவிடுதலை, மற்றும் புதிய பண்பாட்டு அறிவியல் விழிப்புணர்வை வளர்ப்பதிலும் பெரும் அக் கறை கொண்டிருந்தனர். குறிப்பாக அறுபதுகளில் நடந்த சமூகவிடுதலைக்கான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டத்தில் இந்நிலைய இளைஞர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன்மூலம் அரச ஒடுக்குமுறைகள், இன்னல்களை எதர்கொள்ள வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டபோதும் இத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிரான செயற்பாடுகளில் இவர்கள் சோர்வடையாது முன்னின்றனர். இதுபோன்றே தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதரான போராட்டத்திலும் – யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு உலர் உணவு, ஆடைகள் போன்றவற்றை சேகரித்து வழங்குதல், காயமுற்றவர்களுக்கு இரத்த தானம் செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளிலும் இந்நிலையம் தனது பங்கை ஆற்றியது.

இவ்வாறு பல்வேறு பணிகளைச்செய்து ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பொன் விழாக் காணும் இக்கலைமகள் சனசமூக நிலையம் தொடர்ந்தும் தனது பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து மக்களின் கல்வி, கலை பண்பாட்டு வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்கள் சமூக அரசியல் விழிப்புணர்வுடன் சுதந்திரமும், சுபீட்சமும் நிறைந்த ஒரு வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்ளவும் உதவும் ஒரு நிலையமாக தனது பணியை தொடர விழைகிறது.

*



படிப்பகம்

www.padippakam.com

# கல்லானாலும் கணவன்

'மணி'

நான் இந்த வீட்டில் தான் வேலை செய்யிறன். கொஞ்சம் போல படிச்சன். கலியாணம் எண்டு வந்தது. அதோட படிப்புச் சரி. ``பெண்பிளையளுக்குப் படிப்பென்ன, உத்தியோகம் பாக்கவோ`` எண்டு எல்லாருமாச் சொல்லி, இந்த ஆளுக்குக் கட்டிக் குடுத்தினம். அதோட அவையளுடைய கடமை முடிஞ்சுதெண்டு அவையளுக்குத் திறுத்தி. பெம்பிளைப் பிள்ளையை வீட்டால கழட்டி விட்டால் பொறுப்பு முடிஞ் சுது. நான் படுகிற பாட்டை ஆரிட்டைச் சொல்ல!

மெய்மெய்யா இந்த மனிசன் ஆகலும் பிழையில்லை. கொஞ்சம் குடிக்கும். கொஞ்சமென்ன், நல்லாக் குடிக்கும். குடிவெறி இல்லாத நேரம் தங்கமான மனிசன். தண்ணி மெத்திப்போனா வேற கதை. சிலநேரம்.. இல்லை, கிட்டத்தட்ட எப்பவுமே கண்மண் தெரியாமல் என்னை மொத்திப்போடும். என்னை அடியாத நேரம் அன்பாத்தான் இருக்கும். குடிக்க காசு தேவையெண்டா வலும் அன்பா இருக்கும். காசை வாங்கிக்கொண்டு குடிக்கப் போனபிறகு கதை வேற.

எங்களுக்குப் பிள்ளையள் இல்லை. இருந்தா ஆறுதலா இருக்கும் எண்டு நினைக்கிறனான். இந்த மனிசன்ட அடியை நினைச்சால் ஒரு வழியில பிள்ளையள் இல்லாததும் நல்லது எண்டுதான் நினைக்கிறன். இருந்தால் என்னோட சேர்ந்து அதுகளுக்கும் நித்திய பூசை விழும். ஒரு வேளை இந்தாள் திருந்தியும் இருக்கும். ஆர் கண்டது!

துவக்கத்தில சம்பளத்தோட உத்தியோகம் பாக்கேக்க குடியும் அளவோட இருந்தது. என்ன நடந்ததோ தெரியாது. குடியும் கொஞ்சங் கொஞ்சமாக் கூடிப்போச்சு. சினேகிதரால் தான் பழுதாப் போனார் எண்டு சொல் லிச்சினம். சினேகிதர்களின்ட ஆக்களக் கேட்டா இந்த மனிசனால தான் அவையள் பழுதாப்போயினம் எண்டு சொல்லுவினமாக்கும். பிறகு வேலையும் இல்லாமப் போச்சு. குடியாலதான் எண்டு சொல்லிச்சினம். கொம்பனி நட்டத்தில ஓடினதால எண்டுஞ் சொல்லிச்சினம். எதை நம்பிறது! எண்டாலும் அங்கை இங்கை ஓடி நாலுகாசு உழைச்சுக்கொண்டு வரும். பிறகு அதுவுங் குறைஞ்சு போச்சு. வீட்டுச் சிலவுக்கு காசு கேக்காமலும் ஏலாது. கேட்டாலும் விழும். வீட்டுச் சிலவுக்கு இல்லாட்டியும் சாராயச் சிலவுக்கு மட்டும் எப்பிடிக் கிடைக்குதெண்டு ஒருநாள் கேட்டுப் போட்டன். விழுந்த அடிக்குப்பிறகு அந்தக் கதையையே எடுக்கிறதில்லை. நானா எதையும் உழைக்கிறது தான் வழியெண்டு முடிவு பண்ணினன்.

கொஞ்சங் கூடப் படிச்சிருந்தனெண்டா ஒரு வேளை காசு நல்லா உழைச்சிருப்பன். உழைச்சுக்கொண்டு வந்து தான் என்ன! அதையுஞ் சாராயக்கடைக்குக் கொண்டுபோய்க் குடுத்துப்போட்டு வரும். அதோட அது ஆம்பிளை. ஒரு பொம்பிளையல்லோ உத்தியோகம் பாத்து உன்னைக் காப்பாத்திறா எண்டு ஆரேன் சொன்னாலும் எல்லாம் பிழையாப்போம். காசு போறதும் பத்தாமல் அதுக்குஞ் சேர்த்தல்லோ வாங்கித்தெளிய வேணும்.

`டிவோஸ் எடடி` எண்டு அக்கா சொன்னவா. ஒரு நாள் யோசியாமல் இந்த மனிசனிட்ட அக்காவும் அப்பிடிச் சொல்லிறா எண்டு சொல்லிப்போட்டன். அடுத்தமுறை அக்கா என்னைப் பாக்க வந்த நேரம், இந்த மனிசன் போட்ட சத்தத்தில அவ நடுங்கிப் போயிட்டா. இனி அவ இந்தப் பக்கம் காலடி வைக்கப் பிடாது எண்டு சொல்லிக் கட்டளை. அவவும் வரேல்லை. அவவுக்கு என்ன விசரா? நான்தான் போறனான். எண்டாலும் டிவோஸ் கதை பிறகு ஒரு நானுங் கதைக்கேல்லை.

அக்கா ஆரெண்டு சொல்ல மறந்திட்டன். அவ சொந்த அக்கா இல்லை. சொந்தமும் இல்லை. நான் வேலை செய்யிறது அவவின்ட வீட்டில தான். துவக்கத்தில அம்மா எண்டுதான் கூப்பிடுவன். அப்பிடிக் கூப்பிடுறது வடிவில்லை எண்டு அவ தன்னை மடம் எண்டு கூப்பிடச்சொன்னா. நான் `மடம்`, `மடம்`, `மடம்` எண்டு கூப்பிடத் துவங்கினதோட, அவ `ஐயோ, வேணாம். அக்கா எண்டு கூப்பிடு` எண்டு சொல்லிப்போட்டா. அவ்வின்ட ஆளை சேர் எண்டுதான் இன்னமுங் கூப்பிடுறன். அது பிழையில்லைப் போல.

சேரும் அக்காவும் சண்டை பிடிப்பினந்தான். எண்டாலுஞ் சேர் இந்த மனுசன் மாதிரிக் கை நீட்டமாட்டார். முதலில் அக்காவுக்குப் பயம் எண்டு தான் நினைச்சன். பிறகுதான் மரியாதை எண்டு விளங்கிச்சுது. அக்காவும் ஆரும் தனக்குக் கைநீட்டாத மாதிரி நடந்து கொள்ளுறதாலயாயும் இருக்கும். சத்தமாச் சண்டை



படிப்பகம்

www.padippakam.com

**"ஆணும் பெண்ணுஞ் சமமெண்டா, ஏழை மனிசியும் ஏழை மனிசனும் சமம். காசுள்ள மனிசியும் காசில்லாத மனிசனும் சமமோ? காசில்லாத மனிசியும் காசுள்ள மனிசனும் சமமாவினமோ? பெரிய உத்தியோகம் பாக்கிற பெம்பிளையளெல்லாம் எங்களை ஆண் பெண் வித்தியாசமில்லாமல் தூசாத்தானே மதிக்கினம்."**

பிடிப்பினம். பிறகு கொஞ்ச நேரம் கதையே இராது. அதோட சரியாப்போம்.

அக்கா பெண்ணிலைக்காறி எண்டு சொல்லுகினம். சிலருக்கு அவவை அறவே பிடியாது. சிலருக்கு நல்ல விருப்பம். பல மாதிரி ஆக்களும் இங்க வந்து போவினம். பெரும்பாலும் பெம்பிளையள் தான். சில பேர் தங்கட பிரச்சினையளோட வருவினம். மற்றவை கனநேரமா இருந்து பலதுங் கதைப்பினம். சில கதையள் கேக்க முசுப்பாத்தியாகவும் பிரயோசனமாகவும் இருக்கும் சில நேரத்தில எல்லாங் குழப்பமா இருக்கும்.

அண்டைக்கு ஒரு நாள் நாலைஞ்சுபேராக் கூடி ஆணும் பெண்ணும் எப்பிடிச் சமமாச் சீவிக்க வேணும் எண்டு கதைச்சினம். நடுவில உச்சிக் கொண்டை கட்டின ஒரு ஸ்ற்றைலான பெம்பிளை `ஆணும் பெண்ணும் சமமா ஒண்டாச் சீவிக்கிற மாதிரிச் சமமான ரெண்டுபேர் ஒண்டாச் சீவிக்க உரிமை இருக்க வேணும்.` எண்டு சொன்னா. முதலில அது எனக்கு விளங்கேல்லை. பிறகுதான், அவ பெண்ணும் பெண்ணுமோ, ஆணும் ஆணுமோ புருசன் பெஞ்சாதி மாதிரிச் சீவிக்கிறதைத் தான் சொன்னா எண்டு விளங்கிச்சுது. அதுக்குள்ள தலையைக் குறோப் பண்ணின பெம்பிளை, `கலியாணமே தேவையில்லை எண்டு சொல்லுற நாங்கள் பிறகு ஏன் கலியாணக் கதை கதைக்க வேணும்?` எண்டு கேட்டா. அதுக்கு, உச்சிக் கொண்டை வைச்சவ மேற்கு நாடுகளில எல்லாம் அதுதான் நர்கரிகமாகி வருகுது எண்டு விளக்கஞ் சொன்னா. அங்க செய்யிற எல்லாம் இங்கையுஞ் செய்ய வேணுமா எண்டு கனநேரமாக் கதை நடந்துது. அதால நான் வீட்ட போகவும் பிந்திப் போச்சுது. வீட்டில நடந்ததை நான் சொல்லாமலே அறிவியள் தானே.

அந்த ஊர்களில எல்லாம் இப்ப கலியாணம் முடியாமல் கூடி இருந்து பிள்ளையளும் பெத்து வளப்பினமாம். சில நேரம் பிரிஞ்சும் போவினமாம். டிவோஸ் எடுக்கிற கோட்டு வழக்குச் சிலவு இல்லை. பிள்ளையளின்ட நிலைமை என்ன எண்டு யோசிச்சன். முடிச்சு டிவோஸ் எடுத்தாலும் அதே கதைதானே! எடாமல் சண்டை பிடிச்சுக் கொண்டிருந்தா மட்டும் என்ன நன்மையோ?

இப்பிடி ஒரு கூட்டத்துக்குப் பிறகு சேருக்கும் அக்காவுக்கும் நடுவில பெரிய வாக்குவாதம். இந்த மாதிரி நடந்தால் பெம்பிளையளுக்குத்தான் நட்டம் எண்டு சேர் சொன்னார். `நீர் ஒரு முழு ஆணாதிக்கப் பண்டி` எண்டு அக்கா இங்கிலீசில திருப்பி அடிச்சா. சேர், ``இந்த மாதிரி எல்லாங் கதைச்சா என்னால ஏலாது.`` எண்டு எழும்பிப் போட்டார். டிவோஸில போய்த்தான் முடியுமோ எண்டு நினைச்சன். இந்த மாதிரிச் சண்டை பிடிக்கிற ஆக்கள் தனித்தனியா இருந்தாச் சினேகிதமா இருப்பினம். ஒண்டா இருந்தாத்தான் சண்டை வலுக்கும் எண்டுதான் நினைச்சன். எண்டாலும் பிறகு ஒத்துமையாப் போயிட்டினம்.

இன்னொருநாள், சமுதாயத்தில ஆம்பிளையளுக்கு உள்ள வசதியள் பெம்பிளையளுக்கு இல்லையெண்டு இன்னொரு அக்கா சொன்னதைக் கேட்டுப் போட்டு, அந்தத் துணிவில எண்ட சம்பளத்தைக் கூட்டித்தரச் சொல்லி அக்காவிட்டக் கேட்டன். சேரிட்டைக் கதைச்சுத்தான் சொல்லேலும் எண்டா. பிறகு அவவுஞ் சொல்லேல்லை. நானுங்கேக்கேல்லை. இந்த இடத்திலும் மரியாதையான வேற இடங்கிடைக்கிறதுங் கஷ்டம். எங்கையும் வீட்டு வேலைக்காறருக்கு என்ன சம்பளம் கிடைக்கும்? சம்பளங் கூட எடுத்தென்ன, இந்த மனிசன் குடிச்சுத் தள்ளும் எண்டுபோட்டுப், பேசாமல் விட்டிட்டன்.

பிறகொருநாள் ஒரு படிச்ச பெம்பிளை வந்தா. உயர்பதவியில உள்ள பெம்பிளையளின்ட தொகை பத்தாது எண்டு அக்கான்ட ஆலோசனை கேக்க வந்தாவாம். அக்கா, இது பொதுவான பிரச்சினை எண்டதால எல்லாருக்குஞ் சேர்த்துத் தீர்மானம் எடுத்துச் சண்டை பிடிப்பம் எண்டா. வந்தவவுக்கு அது பிடிக்கேல்லை. ஒவ்வொருவருடைய பிரச்சினையுங் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் எண்டபடியாத் தனித்தனியாத் தான் எடுத்து வழக்காட வேணும் எண்டா. அக்கா யோசிப்பம் எண்டு சொன்னா.

கொஞ்ச நாளில அந்தப் பெம்பிளை திரும்பவும் வந்தா. அக்கா தனிப்பட்ட ஆக்கள் பதவியளைப் பெற வேண்டிச் சங்கத்தைப் பாவிக்க விடமாட்டன் எண்டு கண்டிப்பாச் சொல்லிப்போட்டா. வந்தவ விசுக்கிக்கொண்டு எழும்பிப் போயிட்டா. அக்காவுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியாப்போயிட்டுது. அப்பதான் சேரும் வர, அக்கா கதை முழுதையும் அவரிட்ட அவிட்டுக் கொட்டிப் போட்டா.

வந்த ஆள் கஸ்ற்றம்ஸில வேலை. இண்டுவரையும் அங்கை உயர் அதிகாரியளில ஒரு பெம்பிளையும் இல்



படிப்பகம்

www.padippakam.com




## நினைவுள் மீள்தல்

கவிதை நூல்

ஆக்கம் : தானா விஸ்ணு

யுத்தத்தை வெறும் அழிவாகவோ சிதிலங்களாகவோ காணாது அதனைப் பற்றிய ஆழமான தீர்க்கம் நோக்கிய பார்வை இவரது கவிதைகளில் உண்டு

விலை : ரூ.75.00



## ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்

கவிதை நூல்

ஆக்கம் : கருணாகரன்

இதிலுள்ள பெரும்பாலான கவிதைகள் யுத்தத்தை நாங்கள் எதிர்கொண்ட வாழ்க்கைச் சூழலிலிருந்தும் வாழ்நிலைகளிலிருந்தும் எழுதப்பட்டவை.

விலை : ரூ.70.00

லையாம். அதில, ஒரு பெண் உயர் அதிகாரிப் பதவி உண்டாக்கப்படவேணும் எண்டு சண்டை பிடிக்கக் கேட்டாவாம். அக்காவுக்குச் சரியான கொதி. சேர், `அப்ப அவ தான் அந்தப் பதவிக்குக் கியூவில முன்னுக்கு நிக்கிறா எண்டு சொல்லும்` எண்டு சாத்திரம் பாத்த மாதிரிச் சொல்ல, அக்காவுக்கு ஒரு பக்கம் தன்ட மனிசன் சரியாச் சொல்லிப்போட்டுது எண்ட சந்தோசம். மற்றப்பக்கம் தங்களை நக்கலடிக்கிறார் எண்ட நினைப்பில கோவம்.

`உங்களின்ட ஆம்பிளையளின்ட தொழிற் சங்கங்களிலை இப்பிடி மற்றவையளைப் பாவிச்சுத் தங்களை வளர்க்கிறவை இல்லையோ?` எண்டு ஆத்திரமாக் கேட்டா. சேர் ஒண்டும் பேசேல்லை. கோவிச்சமாதிரியும் தெரியேல்லை. அந்தப் பொம்பிளையும் பிறகு வரேல்லை.

அக்காவுக்கு நல்ல மனந்தான், எண்டாலும் பெம்பிளையளின்ட பிரச்சினை எண்டு அவ நினைக்கிறதெல்லாம் கொஞ்சம் படிச்ச, வசதியான ஆக்களின்ட அலுவல்களாத்தான் தெரியுது. எப்பவேன் எங்கள் தரவழியளின்ட பிரச்சனையளைப் பற்றிக் கூடிக் கதைச்சாலும், ஒண்டுஞ் செய்யிற மாதிரித் தெரியேல்லை. ஆம்பிளை பெம்பிளைப் பிரச்சினை எல்லா இடமும் ஒரேமாதிரியாகவோ இருக்குது? ஏழைப்பட்ட பெம்பிளையளுக்கு எல்லாப் பக்கத்தாலும் இடி. இது ஏன் இவைக்கு விளங்க மாட்டனென்குது. காசு உள்ளவை இல்லாதவை, சாதி வித்தியாசம், சிங்களவர் தமிழர் எண்டெல்லாம் பிரச்சினைப்படேக்கை அதையெல்லாம் விட்டுப்போட்டுக் கொஞ்சம் வசதியானவையிண்ட பிரச்சனையளை மட்டுந்தானே திரும்பத் திரும்பக் கதைக்கினம்.

ஆணும் பெண்ணுஞ் சமமெண்டா, ஏழை மனிசியும் ஏழை மனிசனும் சமம். காசுள்ள மனிசியும் காசில்லாத மனிசனும் சமமோ? காசில்லாத மனிசியும் காசுள்ள மனிசனும் சமமாவினமோ? பெரிய உத்தியோகம் பாக்கிற பெம்பிளையளெல்லாம் எங்களை ஆண்பெண் வித்தியாசமில்லாமல் தூசாத்தானே மதிக்கினம்.

நாங்களும் இதெல்லாம் எங்கள் எங்களின்ட தலை விதி எண்டு நினைச்சு எங்களைச் சமாதானப் படுத்திக்கொள்ளுறம். கடவுளிட்டையும் வேண்டிக் கொள்ளளுறம். கும்பிடாத கோயிலில்லை. அந்தோணியார் கோயிலுக்குக்கூட இந்த மனிசன் குடியாமல் விட்டாத் தவறாமல் மெழுகுதிரி கொழுத்துவன் எண்டு நினைச்சிருக்கிறன்.

மெய்மெய்யா எனக்குள்ள தலையிடி இந்த மனிசன் என்ட உழைப்பையெல்லாங் குடிச்சுப் பாழாக்கிப்போடுது எண்டதில்லை. நான் காசு குடுத்தாலுங் குடிச்சுப்போட்டு அடிக்குது. குடியா விட்டாலும் குடிக்கேல்லை எண்டு அடிக்குது.

உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும். ஆரேன் போய் இந்த மனிசனைப் புத்தி சொல்லிக் குடியாமல் நிப்பாட்ட ஏலுமோ? அது ஏலாவிட்டாலும் என்ன அடியாதை எண்டேனுஞ் சொல்லி நிப்பாட்ட ஏலுமோ?


படிப்பகம்

www.padippakam.com

# வெறியின் திரைவிலகும்

எனக்குள்ளே ஒரு அமைதி!
மானுடம் தொலைந்து போன
உன்னதத்தைத் தேடிய வலைவீச்சு
மதம் கடந்த மானுடத்தை நோக்கி!

மானுடம் உன்னை மனிதனாய் தான் மதிப்பது!
மனிதனாய் உன்னை நான் நினைப்பது!
இருவரிடையேயும்– ஒரு உணர்வு ரீதியான உறவு
இன்று உறங்கிப்போனது மானுடம்!

மதம் என்னவென்று சொல்வது!
நெறி என்பதா? இல்லை வெறி என்பதா?
வெறி என்பதே உங்கள் முகக்குறி தந்த அறிகுறி
ஆக வெறி கடந்த மானுடம் நோக்கி!

மதத்தின் உணர்வால் மறைவது– மமதை!
இன்று மதமதன் பெயரால்
வளர்வது மமதை!

ஒரு தாயின் பத்து திங்கள் கனவு
ஒரு மரபணுவின் தொடர் வரவு ஒரு உயிர்!
அந்த உன்னத உணர்வை நெறியதன் போர்வை
கொண்டு
உயிர்கள் உணவின்றி உழலும் நிலையில்
உடையின்றி அலையும் உலகில்
மதத்தின் நிழலில் குளிர்காய்வதா?

உழலும் ஒருவன் எம்மதமாயினும்
சங்கையின்றி சேவை செய்வோம்!
இதில் என்ன சிக்கல்?
வளர்ந்த நெறி எதுவாயினினும் தவிக்கின்ற வாய்க்கு
தாமதியாது தண்ணீர் கொடுப்போம்!
இது மானுடந்தானே!

மனிதா! முன்னை உன்னை மனிதனாய் நினை! மதி!
உலகே விரியும் உன் கண்ணில் மானுடமாய்
அப்போது
வெறியின் திரை விலகும்– உயர்
நெறியின் ஒளி பரவும்

பிரசன்னாவரூன்

# எச்சரிக்கை வேண்டும்

சிதறிக் கிடக்கும் இவ் வாழ்விடத்தில்,
மதமேறிய மதமெனும் மலையினின்று
மானுடத்திற்கு அழைத்துச் செல்லும்
வழிகாட்டிகளே தேவை இன்று.

இந்தியாவின் பாபர் மசூதியில் எரிந்த முகம்மதியர்
உடல் பார்த்த இந்துக்கள் சிந்திய கண்ணீர் மானுடம்
அந்நிலை கண்ட
இந்துக்களின் ஆரவாரம் அது மதம்.

அயோத்தியில் இரத்தத்தை
பூமிக்கிரையாக்கிய இந்துக்கள்
உடலை பார்த்த முகமதியன் வடித்த கண்ணீர் மானுடம்
அந்நிலை கண்ட முகமதியன் கண்ணில்
திரளும் ஆனந்தம் அது மதம்.
மதம் மீதான மதம்.

இப்படியாய் மறக்காது
மறக்கடிக்கப்பட்ட மானுடம்
பிறக்கும் போதும் இறக்கும் போதும்
சிவாயநமவா
அல்லாகூ
ஓ கர்த்தரே
பெருமைக்குரிய புத்தரே!
என்றெலாம் பெயர் பல கூறி
அடையாளம் காட்டிக் கொள்ளும் மதம்
மானுடத்தை மறந்திருக்க வைத்ததனால்
மதம் மீதான மதம் பற்றி
சிறு எச்சரிக்கை வேண்டும்

பொ.கோபிநாத்

கொழும்பில் தேசிய கலை இலக்கிய பேரவையினால் புதியவர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் வகையில் 'மதம் கடந்த மானுடத்தை நோக்கி' எனும் தலைப்பில் கவியரங்கம் இரா.சடகோபன் தலைமையில் நடாத்தப்பட்டது. அதில் ஒலித்த சில பகுகள் இங்கு 'பயில்நிலம்' எனும் பகுதியில் ஆங்காங்கே பிரசுரமாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கவரிமாவா? கவரிமானா?

அண்ணா இராசேந்திரம்

பொய்யில் புலவன் - செந்நாப்போதன்- திருவள்ளுவரின் குறள்களுக்கு தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு ஒவ்வொரு உரையாசிரியரும் உரை எழுதியுள்ளார்கள். உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் வெளிநாடுகள் பற்றிய அறிவு ஏதுமின்றி தாம் பிறந்து வாழும் சூழல், தாம் நம்பிக்கைகொண்டுள்ள மதக்கருத்துக்கள் போன்றவற்றின் அடிப்படையிலேயே குறள்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். ஒப்பீட்டு அடிப்படையிலோ திறனாய்வு அடிப்படையிலேயோ - வள்ளுவர் காலத்து நடப்பியல் படியோ உரை எழுதத் தவறிவிட்டார்கள். ஆதலால் வள்ளுவர் எதனைக் கூறினார் - எதற்காகக் கூறினார் போன்றவற்றைத் திறனாயாமல் எழுந்த மானமாக உரை எழுதிய உரையாசிரியர்கள் வள்ளு வரின் கருத்துக்களைக் 'கொலை' செய்துள்ளார்கள். அவற்றுள் சில குறள்களையும் உரையாசிரியரின் பொருந்தா உரைகளையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்" ( குறள் - 969)

வள்ளுவரின் கருத்தையே பெருங்கதையும் குறிப்பிடுகிறது.

"வான் மயிர் துடக்கில் தானுயிர்
வாழாப் பெருந்தகைக் கவரி" (35வது பாடல்)

மேற்படி குறளில் வரும் "கவரி" என்பது எத்தகைய விலங்கு? அது விலங்குக் கூட்டத்துள் "மான்" வகையைச் சேர்ந்ததா? அல்லவா? விலங்கியல் அடிப்படையில் அவ் விலங்கின் தன்மை யாது? போன்றவற்றை எல்லாம் நன்குணர்ந்துதான் வள்ளுவர் தம் குறளில் "கவரிமா" என்றே அவ்விலங்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கவரிமாவின் அதாவது கவரி என்ற விலங்கு எத்தகைய காலநிலையில் வாழ்கின்ற விலங்கு? அதன் உடலமைப்பு எத்தகையது? உலகத்தில் அல்லது இந்தியாவில் எங்கே வாழ்கின்ற விலங்கு போன்றவற்றை எல்லாம் நன்குணர்ந்துதான் வள்ளுவர் மேற்படி குறளில் அவ்விலங்கு பற்றி எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றையெல்லாம் நன்குணராத உரையாசிரியர்கள்- கிணற்றுத் தவளை மனப்பான்மையுடன் உரை எழுதிப்போனார்கள்.

"புகழ் பெற்ற உரையாசிரியர்" எனப் போற்றப்படுகின்ற பரிமேலழகர் கூறும் உரையாவது:- "தனது மயிர்த்திரளின் ஒரு மயிரைத் தானும் நீப்பினும் உயிர்வாழாக் கவரிமாவை ஒப்பார், மானம் எய்துங்கால் உயிர்நீப்பர்" என்பதாகும். திருக்குறளுக்கு உரை செய்தோர் ஆரம்பத்தில் பத்துப் பேர் என்று கூறுவர். அவர்களின் உரைகளின் அடிப்படை ஒன்றே.

"ஒரு மயிரை இழந்தாலும் கவரி விலங்கு உயிரை விட்டுவிடுமாம். மயிரை இழப்பதுடன் அதற்கு இழப்பால் ஏற்பட்ட மானம் [ரோசம்] இருக்கிறதே அதனாலேயே உடனடி யாகத் தனது உயிரை விட்டு விடுமாம்" என்பது உரையாசிரியர்களின் அறியாமைக் கருத்து. ஒரு மயிரை இழத்தலும் உயிரை விடுதலும் இரு வேறு நிகழ்வுகள். ஒரு மயிரை இழந்ததுமே மானம் ஏற்பட்டு ஒரு விலங்கு தனது உயிரை விடும் என்பது எந்தவொரு விலங்கியலாளரும் [zoologist] இன்றுவரை கூறாத கருத்து. உரையாசிரியர்கள் ஒரு மயிரில் மாத்திரம் பிடித்துக் தொங்கிக் கொண்டு நின்றார்கள்.

வள்ளுவர் கூறவந்த கருத்து யாது? "கவரி என்று பெயர் பெறும் விலங்கானது தனது உடலில் உள்ள மயிர்களை ஏறக்குறைய முற்றாக இழந்து விடுமானால் கடுங்குளிர் கால நிலையின் தாக்கத்தால் உயிர் நீங்கி விடும். அது போல் உயர்ந்த பண்பாளருக்கு மானத்தை இழந்து விடும் நிலை ஏற்படுமானால் உயிர்ப்பினை நீத்து இயற்கை எய்திவிடுவர்" என்பதாகும். வள்ளுவர் ஒரு போதும் "ஒரு மயிரை இழந்ததுமே கவரிக்கு மானம் 'பொதுக்கென' வந்து உயிர் விடும். அது 'ரோசம்' உள்ள விலங்கு" என்று கூறவில்லை. உரையாசிரியர், "மயிர் நீப்பின்" என்பதில் வரும் 'மயிர்' என்பதை ஒருமை என்று கருதியதால் இந்நிலை ஏற்பட்டது. 'கள்' விகுதி சேர்க்கப்படாததால் ஒருமை என்றே உரையாசிரியர்கள் கருதிவிட்டார்கள். 'உடுக்கை இழந்தவன் கைபோல்.....' என்பதில் 'கை' என்று ஒருமையிலேயே வள்ளுவர் கூறியுள்ளார். எனவே, இதனை ஒரு கையாலேயே ஒருவன் தனது இடுப்பிலிருந்து அவிழ்ந்து விழுந்த ஆடையை எடுத்து உடுப்பான் என்று கூறுவதற்கு ஒப்பாகும். ஒருபோதும், ஆடை இடுப்பிலிருந்து அவிழ்ந்து

அறிவியற்துறையில் ஈடுபாடுகொள்வோரிலும் பெரும்பாலானோர் சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கும் கருத்தியலை மீறி சிந்திக்கமுடிவதில்லை. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்று பழைய மரபுவாத எல்லைக்குள் நின்று மீண்டும் மீண்டும் சுழல்வதே அறிவியல் உலகின் விதியாக உள்ளது. இதனை மீறி மாற்றுக்கருத்துக்களை முன்வைப்போர் மிகச்சிலரே. அவர்களுள் ஒருவராக மறைந்த அண்ணா இராசேந்திரம் அவர்களைக் குறிப்பிடலாம். கந்தபுராண பாடல்களை விமர்சித்து `கந்தரசம்` என்ற நூலை எழுதிய இவர் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது முதலாண்டு நினைவாக அவரது இக்கட்டுரை பிரசுரமாகிறது.


படிப்பகம்

www.padippakam.com

விழுந்த பின்னர் எவரும் ஒற்றைக்கையால் மாத்திரம் [ஒற்றைக் கையரைத் தவிர] எடுத்து உடுக்க மாட்டார்கள். குனிந்து தம் இரு கைகளாலும் ஆடையை எடுத்து உடுத்து தம் மானம் காப்பர். எனவே கைகள் என்ற பொருளிலேயே வள்ளுவர் 'உடுக்கை இழந்தவன் கை' எனக் குறிப்பிட்டார். அது போலவே 'மயிர் நீப்பின்' என்ற தொடரில் வரும் 'மயிர்' என்பதை "மயிர்களை நீப்பின்" என்றே பொருள் கொள்ள வேண்டும்.

'கவரி' என்ற விலங்கு எத்தகையது? எங்கே வாழ்வது? அவ் விலங்கு நம் ஊர் மாடுகளை ஒத்த தோற்றமுடையது. ஆனால் திரட்சியான நீண்ட மயிர்களையுடைய விலங்கு. அது குளிர் மிகுந்த பனிப்பகுதியான இமாலயப் பகுதியில் வாழ்வது. திபேத்திய மொழியில் அதனை 'யாக்'-[சீகிரி] என அழைப்பர். பனிக்கட்டிகளை போர்வையாகக் கொண்ட இமயமலைப் பகுதியில் கடுங்குளிரிலிருந்து பாதுகாப்பாக வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தன்னைத் தயாரித்துக் கொள்வதற்காக `யாக்` விலங்கிற்கு நீளமானதும் திரட்சியானது மான மயிர்கள் உடலில் தோன்றின. `யாக்` என்ற கவரியையே வள்ளுவர் மேற்படி குறளில் எடுத்துக்காட்டியுள்ளார். மா என்றால் விலங்கு என்று பொருள்படும். அதனாலேயே 'கவரிமா' எனக் குறித்தார்.

வள்ளுவர் இக்குறளை எழுதும்போது இமய மலைப்பகுதியில் வாழுகின்ற மேற்படி விலங்கைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். அக்கவரிமா தனது உடலில் உள்ள மயிர்களை இழந்து விடவேண்டியநிலைக்கு வந்தால் கொடிய பனிக்குளிரினால் இறந்து விடும் என்பது ஓர் இயற்கை நியதி. இதுபற்றித் தெளிவான அறிவு வள்ளுவருக்கு இருந்தது. ஆனால் உரை எழுதிய ஆசிரியர்களுக்கு (?) தெளிவான கருத்து எதுவும் இருக்கவில்லை. பரிமேலழகர், அக்கிரகாரச் சூழலில் மாத்திரம் வாழ்ந்தவர். (உலகம் பற்றி விரிந்த அறிவும் அன்று இல்லை. அத்துடன் அவருக்கு உலகம் பற்றி சிந்திக்கும் அறிவும் இருக்கவில்லை.) வட இந்தியாவின் நிலயியல், காலநிலையியல் அங்கே வாழ்கின்ற உயிர் களின் வரலாறு போன்ற அறிவு அவருக்கு மிகவும் மத்திமம். அதனாற்றான் அவர் கவரிமானின் ஒரு மயிரில் பிடித்துத் தொங்கிக்கொண்டு நின்று திருக்குறளுக்கு உரை எழுதினார். ஏனைய உரையாசிரியர்களும் அதே ஒரு மயிரைத்தான் சிக்கெனப்பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டு நிற்கின்றார்கள். இன்றைய கல்லூரித் தமிழ் ஆசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கூட திருக்குறள் உரையாசிரியர்களையே பொன்னெனப் போற்றிக் கொண்டு வலம்வருகின்றார்களேயொழிய சிந்தித்துப் புதுக்கருத்துக்களைக் கூறத்தவறிவிடுகின் றார்கள். இதனால் அவர்களிடம் பாடங்கற்கும் மாணவர் சமுதாயம், குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளாத சமு தாயமாகவே காணப்படுகிறது.

திருக்குறளுக்கு 20ம் நூற்றாண்டிலே உரை-தெளிவுரை எழுதிய தமிழ் அறிஞர்களும் அதே தவறுகளையே விட்டுள்ளார்கள். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளையின் உரையாவது. "(தன்னு டலிலுள்ள) மயிரை (யாராவது) நீக்கினால் (உடனே) உயிரை விட்டுவிடுகின்ற கவரிமாவைப் போன்ற வர்கள் மானம் (கெட) வந்தால் உயிரை விட்டுவிடுவார்கள்." என்பதாகும். விளக்கவுரை எழுதும்பொழுது "கவரிமா என்பது ஒருவகை மான்" என்றே குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளுக்கு நாவலர் நெடுஞ்செழியன் - எம்.ஏ. 1991 இல் எழுதிய தெளிவுரையில், "தனது மயிர்த்தொகுதியில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிரை வைத்துக்கொண்டிராத கவரிமான் போன்ற இயல்புடையவர்கள் தாம் உயிர் விடுவதனாலேயே மானம் நிலைக்கு மானால் தமது உயிரையும் விட்டுவிடு வார்கள்." என்றே குறிப்பிட்டுள்ளார். .நாமக் கல் கவிஞரும், நாவலர் நெடுஞ்செழியனும் திருக்குறளுக்கு விளக்க் உரை எழுதும்போது கவரிமாவை, "கவரிமான்" என்றே குறிப்பிட்டுள்ளார்கள். பதிற்றுப்பத்திற்க்கு ஆராய்ச்சி உரை எழுதிய சு. அருளம்பலனாரும், ஒளவை துரைசாமிப்பிள்ளையும் பெருங்கதை (பாடல் இல.50) ஆசிரியர் போல் கவரிமாவை "கவரிமான்" என்றே சுட்டியுள்ளார்கள். ஆனால் கலைக்களஞ்சியக்காரர் கவரிமாவை திபேத்திய நாட்டில் வாழும் 'எருதுவகை' என்றே குறிப்பிட்டுள்ளார்கள். இந்த 20 ம் நூற்றாண்டிலே கூட உலகம் சுற்றிவந் தோருக்கே கவரிவிலங்கு மான்வகையா, மாடுவகையா என்று பிரித்தறிய முடியாதி ருக்கும்போது பரிமேலழகர் அவர் வாழ்ந்த- கி.பி 13ம் நூற்றாண்டு காலத்தில்- உலகம் தெரியாத காலத்தில் - எவ்வளவு அறியாமையுடன் இருந்திருப்பார்! பகுத்தறிவுப் பாசறையிலிருந்த நாவலர் நெடுஞ்செழியன் கூட கவரியின் ஒரு மயிரிலேயே பிடித்துத் தொங்கிக்கொண்டு நிற்கின்றார் என்றால் பரிமேலழகர் ஒரு மயிரில் பிடித்து நின்று தொங்கியதில் வியப்பொன்றுமில்லை.

திருவள்ளுவர் காலத்துக்குப் பல்நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்கள், நுண்மான்நுழைபுலத்துடன் கவரிமா பற்றி எவ்வளவு தெளிவாகவும் இயற்கையாகவும் கருத்துக்களைக் கூறி உள்ளார்கள். அக் கருத்துக்களை பரிமேலழகர் உட்பட எந்தவொரு உரையாசிரியரும் அறிந்திருக்கவில்லை.

புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, கலித்தொகை போன்ற நூல்களிலும் வள்ளுவருக்குப் பிற்காலத்து நூலான பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்றவற்றிலும் கவரி பற்றிய செய்திகள் வந்துள்ளன. முதலில் கலைக்களஞ்சியம் கூறுவதை நோக்கியபின், மேற்கூறிய நூல்கள் கூறிய வற்றை நோக்கலாம். "கவரிமா- இது திபெத் நாட்டின் மிக உயர்ந்த மலைகளில் வாழும் எருதுவகையாகும். இது உலகத்தில் மிகக் குளிர்ந்தவையும், மிக உயர்ந்தவையுமான மலைகளில் வாழும் விலங்குகளுள் ஒன்று. இது மிக குளிர்காலத்தில் கூட 14,000 - 20,000 அடிகளுக்குள் கீழே வருவதில்லை. தற்போது இது லடாக் பகுதியில் 'சங்கசென்மோ' பள்ளத்தாக்கில் மட்டுமே காணப் படுகின்றது. உடல் முழுக்க கரிய, கரும் பழுப்பான நீண்ட மயிர்களைத் திரட்சியாகக் கொண்டது.

மயிர்கள் மிருதுவானவை. பட்டுப் போன்றவை. மயிர்கள் தரையைத்தொடும். அவை இரு வகை:

1) காட்டுக்கவரி 2) வீட்டுக்கவரி

வீட்டுக்கவரியின் நெஞ்சிலும், வாலிலும் வெள்ளை



படிப்பகம்

www.padippakam.com

நிற மயிர்கள் அதிகம். அம்மயிர்களே சவரியாகவும், சாமரமாகவும் பயன்படுகிறது. 'பொஸ் குறுன்னியன்ஸ்' [ Bos Grunniens ] என்ற விலங்கின வகையைச் சார்ந்தது. "என்கிறது கலைக்களஞ்சியம். Yak Large massively built ox family. Yak bulls and cows - Encycleopaedia Britanica.

புறநானூறு 132ம் செய்யுளில், "நரந்தையையும் நறிய புல்லையும் மேய்ந்த கவரிமா, குவளைப் பூவையுடைய பசிய சுனையின் நீரை நுகர்ந்து அதன் பக்கத்திலுள்ள தகரமரத்தினது குளிர்ந்த நிழலின் கண் தன் பிணையுடனே தங்கும் வடதிசைக்கண்ணதாகிய வானைப்பொருந்தும் இமயமலை"

"முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே
நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகியகல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசையதுவே வான்றோயிமயம்...." புறம் -132

பதிற்றுப்பத்து - 2ம் பத்து வரி 21 - 3

".......கவிர்ததை சிலம்பிற்றுஞ்சும் கவரி
பரந்திலங்கருவியொடு நரந்தங்கனவும்
ஆரியர் நுவன்றிய பேரிசையிமயம்"

முள்முருக்க மரங்கள் நெருங்கி வளர்ந்து காணப்படுகின்ற பக்கமலையில் உறங்குகின்ற கவரிமா பரந்து விளங்கும் அருவியையும் நரந்தம்புல்லையும் கனவினில் காணும் ஆரியர் நிறைந்த மிகப்புகழையுடைய இமயமலை. அதாவது பக்கமலைகளில் இனிதாக உறங்குகின்ற கவரிமா பகற்காலத்து தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையும் கனவினில் காண்பதற்கு இடமாக அமைந்த இமயமலை.

பதிற்றுப்பத்து 5ம் பத்து 43வது வரியில்

"கவரி முச்சிக்கார் விரிகூந்தல்
ஊசல் மேவல் சேயிழை மகளிர்....
கடவுள் நிலைய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமையமாக...."

(கவரி மயிர்போலும் கொண்டை முடியாகிய கருமை விரிந்த கூந்தலினையும், ஊஞ்சலை விரும்பி ஆடுதலையும் செய்ய அணிகலங் களையுமுடைய மகளிர், நெடிய சிகரங் களையுடைய நெடிதுயர்ந்த வடதிசையில் எல்லையாக உள்ள இமயப் பகுதியில் வாழ்தலைக் குறிப்பிடுகிறது

.பதிற்றுப்பத்து 9ம் பத்து வரி 36ல்

"ஆய்மயிர் கவரிப்பாய்மா மேல்கொண்டு....."

அழகிய கவரிமயிராலாகிய குச்சியையும் அணிந்த பாய்ந்து செல்லும் குதிரைமீது ஏறிக்கொண்டிருப்பவன்

எ-று. அதாவது குதிரையின் நெற்றி மீது அதன் உச்சியில் கவரிமாவின் மயிரால் தயாரிக்கப்பட்ட மெல்லிய மயிர்களாலான குஞ்சம் கட்டப்பட்டுள்ளது.

அகநாநூறு 156 செய்யுளில்,

"முரசுடைச் செல்வர் புரவிச்சூட்டு முட்டுறு கவரி" என்றும், கலித்தொகை 69ல் "ஆய்தூவி" (மெல்லிதாகிய சூட்டுமயிர் என்று வருகிறது)

சீவகசிந்தாமணி 1860ல்.

"பானிறக் கவரி நெற்றிப் பசுங்கிளி நிறத்த பாய்மா" என்றும் 2228ல் "கவரி நெற்றிய இளைமயிர் புரவி" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருங்கதை பாடல் 35ல், "வான் மயிர் நுடக்கிற்றாயினுயிர்
வாழாப் பெருந்தகைக் கவரி" என்றும்,
பாடல் 50ல், "கவரிமானேறு கண் படைகொள்ளும்
தகரங்கவினிய தண்வரைச் சாரல்" என்றும்
கவரி பற்றி பண்டைத்தமிழர் குறிப்பிட்டுள் ளார்கள்.

எனவே, இத்தகைய அறிவியல் நோக்குடன் பண்டைப்புலவர்கள் கவரி பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டதன் அடிப்படையை ஒட்டியே வள்ளுவரும் கவரி பற்றி அறிவியல் அடிப்படையில் குறிப்பிட் டிருக்க, உரையாசிரியர் வள்ளுவரைப் புரியாமல் அறி யாமையுடன் குறளுக்கு உரை எழுதியிருப்பதைக் கற்றோர் நன்குணர்வர் என்பது தெளிவு.

---

18ம் பக்கத் தொடர்...

**மகா வித்துவான் கலாபூஷணம்....**

பெருமைமிக்க 21ம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் சாகித்திய கர்த்தா அவர். அவருடைய பெருமைகளை எழுத்தில் அடக்கமுடியாது. அவரது ஆக்கத்தில் உருவான பாடல் களையே தெரிவு செய்யும்படி 2002ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்தினப்போட்டி விதிகளில் குறிப்பிட்டிருந்ததும் அவரது இசை ஆற்றலுக்கு பெருமை சேர்க்கிறது. இத்துடன் நில்லாது இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவில் தமிழ் நாட்டின் பெயர்பெற்ற தலங்களின் மீதும் பாடல்களை இயற்றி யுள்ளார். அவற்றுள், ஊஞ்சற்பாட்டு, திருமண மங்கல வாழ்த்து, பாராட்டுவிழா, சஷ்டியப்த பூர்த்தி, உபநயனம், பாடசாலை கீதம், வட. இல. சங். சபை கீதம், தேசிய கல்வியிற்கல்லூரி கீதம், நூற்றாண்டுவிழா கீதம் என்பன இயற்றி இசையமைத்து ஒலிப்பதிவும் செய்து கொடுத்த பெருமைக்குரியவர். அத்தோடு எழுச்சிப்பாடல்களும் இயற்றி இசையமைத்தவர், இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படத்துக்குப் பாடல் எழுதியதன்மூலம் அத்துறையிலும் பணியாற்றியவர். பிறந்த குழந்தைகளுக்கு வேண்டிய பெயரை சோதிட விதிகளுக்கு அமையத் தெரிவுசெய்து கொடுப்பார். மேலும் ஆய்வுக்கட்டுரைகளுக்குத் தகவல் சேகரிக்கச் செல்பவர்களுக்குக்கூட மனங்கோணாது இன்முகத்தோடு வரவேற்று செய்திகளைப் பரிமாறுவார். இத்தகைய பெருந்தகையாளனுக்குக் கிடைத்த பட்டங்களும் எண் ணிலடங்காது. அவர் இறப்பதற்கு சிலகாலங்களுக்கு முன்னர்தான் தமிழ்நாட்டில் அவருக்கு விழா எடுத்து கௌரவித்தனர். இதைவிட இந்து கலாச்சார அமைச்சின் உயர் விருது கலாபூஷணம், கலாரத்னா, யாழ்.பல்கலைக் கழகம் வழங்கிய கௌரவ விருதான முதுகலைமாணி போன்ற பட்டங்களைவிட சமூக சமய ஸ்தாபனங்களும் பாடசாலை களும் கூட சிறப்புப்பட்டங்களையும் வழங்கி கௌரவித் துள்ளன. அத்தகைய பெருந்தகையாளன் இன்று நம்மத்தியில் இல்லை. எனினும் அவரது இனிய பாடல்கள் என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். அவரது ஏனைய பாடல்களுக்கும் இசைவடிவமும் நாட்டியவடிவமும் கொடுப்பது தமிழ்க் கலைக்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

❖



படிப்பகம்

www.padippakam.com

# மகா வித்துவான் கலாபூஷணம் அமரர் பிரம்மஸ்ரீ என்.வீரமணிஐயர் அவர்களின் நினைவலைகள்



திருமதி சாந்தினி சிவநேசன்

கலை என்பது அழகியல் நோக்குக்கொண்டதும் அரியனவற்றை எளியனவாக ஆக்கி எல்லோருக்கும் ஏற்றவகையில் வழங்கி வெறும் அறிவு நிலையோடு நில்லாமல் செயல் திறனையும் இணைத்து உணர்வு வயப்பட்டதாகவும் விளங்குவது. கலையில் அறிவுத்திறத்தினைவிடச் செயல் திறத்திற்கே முதன்மையான இடம் தரப்படுகின்றது.

மனிதன் தனது உணர்வுகளை அழகுற வெளிப்படுத்தும் ஒரு ஊடகம் கலையாகும். இக்கலை நிலையான ஒன்றெனினும் வளர்ச்சியை உள்வாங்கிக்கொண்ட ஒரு சாதனம். அத்தோடு கலையானது காலவரையறையற்ற தன்மை கொண்டது.

மனித நாகரிகம் தொடங்கியதிலிருந்து கலை வடிவங்களும் ஒவ்வொரு சமூகத்திலும் தோன்றி வளர்ந்து கொண்டிருக்கின்றன. வாழ்வை இரசிக்கவும் அதிலிருந்து பின்வாங்காதிருக்கவும் மட்டுமன்றி மனித உள்ளத்தைப் பண்படுத்தி நேர் வழி கொண்டு செல்வது கலையாகும். அது மனித மனதினைச் சாந்தப்படுத்தி உன்னதமான மனநிலையை வழங்கும் ஒரு சாதனம். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கலைவடிவினைக் கற்பது அவசியம் எனத் தற்போது விதந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு ஒரு கலையில் தேர்ந்த மனிதன் கலைஞன் ஆகிறான்.

இந்த வகையில் இயல், இசை, நாடகக் கலைகளில் தேர்ச்சி பெற்றவர்தான் அண்மையில் காலஞ்சென்றவரான மகாவித்துவான் இயல் இசைவாரிதி பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்கள். இவர் கலைக்குப் பெயர்பெற்ற இடமான இணுவையம்பதியை பிறப்பிடமாகக் கொண்டவர். இளமை யிலேயே கலையார்வம் மிக்கவராகக் காணப்பட்டார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பயின்றார். அங்கு பயிலும் காலத்தில் சகல துறைகளிலும், சிறந்து விளங்கியமையால், கல்லூரி அதிபரினால் சிறந்த பல்துறை மாணவர் என்ற விருதினையும் பெற்றுக்கொண்டவர். இவர் இளமையில் பெற்றோரை இழந்தும் தனது தமையனாரின் ஆசிகளோடு பாரதம் சென்று தமிழ் நாட்டில் ``கலா ஷேத்திரா`` நடனப்பள்ளியில் இணைந்து ``ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல்`` அம்மையாரின் வழிகாட்டலில் இசை, நடன கலையைப் பயின்றார். இங்கு பல சிறந்த இசை விற்பன்னர்களிடம் இசை பயின்று பட்டம் பெற்றார். அவர்களில் எம்.டி.இராமநாத ஐயரிடம் இசையும் 20ஆம் நூற்றாண்டின் பிரபல சாகித்திய கர்த்தாவான குரு பாபநாசம் சிவன் அவர்களிடமும் நேரடியாகப் பெற்ற அனுபவங்களோடு தாய் நாடு திரும்பி மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இசை, நடன ஆசிரியராக பணிபுரிந்தார். அங்கு பணிபுரியும் காலத்தில்தான் அவருக்கு அரச நியமனம் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடன விரிவுரையாளராக கிடைத்தது. அதன்பின்பு நுண்கலைத்துறை கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு கையளிக்கப்பட்டபோதும் தொடர்ந்து அங்கு ஓய்வு பெறும் வரை விரிவுரையாளராக கடமையாற்றினார்.

வீரமணி ஐயர் அவர்கள் விரிவுரையாளராகப் பணியேற்ற நாட்களில் நடனம் கட்டாய பாடமாகப் பாடசாலைகளில் புகுத்தப்பட வில்லை. ஆகவே அந்நாளைய கல்வி மந்திரிக்கு சிபார்சு செய்து நடனபாடத்தை அழகியற் கல்வி எனும் பாடப்பரப்பில் இடம்பெறச் செய்த பெருமை அவருடையது. அதற்கு வேண்டிய பாடத்திட்டங்களை வகுத்து க.பொ.த. சாதாரணம் வரையும் ஒரு பகுதியாகவும் க.பொ.த. உயர்தரம் வரையும் மறுபகுதியாகவும் வரையறை செய்து பாடத்திட்டங்களை வகுத்துக்கொடுத்தவர் அவர். அத்துடன் இதே வகுப்புகளுக்கு பரத நாட்டிய பரீட்சைகளுக்கு அறிமுறை, செய்முறை ரீதியாக பரீட்சை கட்டுப்பாட்டாளராகவும், தேர்வாளராகவும் கடமை ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.பரீட்சைப் பயத்தைப்போக்கி சாதாரண உளநிலையோடு மாணவர்களைத் தேர்வுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதற்காக ஐயா அவர்கள் தேர்வாளராகக் கடமையாற்று கின்றபோது பரீட்சார்த்திகளின் மனம் நோகாவண்ணம் மிகமென்மையாக அன்பாக உரையாடுவார். இதுவும் அவரது உயர்குணங்களில் ஒன்றாகும். இதற்கு அவரிடம் காணப்பட்ட நல்ல மனப்பான்மையும் அனுபவங்களுமே காரணங்களாகும். அவர் விரிவுரையாளராகக் கடமையாற்றும் போதுதான் நம் தமிழ் மாணவச் செல்வங்களுக்கென நுண்கலைக்கல்லூரி அவசியம் தேவை எனக்கருதி; கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களிடம் சிபார்சு செய்தார். அதற்கான பத்திரிகை விமர்சனத்தையும் அவரே எனக்கு நேரடியாகக் காட்டி நான் வாசித்திருக்கிறேன். இன்று பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகத் திகழும் இராமநாதன் நுண்கலைப்பீடம் அவரது சிபார்சின் பேரில் ஏற்பட்டதுதான். அத்துடன் அவர் காலமாகும்வரை அங்கு வெளிவாரிப் பரீட்சகராகவும், அதிதி விரிவுரையாளராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

வட இலங்கை சங்கீத சபை நடனபாடத்திட்டம் வகுத்த குழுவின் தலைவராகவும் இருந்ததோடு நில்லாது தேர்வாளராகவும் வினாத்தாள் தயாரிப்பவராகவும் அங்கம் வகித்துள்ளார். அவர் ஒரு முத்தமிழ் வித்தகர். அவர் எண்ணிலடங்காத ஏராளமான நாட்டியநாடகங்கள், கீர்த்தனங்கள், பதங்கள் இயற்றி இசையமைத்துள்ளார்கள். எந்த கலை விழாக்களானாலும் சரி, கவிதை அரங்கமாக இருந்தாலும் சரி மிருதங்க இசை நடன அரங்கேற்ற வைபவங்களானாலும் சரி அவர் கலந்து கொள்ளாத நிகழ்ச்சிகளே இல்லை எனலாம். இதற்கு அவரது பல்துறைசார்ந்த அனுபவங்களே காரணமாகும். அவருடைய பாடல்களைப் பாடாத இசைக் கலைஞரும் இல்லை. அவற்றிற்கு நடனம் அமைக்காத நாட்டியக் கலைஞரும் இல்லை என்றே கூறலாம். அப்படிப்பட்ட

17ம் பக்கம் பார்க்க...



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு புதிய வெளிச்சம்

## சிங்கள தமிழ் கலைக்கூடல் பற்றிய- சில குறிப்புக்கள்

\`முகிழ்த்து எழுவோம் சோதர உறவுகளுடன்\` என்ற மகுட வாசகத்துடன் கடந்த அக்டோபர் 2003, 29,30ம் திகதிகளில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சிங்கள தமிழ்க்கலைக்கூடல் நடைபெற்றது. \`ஹிரு\` என்ற இடதுசாரி அமைப்பினர் பலரது ஒத்துழைப்புடனும் இவ் ஒன்றுகூடலுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர். இலங்கையின் இனவாத பாராளுமன்ற அரசியலாலும் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பேரினவாத யுத்தத்தின் விளைவுகளாலும் சீரழிக்கப்பட்ட இனத்துவ உறவுகளை சீர்செய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட ஒரு பயனுள்ள நிகழ்வாக இவ் ஒன்றுகூடல் அமைந்தது. இவ்ஒன்றுகூடல் நடைபெறுவதற்கு முன்பே இனவாதப் பத்திரிகைகளின் தொடர்ச்சியற்ற பிரச்சாரங்கள் ஒரு பதற்ற நிலையைத் தோற்றுவித்திருந்தது. எதிர்பார்த்தது போன்றே முதல் நாட்காலை வணபிதா யூட்லாலின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிறுகதை அமர்வில் செ. யோகநாதன் உரையாற்றிக் கொண்டிருந்த போது குழப்பம் ஏற்பட்டது. இந்நிகழ்வை குழப்ப முயன்ற \`சிஹல உறுமய\` பேரினவாத அமைப்பின் எதிர்ப்பை முறியடித்து இவ் ஒன்றுகூடல் நடைபெற்றமை இந்நிகழ்வுக்கு வலுச் சேர்த்ததுடன் இனத்துவ உறவுகளின் யதார்த்தத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

அன்று காலனித்துவத்துக்கு எதிராக தேசிய இனங்கள் ஒன்றுபட்டு எழாமலே கிடைத்த ஆட்சி அதிகாரமும், இன்றுவரை எந்த வல்லாதிக்கத்தைச் சார்ந்தாவது தமது ஆளும் வர்க்க பேரினவாத ஆட்சி

*பல்லின மக்கள் மத்தியில் உள்ள ஒடுக் கப்படும் மக்களது ஐக்கியத் தையும் விடுதலை யையும் அடிப் படையாகக் கொண்ட அரசியல் செல்நெறி எந்த தேசிய இனத்தின் பூரணமான விடுதலைக்கும் எதிரானதல்ல. பதிலாக சகல தேசிய இனங் களதும் தேசிய சுயநிர்ணய உரிமையை மதித்தலும், அதனை உண்மையான அர்த் தத்தில் சாத்தியப்படுத் தலும் இதன் மூலமே செயல் வடிவம் பெற முடியும்.'*



அதிகாரத்தை நிலைநிறுத்த எண்ணும் பலவீனமான இலங்கைத் தேசியமும் இனங்களின் ஐக்கியத்தை பேண விழையாததில் வியப்பில்லை. அத்தகைய பல்லின மக்களின் ஒற்றுமை தமது ஆட்சி அதிகாரத்துக்கு உலை வைக்கும் \`போர்வாள்\` என்பதை அவர்கள் \`சுதந்திரம்\` அடைந்த நாளிலிருந்தே சரியாக உணர்ந்திருந்தனர். இதனால் இனங்களைப் பிளவுபடுத்தும் அரசியலையே இவர்கள் இன்றுவரை மக்களிடம் திணித்தனர். அதுபோன்றே இன ஒடுக்குமுறைக்கு எதிராகச் சிந்தித்த தமிழ்த் தலைவர்களும் சாதரணமக்கள் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. சிங்கள இனவாத அரசியற் தலைவர்களின் நல்லெண்ணத்தையும் மன மாற்றத் தையும் எதிர்பார்த்ததுடன், காலனித்துவ எஜமானர்களையும், பிராந்திய, உலக ஆதிக்க சக்திகளையுமே பெரிதாக நம்பினர். ஏற்றத்தாழ்வான இச்சமூக அமைப்பில், பல்லின மக்கள் மத்தியிலுள்ள ஒடுக்கப்படும் மக்களையும், மனித நேயமுள்ளவர்களையும், சமூக மாற்றத்தை விரும்புவோரையும் விடுதலைக்கு சாதகமாக்கிக் கொள்ளக் கூடிய அரசியல் வழிமுறையை இவர்கள் என்றும் நாடவில்லை.

இதனால் இலங்கையில் இனங்களுக்கிடையேயான ஐக்கியம் மட்டுமல்ல, மனிதநேயத்துடனான உறவுகளே தீங்கான ஒன்றாகவும் அதற்கும் அப்பால் இன முரண்பாடுகள் கூர்மை அடையும் போது மிகவும் வெறுக்கத்தக்க ஒரு செயலாகவுமே அனைத்துத் தர்ப்பாராலும் கருதப்பட்டு வந்தது. அரசியலில் மட்டுமல்ல, கலை, இலக்கிய வெளிப்பாடுகளிலும் இதுவே நிலையாக இருந்தது. இதனால் மக்களிடம் இயல்பாகவே எழும் மனிதாபிமான உணர்வுகளும், மானுட



படிப்பகம்

www.padippakam.com

நேயமும் கூட மழுங்கடிக்கப்படும் ஒரு சூழல் உருவாகியது. இச்சூழலில் இனங் களுக்கிடையிலான ஐக்கியம் என்பது மிகச்சிறுபான் மையினரான தத்துவத்தின் பின்புலத்தில் இயங்கும் இடதுசாரிகளதும், விரல்விட்டு எண்ணக்கூடிய சில ஆன்மீக, அறச் செயற்பாட்டாளர்களது கருத்தாகவுமே குறுகிப்போய் இருந்தது. ஆனால் அரசியல் வாதிகளால் மாசுபடுத்தப்பட்டாலும் வெகு ஜனங்கள் மத்தியில் மனிதாபிமானத்துக்கான ஊற்றுக்கண் எப்பொழுதும் இருந்து வந்தது.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை முழுதான இன ஒன்றுகலத்தலாகவும், வேறுபடுதலை முற்றான பிரிதலாகவும் கருதும் முதலாளித்துவ ஒரு முனைவாத கண்ணோட்டமே இவ்இனமுரண் நிலைக்குக் காரணமாகும். பல்லின மக்கள் மத்தியில் உள்ள ஒடுக்கப்படும் மக்களது ஐக்கியத்தையும் விடுதலையையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் செல்நெறி எந்த தேசிய இனத்தின் பூரணமான விடுதலைக்கும் எதிரானதல்ல. பதிலாக சகல தேசிய இனங்களதும் தேசிய சுயநிர்ணய உரிமையை மதித்தலும், அதனை உண்மையான அர்த்தத்தில் சாத்தியப்படுத்தலும் இதன் மூலமே செயல்வடிவம் பெறமுடியும். இன்றைய உலகமயமாதல் சூழலிலும் எத்தகைய மேலாதிக்கங்களுக்கும் இடந்தராத சுதந்திரமான தேசியத்தையும் அர்த்தமுள்ள முழுமையான ஜனநாயக அமைப்பையும் இதன் மூலமே ஏற்படுத்தமுடியும்.

இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவே கலைக்கூடல் நிகழ்ச்சிகள் அமைந்தன. நகர மண்டப மேடையில் கரிய சாம்பல் நிறமும் வெள்ளைநிறமும் கலந்த ஒரு திரை கிழிக்கப்பட்டு தொங்குவது போன்றும், அதன் பின்னணியில் சிகப்புத்திரை தெரிய அதன் முன்னால் நான்கு தேசிய இனங்களைக்குறிக்கும் நான்கு மனித உருவங்கள் ஒடுக்கப்படும் நிலையைக் குறிப்பது போன்று கைகளைக் கட்டியபடி எலும்புக் கூடுகளாக உருச்சிதைந்து நிற்கும் ஒரு தோற்றம் அழகாக உருவாக்கப்பட்டிருந்தது. சாதி, இன, மத வேறுபாடுகள் கடந்து சகல இனங்களையும் நேசிக்கும் ஒரு புரட்சியாளனின் இதயத்தைக் கிழித்துவைத்து போன்று அமைக்கப்பட்ட அவ்வுருவமைப்பே கலைக்கூடலில் பங்கு கொண்டோருக்கு புத்துணர்வை ஊட்டுவதாக அமைந்தது.

``இன்றுதான் சூரியன் சரியாக உதிக்கிறது`` இது ஒரு மனிதாபிமானத்தின் கூட்டு முயற்சி என்ற `ஹிரு` அமைப்பினரின் வரவேற்புரையுடன் ஆரம்பித்த இவ்ஒன்றுகூடல்- ஆய்வுரைகள், இசைப்பாடல்கள், நடனம், நாடகம் என பல்சுவை நிறைந்ததாக அமைந்தது. ஆய்வுகளில் புனைகதை, கவிதை, இசைப்பாடல்கள், சினிமா, நாடகம்,தொடர்பு ஊடகம் என பன் முகப்பாங்கான தலைப்புக்களில் விடயங்கள் ஆராயப் பட்டன. அவை யாவும் அவ்வத்துறைகளின் வளர்ச்சி பற்றிய வெளிப்படுத்தல்களாகவும் விமர்சனங்களாகவும் அமைந்தாலும் இனங்களுக்கிடையேயான ஐக்கியம் என்ற அடிப்பொருளைத் தொட்டுச் சென்றன.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை அவை மூன்று வகையான அணுகுமுறையுடன் தொற்ற வைக்க முனைந்தன.

1. அரசின் பேரினவாத நிலைப்பாட்டால் எழுந்த போரின் மீதான வெறுப்பை வெளிப்படுத்தி- அழிவுகளில் இருந்து பாடம் பெறுவதில் ஏற்படும் ஐக்கியநிலை.

2. அனைத்து மதநெறிகளிலும் நிற்கும் யாவரும் அதன் வழி நடந்தால், அத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாட்டில் ஏற்படும். ஐக்கிய நிலை.

3. காலனித்துவத்துக்கெதிராக ஒன்றுபடாத இனங்கள், இன்று அனைவரையும் பாதிக்கும் புதிய காலனித்துவ முறையான உலகமயமாதலும் அதனை அமுல்ப்படுத்தும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக ஒன்றுபடுவதன் மூலம் பரஸ்பர உரிமைகளை அங்கீகரிப்பதில் ஏற்படும் ஐக்கியநிலை என்பவையாகும்.

இவற்றில் முதலாவது வகையான போரின் துயர், அழிவு, அச்சம் என்பவற்றை வெளிப்படுத்தி ஒரு மனிதாபிமானத்தின் அடிப்படையிலான ஐக்கியத்தை வலியுறுத்தி பெரும்பாலான தமிழ்க்கலைஞர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர். உணர்வுபூர்வமான பாடல்களாக, உரைகளாக அவை வெளிப்பட்டன. அடுத்த தலைமுறையினருக்கு இத்தகைய துயர் நிலையை விட்டுச் செல்லக்கூடாது என்ற உணர்வு அங்கு மேலெழுந்தது. கலாநிதி என்.சண்முகலிங்கம், கவிஞர்.சோ.பத்மநாதன் போன்றோர் இவ்வுணர்வை நன்கு வெளிப்படுத்தினர். கவிஞர் ஆரியவன்ச ரணவீர `மனித வாழ்க்கை பன்முகப்பாங்கானது. ஒரே நிறமலர்கள் பூத்துக்குலுங்கும் பூங்காவின் அழகுக் குறைபாடுடையது. பல நிறமலர்கள் பூத்துக்குலுங்கும் பூங்காவாக தன்னடையாளத்துடன் பன்முகப்பாங்கையும் பேணும் நிலை இங்கு உரு வாகவேண்டும்` என்றார்.

ஊடகத்துறை பற்றி உரையாற்றிய நிலாந்தன், தென்னிலங்கையின் மையநீரோட்ட ஊடகங்கள் எப் பொழுதும் தமிழ் மக்களது கருத்துக்களைப் பிரதிபலிப் பதில்லை என்றும், இன்று ஏற்பட்டிருக்கும் உலகு தழுவிய தமிழ் ஊடக வளர்ச்சி நிலை பற்றியும் குறிப்பிட்டார்.

கவிதை பற்றிய கருத்துரையில் கவிஞர் சு.வில்வரத்தினம் புத்தரைக் குறியீடாக்க் கொண்ட தனது கவிதைகளை நினைவுபடுத்தி பௌத்த தத்துவத்தின் மீது தனக்கு இருக்கும்பிடிப்பையும் வெளிப்படுத்தினார். .பௌத்தத்தை சிங்களத்துடன் மட்டும் அடையாளம் காணாது பௌத்த தத்துவத்தின் வழிநடந்தால் தேசியக்கூட்டு ஆன்மா, தேசிய ஆன்மா, உலக ஆன்மா என விரிந்து செல்லும் விடுதலை நோக்கு வளரும் என்பதையும் குறிப்பிட்டார். அடையாளங்களுக்கு அப்பால் தமிழ்க் கவிதை சென்றுவிட்டது எனவும், உலகுடன் ஐக்கியப்பட்ட பின்னர், அயலவர்களுடன் ஐக்கியப்படுவது கடினமல்ல. செந்தமிழும், சிங்களமும் என இரு இறக்கைகள் கொண்ட பறவையாக நாம் பறக்கத் தொடங்குவோம் என்றார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் சிவத்தம்பி `செப்பு மொழி பதினெட்டு டையாள் சிந்தனை ஒன்றுடையாள்` என்ற பாரதியின் பாடல் வரிகளை நினைவு படுத்தி பதினெட்டு மொழி பேசுபவர்கள் ஒரு சிந்தனையைக் கொண்டிருக்க



படிப்பகம்

www.padippakam.com

முடியுமானால் இரு மொழி ஒரு சிந்தனையுடன் தனித்துவங்களைப் பேணி ஒற்றுமையாக ஏன் வாழமுடியாது என்றும், நாம் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களாக இருக்கும் அதேவேளை மானுடர்களாக இருக்கிறோம், காலனித்துவத்தின் தேவை காரணமாக தனித்துவங்களையும் வேறுபாடுகளையும் பேசினோம் ஒருமைப்பாடுகளைக் காணத் தவறினோம். இச்சமாதான இடைவெளி இவற்றைச் சிந்திப்பதற்கு அவகாசம் தந்துள்ளது என்றார்.

நாடகம் பற்றிய அமர்வில் உரையாற்றிய குழந்தை ம. சண்முகலிங்கம் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டதுடன் சமாதானம் இன்று அனைவராலும் பேசப்படுகிறது. நல்ல விடயம். என்.ஜி.ஓ பணத்துக்காகவும் சமாதானம் பேசப்படுகிறது. உண்மையில் சமாதானம் என்பது இங்கிருந்து வரவேண்டும் என நெஞ்சைத்தொட்டு கூறியது சமாதானத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்த அமைந்தது.

முதல் நாள் புனைகதை இலக்கியம் பற்றிப் பேசிய பேராசிரியர் சுசரித கமலத், எழுத்தாளர் குணதாச அமரசேகரவின் சிறுகதை நாவல்களை விமர்சனம் செய்த போது `இலங்கை தமிழர்களுக்கோ, சிங் களவர்களுக்கோ தாய்நாடாக இல்லாமல் பல்தேசியக்கம்பனிகளின் நாடாக இருக்கிறது` என்றார்.

திரைப்படம் பற்றிய அமர்வில் உரையாற்றிய அ.யேசுராசா ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்களின் வளர்ச்சிபற்றி குறிப்பிட்டதுடன் யுத்தச் சூழலிலும் வெளிவந்த மாவீரர்களின் நிகழ்வை மதிக்கும் ஒரு இராணுவத் தளபதியின் மனநிலையை வெளிக்காட்டும் `தமிழோசை` எனும் திரைப்படம் பற்றியும் குறிப்பிட்டார். `புரசந்த கலுவற` என்ற திரைப்படத்தை அளித்த பிரசன்ன விதானகேயின் உரை ஒரு சமூகப்பார்வையுள்ள கலைஞனின் இயல்பான ஐக்கியத்தை அவாவும் கருத்து வெளிப்பாடாக அமைந்தது. உலகமயமாதலின் கீழ் எவ்வாறு அமெரிக்காவின் சினிமா ஆதிக்கம் உலகப்படத்தில் சிறு புள்ளியாகத் தெரியும இலங்கை வரை வியாபித்து வருகின்றதென்றும் இந்தியாவுடன் அவர்களது கூட்டு முயற்சி பற்றியும் குறிப்பிட்டார். இத்தகைய ஆதிக்கங்களுக்கு எதிராக 1980களில் ஆரம்பித்த `ஆசிய சினிமா` (Asian cinema)அமெரிக்க ஈராக் போரில் யப்பானின் ஆதரவு நிலைப்பாட்டின்பின் பலவீனம் அடைந்ததென்றும், பின்னர் அமைக்கப்பட்ட `தென்னாசிய ஒருங்கிணைப்பு` என்பதும் இந்தியா அதிக இலாபமீட்டவே வகைசெய்தது என்றும் குறிப்பிட்டார். பெரும்தொகையான படங்களை இலங்கை இறக்குமதி செய்யும்போது ஆண்டுக்கு ஐந்து படங்களைக்கூட இந்தியா ஏற்க முன்வரவில்லை என்றும் விருதுபெற்ற படமான லெஸ்டர் ஜேம்ஸ்பீரிஸின் படத்தைக்கூட இந்திய தொலைக் காட்சியில் வெளியிடவில்லை எனவும் குறிப்பிட்டார். கொக்கோ கோலாவுக்கு எதிர்ப்புத்தெரிவிப்பதுபோன்று உலகமயமாதலுக்கு எதிராக சினிமாத்துறையிலும் நாம் ஒன்றுபடவேண்டும் எனத் தான் சார்ந்த கலைத்துறை, தொழில் அனுபவங்களுக்கூடாகவே அவர் சொல்லிச் சென்றமை கலைக்கூடலின் ஐக்கியம், புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான செயல்வடிவ நோக்கை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இனங்களுக்கிடையிலான ஐக்கியம், புரிந்துணர்வுக்கான முயற்சிகள் இதறகு முன்பும் பல்வேறு தரப்பினாலும் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதும் நீண்ட போர் இடைவெளிக்குப்பின் தமிழ், சிங்கள கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்களை இணைக்க எடுத்த இம்முயற்சி பயனுள்ளது. இதுபோன்ற பணிகளை அரசியலாளர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் மட்டும் விட்டுவிட்டுவிடாமல் பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள் போன்ற கல்விசார் அமைப்புக்களுக் கூடாகவும் முன்னெடுக்கப்படும் போதே- அரைநூற்றாண்டுக்கு மேலாக நீண்டுவரும் இனவிரிசலை நீக்கி மக்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். இதன்மூலமே அரசியல் தீர்வுடன் சமாதானத்தை நிலைநிறுத்தும் வழியை இலகுபடுத்த முடியும்.

*-தணிகையன்*

# வர்ணங்கள்

நெடிய மரத்து இலைகள்
அடியில்தான் வீழும்.
பிய்த்தெறிந்த போதுதான்
பாரின் - துருவமெங்கும்.

படம் வைத்து
பூச்சொரிந்து
பஜனைகள்.

தூண் நிறுத்தி
கூரை கிழித்து - கோபுரங்கள்.

முன்னொருபோதும் போகாத நான்
தேர் ஊர்ந்தபோது
சென்றேன்.

மகளுக்கு காட்டினேன்
நிலா!
இதுதானம்மா - எங்கள்
திராவிடக் கலைகள்.

பின்னொரு நிசை - திரும்பியபோது
கயிறு கட்டி
பலகை தொங்கியது.
'அலுவலர்கள் மட்டும்'
நிறுத்திய தூண்களில்
நான்கு வர்ணங்கள் கண்டேன்.

இப்போ
நான்
நிலாவுக்கு முன்னால்
அமவாசையானேன்.

*கரவைதாசன்*



படிப்பகம்

www.padippakam.com

# தேவையுடன்...

மனமொன்றைப் பிளந்து
ரணங்களை சுமந்து
தாயின்
கர்ப்பம் கிழிக்கும்
வாழ்க்கை தேவையா...
உயிர் ஒன்றைக் கொண்டு
உடலுருகும் தசைகள்- நாளை
கட்டையில் வேகும்
காகிதமாய் அலைபாயும்...
விழியோடு ஏனிந்த விளையாட்டு
தினம்
பசியோடு உயிர் ஒழுகும்
பசுமை நிலை கேட்டு
நினைவெல்லாம் கருகிப்போய்
நீண்டநாள் ஆச்சு
இதன் நினைவோடு- புதுக்கவிதை
பல நாட்கள் பாடியாச்சு..
ஓடுகின்ற ஆற்றோடு
கரைகின்ற தேகம்
ஓடையின் இரு சுவரில்
ஏங்கி உடல் வேகும்
வாழ்க்கை யெனும்
எச்சத்தைப் போட்டுவிட்டான் யாரோ..?
இதனைப் புனிதமாக்கி தினமும்
தேடுபவன் நீ யாரோ...?
உருகுகின்ற துளிகளெல்லாம்
ஒன்றாய் சேரும்...
வாழ்க்கை கண்ணீரில் தினம் தினம்
காவியங்கள் பாடும் -ஏதோ
தேவையுடன்...

அரங்கா றாதா
சங்கானை




**இந்துத்துவம், இந்துசமயம் சமூக மாற்றங்கள்**
ஆய்வுக்கட்டுரைகள்
ஆசிரியர்: ந.இரவீந்திரன்

இந்து மத வரலாற்றில் கேடுகள்தான் மலிந்து கிடந்ததா, சமூக மாற்றங்களை எதிர்த்து வரலாற்று வளர்ச்சியைத் தடுக்கும் விலங்காகத்தான் எல்லாக் காலங்களிலும் இந்து நெறி விளங்கியதா, அல்லது மாற்றங்களின் கருவியாகவும் வளர்ச்சியின் வழிகாட்டியாகவும் இந்து மதத்தால் இருக்க முடிந்ததா என்பதை கண்டறிய இந்த ஆய்வு ஏடு முயல்கிறது



**ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை**
ஆசிரியர்
எஸ்.எம்.கோபாலரத்தினம்

இது ஒரு சுவாரசியமான சிறு நூல் 1987ஆம் வருடத் தொடக்கத்திலும் இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த உணர்திறன் மிக்க ஒரு பத்திரிகையாளருக்கு ஏற்பட்ட அனுபவத்தை எடுத்துரைக்கிறது.




**ஓலை**
கொழும்புத் தமிழ்ச்சங்க
மாதாந்த மடல்

தொடர்புகளுக்கு...
கொழும்புத்
தமிழ்ச்சங்கம்
7.57, வது ஒழுங்கை
(உருத்திரா மாவத்தை)
கொழும்பு-06



படிப்பகம்

www.padippakam.com



# நெகிழ்ச்சி

**தாட்சாயணி**

வரவுப்பதிவேட்டில் கையெழுத்திட்டு விட்டு நிமிர்கையில் அவரைப்பார்க்க நேர்ந்தது. சற்றே இறுகிய முகம். நரைத்த தலைமுடி. முள்முள்ளாய் அரும்பியிருந்த வெள்ளைத்தாடி. தோளில் கொளுவிய துணிப்பையோடும், சால்வையோடும், சிகப்புப் பூப்பூத்து விரிந்த குடையாய் நின்றிருந்த அந்த மரத்தின் கீழ் அவர் நின்றிருந்தார். அசப்பில் அப்பாவைப்போலிருந்தது. அப்பாவை நினைத்ததும் கோபம் வந்தது. விறுவிறென்று விலத்திக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

இரவின் கோபம் இன்னமும் மீதமிருந்தது. உறக்கம் பாதிக்கோபத்தை மட்டுமே தின்றிருந்தது. அசதி உடலை முறித்துப்போட்டிருந்தது. என்ன இருந்து என்ன...? எல்லாம் இருந்தும் அதைப் பயன்படுத்தத்தெரியாத மனிதர்களோடு என்ன பேசித்தான் லாபம்...? எதற்கும் அப்பா அப்படிப் பேசியிருக்கவேண்டாம். இரவின் உரத்த கூச்சல்களாய் அந்தச்சச்சரவு வெளிகளை ஊடுருவிக்கேட்டிருக்குமோ...? யோசித்துப்பார்த்தால் அந்த அளவிற்கு அவனும் கத்தியிருக்க வேண்டிய தில்லை என்றே படுகிறது. எப்போதும் அமைதியை விரும்புகின்ற மனம் தேவைகள் பூர்த்தியாகாத நிராசையில் சுத்தமாய் எல்லை தாண்டி விடுகிறது. எந்தவித சூழல் பற்றிய பிரக்ஞைகளுமின்றி வார்த்தைகளைச் சுட்டுப்போட்டு விடுகிறது.

அப்பாவுக்கு ஏன்தான் இந்த வைராக்கியப் புத்தியோ தெரியவில்லை. மற்றவர்களிடம் பேசி அலுவல் பார்ப்பது குறித்து ஏன் இவ்வளவு இளக்காரமாய் நினைக்க வேண்டும். யார் யாரோ எப்படி எப்படியோ காக்கா பிடித்துக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இவர் என்னவென்றால் ஏற்கனவே பழகிய ஒருவர் காதில் இரண்டு வார்த்தைகளைப் போட்டு வைப்பதற்கு இவ்வளவு 'தடிப்பு'க் காட்டுகிறார்.

``எழுதிப்போட்டனி தானே ட்ரான்ஸருக்கு... அது வாறநேரத்திலை வரும்...`` என்று அவர் சொல்லிக்கொண்டிருப்பதைப்போல் வேதாந்தியாய் காத்திருக்க அவனால் முடியுமா? போன மாதம் சந்திரன் தான் விரும்பியபடியே திருகோணமலைக்கு மாற்றல் எடுத்துக்கொண்டு போய்விட்டான். வன்னியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த மித்திரன் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு வரப்போகிறான். இவன் மட்டும் முகமாலை பஸ்ஸில் நசிபட்டு, பளைக்குப் போய்வரவேண்டுமா, பஸ்ஸில் படுகிற கஷ்டத்தை நினைத்து பளையிலேயே வீடெடுத்து தங்கலாமென்றால் அது சங்கீதாவுக்குக் கஷ்டமாகிவிடும். அவள் யாழ்ப்பாணப் பாடசாலைக்குப் போகவேண்டிய நிலை. இருவேறு துருவங்களில் இருவரது வேலைத்தலங்களும் இருப்பதால் இவர்கள் படுகின்ற கஷ்டம் அப்பாவுக்கு எங்கே தெரியப்போகிறது...?

அப்பா கொஞ்சமாவது யோசித்துப்பார்க்கலாம். இந்த மாற்றம் மட்டும் கிடைத்தால் அவனது வாழ்க்கை எவ்வளவு இலகுவாக இருக்கும் என்று. எவ்வளவு நேரத்தையும், பஸ் காசையும் மிச்சம் பிடிக்கலாமென்று. எவ்வளவு ஆரோக்கியமாக நெரிசலற்ற வாழ்க்கை வாழலாமென்று. ஆனால் அப்பாவின் எண்ணம் வேறுவிதமாக இருக்கும், கடந்தகாலத்தைவிட்டு இறங்கிவர மறுக்கின்ற பிடிவாதத்தனம் அவரது பேச்சில் தெரியும்.

``நாங்களெல்லாம் படிக்கிற காலத்திலை எவ்வளவு தூரம் நடந்து பள்ளிக்கூடம் போயிருப்பம் தெரியுமோடா... கஷ்ரப்பட்டாத்தான் வாழ்க்கையிலை பக்குவம் வரும்...``

``நீங்கள் அப்பிடியிருந்தா நாங்களும் அப்பிடியோ இருக்கோணும்...`` வாய்வரை வந்துவிடும் வார்த்தைகள்... முதுமையைப் புண்படுத்துகிறோம் எனும் எண்ணமெல்லாம் துளிகூட இல்லாமல் வார்த்தைகள் சதிராடும்.

திருகோணமலையில் உயர்பதவியில் இருக்கும் கதிரேசனைப்பற்றிக் கதைத்தபோதுதான் அவனுள் அந்த யோசனை பளிச்சிட்டது. அப்பாவுக்கு அவரைத் தெரியுமென்றால், அப்பா சொன்னால் அவர் ட்ரான்ஸருக்கு உதவி செய்யமாட்டாரா?

``ஒருக்கா அவருக்கு `கோல்` எடுத்துச் சொல்லிவிடுங்கோ அப்பா. அவரைப்பிடிச்சால் ட்ரான்ஸர் எடுத்திடலாம்...``


படிப்பகம்

www.padippakam.com

## மலையகச் சிறார்கள்

பள்ளிக் கொழுந்துகள்
கிள்ளி எடுக்கப் பட்டு
கடைகளில் நடப்படுகிறது

ச.மணிசேகரன்

``அவங்களிடடை மண்டாடித்தான் ட்ரான்ஸர் எடுக்கோணுமெண்டா உனக்கு ட்ரான்ஸர் வேண்டாம். உனக்கென்ன குறை இப்ப. பஸ்ஸிலை போய் வந்துகொண்டிரு. ட்ரான்ஸர் வாறநேரம் வரட்டும்...``

சீ... என்று போயிற்று. அப்பாவாம் அப்பா.. இப்படி ஒரு அப்பா இருப்பாரா எங்காவது...? அப்போதிலிருந்து இப்படித்தான் அப்பா. எந்த ஒரு விஷயத்தைத்தான் அவனால் அப்பாவின் மூலம் சாதிக்க முடிந்திருக்கிறது.

ஐந்தாம் வகுப்பில் புலமைப்பரீட்சையில் அவன் எடுத்த புள்ளிகளைக் காட்டிலும் குறைவாக எடுத்த மாதவன் பெரிய பாடசாலை ஒன்றில் அனுமதி பெற்றபோது அவன் விட்டுக்கு வந்து குமுறினான்.

``என்னை விடக்குறைய மாக்ஸ் எடுத்தவன் அந்தப்பள்ளிக் கூடத்திலை சேர, நான் வேறையிலை சேருறதோ அப்பா...``

``அதுக்கென்னடா செய்யிறது? எங்கை படிச்சாலும் கவனமாப் படிச்சால் முன்னுக்கு வரலாம்...``

``எனக்கு அந்தப் பள்ளிக்கூடத்திலை தான் படிக்கோணும்...``

``அங்கை சேர்க்காட்டில் என்னப்பன் செய்யிறது...?``

``மாதவன்ரை அப்பா ஆரையோ பிடிச்சுத்தானை அங்கை சேர்ப்பிச்சவர். அப்பிடி நீங்களும் ஆரையாவது பிடிச்சு...``

``அந்தாள், கெஞ்சிக்கூத்தாடி எல்லாருக்கும் பல்லிளிச்சு அந்த இடத்தை வாங்கீற்றான் எண்டால் என்னையும் அப்பிடிச்செய்யச் சொல்லுறியேடா.. மானம், மரியாதை இல்லாமல் கெஞ்சுகிற வேலையெல்லாம் எனக்குச் சரிவராது...``

இதுதான் அவனது நினைப்பில் விழுந்த முதல் அடி. அதன்பிறகு எத்தனையோ? வாழ்வில் சந்தித்த பல தருணங்களில் அப்பாவின் வைராக்கியம் நெகிழ்ந்து கொடுக்காமல், கிடுக்கிப்பிடியாய் இறுக்கிய வேளைகளில் நொருங்கி விழுந்த கனவுகள் எத்தனை..?

கோவைகளுக்குள்ளிருந்து விடுபட்டு நிமிர்ந்த ஒரு தற்செயலான கணப்பொழுதில் அவன் மீண்டும் அவரைக் கண்டான். கணக்காளரின் மேசைக்குமுன் அமைதியாக அமர்ந்திருந்தார். அந்த முகத்தில் இறுகியிருந்த இறுக்கம் இப்போது தளர்ந்திருந்தது. லேசான சுருக்கங்கள் விழுந்து, எல்லாவற்றையும் கைவிட்டதனால், அமைதி நிலை கூடி வந்தது போல் இருந்தாலும் உள்ளூர ஒரு சோகம் இழை யோடியிருந்ததோ...?

அப்பாவிடமுள்ள முதுமையா இவரை அப்பா போல் தோன்றச்செய்கிறது. முகத்திலிருக்கின்ற உறுதியா? இல்லையே அப்பாவின் முகத்தில் இன்னும் கூடுதல் உறுதியிருக்குமே! அந்தக்கண்களா...?

நாசியா...? உதடுகளா...? எவை அப்பாவைப்போல் இவரைத் தோற்றமளிக்கச் செய்கின்றன. இவன் நெற்றியைப் பிசைந்தபடி யோசித்தான்.

எதுவாயுமிருக்கட்டும். எனக்கென்ன...? என்று மீண்டும் வேலையில் ஈடுபடுகையிலும் முகம் இடையிடையே நிமிர்ந்து நோட்டமிட்டது. இடையிடையே அவர் உதட்டில் அவிழ்கின்ற புன்னகை ஒரு, வெகுளிச்சாயையோடு இஷ்டமில்லாமல் புன்னகைப்பது போல் ஒரு பிரமை. கண்டவர் களிடமெல்லாம் போய் பல்லிளிக்கமாட்டேன் என்று அப்பா சொல்வது ஞாபகம் வருகிறது. இவரும் ஒரு காலத்தில் அப்படி நினைத்தவராய் இருக்கக்கூடும். இப்போது, ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தால் சிரிப்பவர் போலல்லவா தெரிகிறது.

அதுசரி, யார் அவர்...? கணக்காளருக்குத் தெரிந்தவராயிருக்குமோ? இந்தச் சிடுமூஞ்சி கணக்காளரிடமிருந்து அந்த ஆள் பாவம் எப்போது விடுபடப்போகின்றாரோ?

சட்டென்று ஒரு பிரகாசம் பரவிற்று உள்ளுக்குள். அது என்னவென்று உணர்ந்து அதற்கான காரண காரியங்களை உத்தேசித்து விளைவுகளை ஜீரணித்துப் பார்ப்பதற்குள் பூலோகன் குறுக்கிட்டான்.

``நான் ஷோட் லீவிலை போறனடா. அக்ரிங் சைன் வைச்சுத்தா...`` அவனது குறுக்கீட்டினிடையில் மனதுக்குள் ஒளிர்ந்த பிரகாசத்தின் மையப்புள்ளி எதுவென்பதை உய்த்துணர்வதில் சற்றே சிரமப்பாடு தோன்றியது. பூலோகனுக்காக ஷோட் லீவு ரெஜிஸ்தரில் கையொப்பமிட்டுக் கொடுத்தபோதும் மூளைக்குள் சிந்தனை வட்டம் சுழன்றது. என்ன யோசித்தேன்...? எது எனக்குள் ஒரு வெளிச்சத்தைப் பரப்பிற்று எனும் எண்ணத்துடன் அவரை மீண்டும் உற்றுப்பார்த்தான். ஒன்றும் பிடிபடவில்லை. தற்செயலாகத் திரும்பிய அவர் இவன் தன்னைப்பார்ப்பதைக் கண்டதும், மிக லேசாய் சிரித்தார். அவரது அந்தச்சிரிப்பு இவனுள் மீண்டும் அந்தப் பிரகாசத்தைத் தோற்றுவித்தது. அந்த அதிர்வில் இவனால் பதிலுக்குச் சிரிக்கக்கூட முடியாமல் போகக் குனிந்து கொண்டான். ஏன்.. ஏன்.. தன்னால் சிரிக்க முடியாமல் போயிற்று. நட்பாய் சிரித்த ஒரு மனிதரிடம் பதில் மலர்வு காட்டக்கூட முடியாத சிடுமூஞ்சியாகவா மாறிவிட்டோம். தன் மீதே கோபம் வர... அவருக்கு இதமாய் ஒரு புன்முறுவல் கொடுக்க இவன் நிமிர்ந்தபோது அவர்



படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம் திரும்பியிருந்தார். இவன் கூனிக்குறுகினான்.

இவனை சிரிக்கக்கூட செய்யாமல் அவனுள் விழுந்த அந்த அதிர்வு, அவனது தந்தை கூட இப்படி ஆகிவிட முடியும் என்கின்ற எண்ணமா? ஏன் இல்லை... ஏதோ ஒரு ஒற்றுமை, ஏதோ ஒரு ஒற்றுமை என்று உள்ளுக்குள் முரண்டு பிடித்துக் கொண்டிருந்த மனதுக்கு விடை கிடைத்துவிட்டது. இன்னும் சற்றுக்காலம் போய் அப்பா முதிர்ந்து நெற்றி சுருக்கி அவரது வைராக்கியம் தளர்ந்து இப்படி யாரிடமேனும் வந்து கதைக்கின்றபோது இப் படிதான் இருக்குமோ? இப்படி எதற்கேனும் மற்ற வர்களின் தயவுக்காக காத்திருப்பாரா அப்பா. இதுவரை சொந்தப் பிள்ளைக்காகக் கூட மற்றவர்களிடம் இரங்காதவருக்கு இனிமேலா இப்படி ஒரு நிலைவரும்? அவரது மிடுக்கும், கம்பீரமும் குலைந்து தளர்ந்து, அவரா..வது...? இப்படி ஆவதாவது?

``தம்பி...`` என்கின்ற அழைப்போடு பியோன் ராமசாமி இவனருகே வந்தான். அவனது கைகளில் சில தாள்களும், பணநோட்டுக்களுமிருந்தன.

``என்ன அண்ணை...`` என்றபோது கையிலுள்ள தாள்களை நீட்டினான். ஏதோ நிதி திரட்டப்படுகின்றது எனபது மட்டும் புரிய தாள்களைப்பார்த்தான். முதலாவது தாளில், ``தம்பிராஜா சுதர்சன் என்பவரது இருதய சத்திர சிகிச்சைக்காக நிதி அன்பளிப்புச் செய்வோர்`` என்ற தலைப்பின் கீழ் அவனது அலுவலக உத்தி யோகத்தர்களின் பெயர்களும் பதிவாகியிருந்தன. இவன் அடுத்துள்ள போட்டோப்பிரதித் தாள்களைப்புரட்டினான். அந்த சுதர்சனது புகைப்படம், அவனது இதயத்தின் புகைப்படம், அதன் அமைப்பு, பாதிக்கப்பட்ட பகுதிகள் பற்றிய விளக்கங்கள் ... மருத்துவ அறிக்கைகள் என்பன இணைக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே இவை பற்றிய விபரங்களைப் பத்திரி கையில் ரோட்டறிக்ட் கழக அறிவிப்பு மூலம் பார்த்த ஞாபகத்தில் பெயரைப் பதிந்துவிட்டு பொக்கற்றுக்குள் கையை விட்டு நூறு ரூபாத்தாள் ஒன்றை எடுத்தான். ராமசாமியிடம் அதைக்கொடுக்க நிமிர்கையில் அந்த மனிதர் இவனை ஆர்வமாகப்பார்த்தது தெரிந்தது. அவர் சிரிக்கக்கூடுமோ என்ற எதிர்பார்ப்பை அடக்கிக்கொண்டு அவன் கடமையில் கண்ணானான். முகம் தெரியாத அந்த சுதர்சனுக்காக மனம் பச்சாதாபப்பட்டுக் கொண்டிருக்க சில கணங்களுக்கு அவர் நினைவை விட்டு நீங்கியிருந்தார்.

``மிச்சம் பெரிய உபகாரம் ஐயா, நான் வாறன் அப்ப...`` கொஞ்சம் உரத்த இந்தக் குரலினூடு அவன் நிமிர்கையில், ராமசாமியிடமிருந்து அந்த ஆவணங்களை வாங்கி தனது துணிப்பையினுள் பத்திரப்படுத்தி பணத்தையும் பெற்றுக்கொண்டு அவர் செல்வது தெரிந்தது.

இவனுள் பட்டென்று ஒரு அதிர்வு. இவருக்கா ராமசாமி இந்தக்காசு சேர்த்தான்...?

``அண்ணை இஞ்சை வாங்கோ`` ராமசாமி கிட்டே வந்தான்.

## பாடசாலையில் மழை

வான் மூத்திரத்தில்
வாங்குகள் நனைகின்றன
மாணவர்கள் குளிரில்

ச.மணிசேகரன்

``இப்ப காசு சேர்த்ததை அவருக்கோ குடுத் தனீங்கள். ஆருக்கு ஹாட் வருத்தம்...``

``இப்ப வந்து இதிலை இருந்திட்டுப்போறாரே தம்பி. அவரிண்டை மோனுக்குத்தான் வருத்தம். மனுசன் பாவம். பெடியனைக் காப்பாத்திப்போடோணுமெண்டு ஒவ்வொரு ஒவ்விஸ் ஒவ்விசா ஏறி இறங்குது. இந்த வெய்யிலுக்கை...``

தூரத்தில் தோளில் துணிப்பாக்கைக் கொளுவியபடி சால்வையைத் தலைக்குப்போட்டுக் கொண்டு அந்த மனிதர் நடந்து போய்க் கொண்டிருந்தார். சில வேளை அவர் திரும்பிச் சிரிக்கக்கூடுமோ..? இவன் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாலே அவர் சிரிக்கக்கூடும். முன்னொரு தரம் சிரித்தாரே அதேபோல. ஆனால் அப்படிச்சிரிக்க வைத்தாலே அவன் பாவியாகி விடுவானோ?

எது எதற்காகவோ வைராக்கியம் கொண்டிருந்த வரை விதி இளக்கி, நெகிழ்த்திவிட அதைச் சாட்டாகக்கொண்டு அவரை சிரிக்கும்படி கேட்பதே பாவம்மோ...?

இவனுக்குச்சட்டென்று அப்பா ஞாபகம் வந்தது. அந்த மனிதர் கூட ஒரு காலத்தில் அப்பாவைப்போல இருந்திருக்கலாம். யாரிடத்திலும் எதுவும் இரந்து அறியாதவராய், யாரிடமும் பல்லிளிக்க வேண்டிய தேவை இல்லாதவராய், தானுண்டு தன்பாடுண்டு என்று வைராக்கியமாய் வாழ்ந்திருக்கலாம். இன்று பிள்ளையின் உயிர் என்ற ஒன்றுக்காக அவர் இவ்வளவிற்கு இறங்கி யிருக்கிறார் என்றால்... அவனுக்குத் தொண்டை அடைத்தது.

அப்பாமேல் எதற்குக் கோபப்பட வேண்டும். பெரிய பாடசாலையில் இடம் வாங்கித்தரவில்லையென்றா...? அல்லது ட்ரான்ஸர் எடுத்துத் தரவில்லையென்றா...? இதெல்லாம் எவ்வளவு சின்னப் பிரச்சினைகள். ஒருநாள் வந்தால், இந்த வைராக்கியமெல்லாம் தளர்ந்துபோய், இதோ வந்தாரே! அந்த மனிதரைப்போல அலுவலகம் அலுவலகமாய் ஏறி, ஒவ்வொருவருக்கும் சிரித்து... அப்பா... அப்பா... இவனுக்கு உடனடியாக அப்பாவைப் பார்க்கவேண்டும் போலிருக்கிறது.

●



படிப்பகம்

www.padippakam.com



# இளைய தலைமுறையினரின் பார்வையில் 'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்'

-பொன் கோபிநாத்

ஒவ்வொரு காலத்திலும் படைக்கப்படும் இலக்கியங்கள் எதிர்கால நிகழ்வுகளிற்கு கையேடுகளாய் அமையுமென்றால் அதுவே அந்த படைப்பாளியின் வெற்றியாகும். இராமாயணம், மகாபாரதம் என்ற இலக்கியங்களினூடாக தமிழர் பரம்பரையின் வீரப் பிரதாபங்களை கூறி பெருமைப்பட்டு கொண்டிருக்கும் கற்பனாவாத உலகில் மெய்ம்மை பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் பணியினை `பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்` என்ற நூல் நிறைவேற்றியிருக்கிறது என்றே கூற வேண்டும்.

இந்நூல் பேராசிரியர் க.கைலாசபதியினால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட சில கட்டுரைகளின் தொகுப்பாகும். இது பேராசிரியரின் முகவுரையூடாக எமக்கு அறியக் கிடைக்கிறது.

இந்நூலில் பேராசிரியர் பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற பரிசீலனையில் மொத்தமாக எட்டு கட்டுரைகளைத் தொகுத்தளித்திருக்கிறார். அவை ஒவ்வொன்றிலும் தமிழரின் பண்டைத்தெய்வங்கள், வாழ்க்கை நிலை, அரசியல் நடைமுறைகள், வழிபாடுகள், இலக்கியப்பண்புகள் என்பன பற்றிய உண்மைகளை அகழ்வாராய்ச்சியாளர்களின் ஆய்வுக்குறிப்புகளுடன் தந்திருக்கிறார்.

இந்நூலின் முதலாவது கட்டுரையாக அமைந்துள்ள `தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி...` எனும் கட்டுரையில் பண்டைத்தமிழரின் தெய்வம் பற்றிய செய்திகளைத்தருகிறார். கி.மு2500-1500 காலப்பகுதிகளில் நிலவிய சிந்துவெளி நாகரிகத்திற்கு நம்மை அழைத்துச்செல்லும் பேராசிரியர் சிவனை பரம்பொருளாக கொண்ட சைவசமயம் பற்றிய வரலாறு தேடிச் சென்ற தான் சிவனுக்கு சிறப்பிடமற்று தமிழர் வழிபாட்டுத் தெய்வமாக அன்னை வழிபாடு சிந்து வெளிநாகரிகத்தில் நிலவியதை அறிந்து கொண்டதாக கூறுகிறார். சிந்துவெளி நாகரிகத்தில் அன்னை வழிபாடு நிலவியமைக்கு முக்கிய காரணம் அக்காலத்தில் நிலவிய சமூகவியல் நிலைமையான தாய்வழி முறையே என கூறும் பேராசிரியர் கி.மு. 500யின் பின்னரான ஆரியர் வருகையின் காரணமாக சமூகவியல் நிலைமை தந்தை வழிமுறையாக மாற்றம் பெற சிவன் எனும் தெய்வம் பரம்பொருளாக மாற்றம் அடைகிறது என்கிறார் ஆசிரியர். கி.பி முதலாம் நூற்றாண்டுக்கு பின் நிலவிய சைவ வைணவப்போர், சமணபௌத்தருக்கும் சைவ வைணவருக்கும் இடையிலான போர் என்பவற்றை களப்படுத்தி அரச பரம்பரை மதமாக விளங்கிய சைவமதம் அழியாது நிலைபெற்றது என்றும் பெயர் தெரியாத சிந்துவெளி கடவுளான சிவன் பெயரும் குணமும் பெற்ற சிதம்பரநாதனாக மாறிவிடுகிறான் என நிறைவு செய்கிறார்.

`அழிவும் ஆக்கமும்` எனும் இரண்டாவது கட்டுரையில் அரசர்களின் கருத்துப்பரப்பிகளாக இருந்த புலவர்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். பண்டைத்தமிழர்களின் அரசியலில் புலவருக்கு இருந்த பிணைப் பினை இலக்கியங்களில் உள்ள உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

போர்க்களங்களிற்கு சென்று ``மன்னனுக்காய் இறப்பது சிறப்பது`` என்றும் போர் முடிவில் மன்னன் புகழைமட்டும் பாடியதில் இருந்தும் புலவர்கள் அன்றைய காலத்தில் ஆளும் வர்க்கத்தின் சார்பாளராக பணி செய்திருந்தனர் என்ற உண்மையினை காட்டுகிறார்.

`வீர வணக்கம்` என்ற அடுத்த கட்டுரையில் பண்டைத்தமிழரின் வழிபாட்டு முறையின் வழியாய் இன்று நிலைபெற்றிருக்கும் சிறுதெய்வ வழிபாட்டின் உருவாக்கத்தினை நெளிவுபடுத்தியிருக்கிறார் பேராசிரியர். இறுதிச் சடங்குகளே வீரவணக்கத்தின் விளைநிலம் என்றும் போரில் இறந்த வீரனுக்காய் அமைக்கப்பெற்ற `நடுகல்` களும் சிறுதெய்வ வழிபாட்டிற்கு மூலவேர்களாய் அமைந்தன எனக் கூறுகிறார் பேராசிரியர். இன்று கிராமங்களில் வழங்கி வரும் ஐயனார், மதுரை வீரன், இருளன், கறுப்பன்,நொண்டி எனப்படும் சிறு தெய்வங்கள் இந்த நடுகற்கள் வழிபாடு முறையில் வந்தனவே என்கிறார் பேராசிரியர்.

`பேய்மகளிர்` என்ற கட்டுரையில் பண்டைத்தமிழரின் ஆணாதிக்க நிலையையும் பெண்ணடிமைத் தனத்தினையும் காட்டுகிறார். சமூகம் பற்றிய சிந்தனையுடன் ஒரு பெண் கிளர்ந்தெழும் போது அவளை பேய் என்றும் சூனியக்காறி என்றும் சமூகம் ஒதுக்கி வைத்ததை பற்றி பேராசிரியர் இக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

``நாடும் நாயன்மாரும்` எனும் கட்டுரையிலே ஆசிரியர் திருமுறைகள் படைத்த நாயன்மார்கள் மனதில் நிலவிய பக்கச்சார்பு தன்மையினை அவர்களது பாடல்களினூடாக வெளிப்படுவதை பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளளார்.

`அறமும் அரசியலும்` என்ற நூலின் ஆறாவது கட்டுரையில் பண்டைத்தமிழர் வாழ்வில் அறம் எனும் பதத்தால் பிரயோகிக்கப்பட்டிருந்த அரசியல் அதிகாரம் பற்றி `சிலப்பதிகாரம்`, மணிமேகலை` எனும் இரட்டைக் காப்பியங்களின் சம்பவங்களின் ஊடாக முன்வைத்திருக்கிறார்.

இந்நூலின் ஏழாவது கட்டுரையாக அமையப் பெற்றுள்ள `பேரரசும் பெருந்தத்துவமும்` என்ற கட்டுரையில் மன்னர்களின் ஆதிக்க வெறியினையும், மன்னராட்சி என்ற பெயரில் நிலவிய ஒடுக்குமுறை ஆட்சி அமைப்பினையும் எடுத்துக்காட்டுகிறார் பேராசிரியர்.

இறுதிக்கட்டுரையாக அமைந்துள்ள `பொய்மையும் மெய்மையும்` என்ற கட்டுரையில் பண்டைத்தமிழர் இலக்கியங்களில் மிகுந்திருந்த கற்பனைகள் பற்றியும், பேய்கள் பற்றியுமான கருத்துக்களை ஆய்வறிவுத்தளத்தில் நின்று எடுத்துக்கூறும் பேராசிரியர் இன்றைய இலக்கியங்கள் மக்கள் பற்றியும் யதார்த்த வாழ்நிலை பற்றியதாகவும் அமைதல் வேண்டும் என்கிறார்.

•

*கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற பேராசிரியர் க.கைலாசபதியின் உவது நினைவுதினக் கருத்துரையின் சுருக்கம்*



படிப்பகம்

www.padippakam.com

# மன்னிக்க வேண்டுகிறேன்

என் மரியாதைக்குரிய விருந்தினர்களே, மன்னிக்க வேண்டுகிறேன்,
செய்தி வாசிப்பவர் தனது கடைசி அறிக்கையிற் பொய்யுரைத்துள்ளார்:
பக்தாத்திற் கடல் இல்லை,
முத்துக்களோ
ஒரு தீவோ கூட இல்லை,
சிறு தெய்வச் சின்னங்களது அரசிகள் பற்றியும்
மாணிக்கப், பவளத் தீவுகள் பற்றியும்
சுல்தானின் கரங்களினின்றும் வழியும் ஆயிரமாயிரம் தீவுகள் பற்றியும்
சிந்துபாத் சொன்ன அனைத்தும்
எனது சிற்றூரின் வேனிற்கால வெக்கையில்,
நண்பகற் சூரியனின் தீய்ந்துபோன நிழல்களில்,
நாடுகடத்தப்பட்ட நட்சத்திரங்களது மோன இரவுகளிற் பிறந்த கட்டுக்கதையே.
'நம்மிடம் ஒரு காலத்தில்
ஒரு கடலும் முத்துக்களும் மினுக்கியெடுத்த நிலவும் இருந்தன.
மாலையில் மீண்டு வரும் மீனவர் இருந்தனர்.'
செய்தி வாசிப்பவன் தனது கடைசி அறிக்கையில், இன்னும்
'நம்மிடம் ஒரு காலத்தில்
வஞ்சகமற்ற ஒரு கனவுச் சுவர்க்கம் இருந்தது' என்றும் உரைத்தார்.
ஏனெனில், என் மரியாதைக்குரிய விருந்தினர்களே,
மீண்டும் பிறப்பதற்காக நாம் பொய்யுரைக்கிறோம் -
தம்மிடம் ஒரு காலத்தில்
ஒரு கடலும் சிப்பிகளும் முத்துக்களும் பிறந்த நேரமும் இருந்தன.

என் மரியாதைக்குரிய விருந்தினர்களே, மன்னிக்க வேண்டுகிறேன்.
செய்தி வாசிப்பவர் தனது கடைசி அறிக்கையிற் பொய்யுரைத்துள்ளார்:
பக்தாத்திற் கடல் இல்லை.
முத்துக்களோ
ஒரு தீவோ கூட இல்லை.

*B@லாண்ட் அல்-ஹைடரி*
*(பிறப்பால் ஈராக்கிய லெபனான் நாட்டவர்*


படிப்பகம்

www.padippakam.com

# நல்ல திரைப்படமொன்றுக்காக....

`மெய்யவன்`

`விரும்பியோ விரும்பாமலோ தென்னிந்தியத் திரைப்படங்கள் நல்லனவோ அல்லனவோ எமது வீடுகளுக்குள் இழைந்துவிடுகிற காலம் இது. திரையரங்குகளுக்குச் சென்று படம் பார்க்கிற வழமை பலரிடம் இல்லாதொழிந்துவிட்டது. காலவிரயம் பண விரயம் அதிக அலைச்சல் முதலானவற்றைக் காரணம் காட்டியும்- வீட்டில் ஒரு தொலைக்காட்சிப்பெட்டி இருந் தால் அடிக்கடி படம்பார்க்க இப்போதிருக்கிற வசதிகளைக் கருதியும் பலரும் அரங்கு சென்று படம் பார்ப்பதைத் தவிர்த்து ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கியிருக் கிறார்கள். `வீடியோ டெக்`வசதிகளும் இருந்தால் விரும்பிய `கொப்பி` எடுத்துப்பார்க்கவும் வசதி.

பரவலாக அடிபடுகிற அபிப்பிராயங்கள் விமர்சனங்கள் மற்றும் நடிக நடிகையர் பற்றி மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பதிவுகள் இவற்றின் அடிப்படையில் ஒரு படம் நல்ல படமாய் இருக்கும் என்று திரைப்பட ரசிகர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். ஒரு நல்ல படம் என்பது இப்படியிருக்கும் என்று கூட ஆளுக்காள் வேறுபட்ட அபிப்பிராயத்தைக் கொண்டிருக் கிறார்கள். திரைப்பட ரசனையும் காலத்துக்குகாலம் மாறிவருகிறது.

இந்த நிலையில் இப்போதெல்லாம் வெளிவருகிற திரைப்படங்கள் பெரும்பாலானவை நன்கு முன்னேறியுள்ள தொழில் நுட்பத்துறையின் உதவியுடன் பார்வையாளரின் வரவேற்புக்குரிய அம்சங்களைப் பரவலாகத்தூவி உருவாக்கப்படுகின்றவையாக இருக்கின்றன. அடிப்படையில் பார்வையாளரின் அறிவு, சாதாரண வாழ்வு பற்றிய மனப்பாங்கு இவற்றை வெகுவாகப் பின்தள்ளிய போக்கே இவற்றின் பண்பாக உள்ளபோதும் சிலவித்தியாசமான அம்சங்களையும் செருகிய தயாரிப்புகளாகவே அவை அமைந் திருக்கின்றன.

அண்மையில் வெளிவந்த பிதாமகன் அப்படியான ஒரு திரைப் படமாகவே திகழ்கிறது.



இடுகாட்டிலேயே பிறந்து வளர்ந்து பிரேதங் களை எரிக்கும் தனது வளர்ப்புத் தந்தையின் வாரிசாக உருவாகும் ஒருவன் வாழ்வின் சோபித மான பண்புகள் எதனையும் அறிந்திராத, சராசரி உலக அறிவோ மனித இயல்பு களோ மிகமிகக் குறைந்த வனாக உள்ள ஒருவன்- மாறுபட்ட ஒரு சூழலில் வாழ. நேர்ந்த போது அனுபவிக்கின்ற மனித நேயம், அன்பு, பரிவு, உதவும் இயல்பு இவற்றினால் உள்ளுரக்கவரப்படுகிறான். கள்ளம் கபடமில்லாத அவனிடம் விபரமறியாத முரட்டுத் தனமொன்றே காணப்படுகிறது. தன்னை நேசித்த அன்பு செலுத்தி உதவிய ஒரு நண்பன் வஞ்சகமாகக் கொல்லப்படுவதை அறிய நேர்ந்த போது அந்தக் கொலைகாறரை இனம் கண்டு கொலைசெய்து பழிதீர்த்துக் கொள்கிறான் என்பமே மையக் கதை. 'சித்தன்' என்னும் பெயர் கொண்ட அந்தப் பாத்திரச்சித்தரிப்பு- அந்தப் பாத்திர மாகவே மாறிவிடும் விக்ரம்- அவரது நுண்ணிய பணபு கள் பல கொண்ட குணச்சித்திரம்- அதை அவர் வெளிக் காட்டிய விதம். இவையெல்லாம் பாராட்டுக்குரிய தாகவே உள்ளன.

ஆனால் இந்தத் திரைப்படத்தில் பொருந்தாத துண்டுகளாகத்துருத்தித் தெரியும் நகைச்சுவை மற்றும் பாடற்காட்சிகள் இந்தத் திரைப்படத்தின் நல்லம்சங்களை மேவிவிடுகின்றன. அதுபோலவே சித்தனின் முரட்டுத் தனத்தை மிகையாகச்சித்தரிக்கும் தன்மையும் படத்தின் இயல்பான தன்மைக்கு குந்தகம் விளைவிக்கின்றன. பொதுவாகவே தென்னிந்திய தமிழ்ச்சினிமாவில் முற் போக்கான பார்வை என்று ஒரு கருத்தை வைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட ஒருவனை முதன்மைப்படுத்தும் தன்மையில் தரப்படும் படைப்பொன்று வரவேற்புப்பெறும் என்ற எதிர்பார்ப்பில் படங்கள் தயாரிக்கும் போக்குக் காணப்படுகிறது. இதற்குப்பல உதாரணங்களைக் காட்டலாம். அண்மையில் சர்ச்சையைக்கிளப்பிய சண்டியர், தேவர்மகன் முதலானவை இதனை அடிநோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டவை என் பதைப்பலரும் அறிவார்கள். `பிதாமகன்` என்னும் பெயருக்கூடாக உருவாக்கப்பட எதிர்பார்க்கப்பட்டது எது என்பதும் யோசிக்கவேண்டிய விடயம்தான்.

தற்போதெல்லாம் தமிழ்ச்சினிமாவின் நகைச்சுவை தரமிறங்கி அதளபாதாளத்துக்குப் போய்விட்ட விடயம். இந்தப் படத்தில் மிகவும் ரசாபாச மாகத் தரங்குறைந்து போயிருப்பதும்- கக்கூசுக்குப் போதல் என்பதை வெளிப் படையாகச் சொல்லுவது ஒரு நகைச்சுவை அம்சமாகிப் போகின்ற துரதிஷ்ட நிலை யாகி விட்டதும் கவனிக்கப்பட வேண்டிய குறைபாடாகும்.

இன்னொரு விடயம். பழி வாங்கல் என்ற நடவடிக் கையை மையப்படுத்தியே நிறையத் திரைப்படங்கள் வந்து விட்டன. இனியாவது பார்வையைத்திசை திருப்பி உலகத்தரத் தில் வருகின்ற நல்ல சினிமாக் களைக் கவனித்து ஓரளவுக் காவது நல்ல படைப்பைத்தர முயலக் கூடாதா?



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைத் தமிழ் அரங்கு அது பேசிய பொருள்களும் பேசிய முறைகளும் இனிப் பேச வேண்டியவையும்

✸ சிங்கள தமிழ் கலைக்கூடலுக்கான கட்டுரை

குழந்தை ம.சண்முகலிங்கம்

நாடக அரங்கு எப்பவுமே தனது காலத்தின், தான் வாழும் சமூகத்தின் உள்ளுணர்வின் உயிர் மூச்சுக்களை வெளிக்கொணர்ந்தவாறே இருக்கும், இருக்கவேண்டும். காலம் தவறுமிடத்து கலையும் தவறுவதுண்டு. இருப்பினும், தமது காலத்தின் சமூகத்துள் நின்றுகொண்டு, அதன் உள்ளுணர்வின் உயிர்மூச்சைச் சுவாசித் துணர்ந்துவிட்டு, அக்காலத்துள் வளர்ந்துவிடாது, கருக்கொண்டு பிரசவிக்கப்படும் படைப்புக்கள்தான் காலத்தை வழிநடத்தும். அவ்வாறு இல்லாதவை காலத்தோடு கரைந்துவிடும்.

இன்று எமது தேசம் நீண்ட காலத்தின்பின், கைநழுவிப்போக விட்டுவிட்டு நின்று ஏங்க முடியாததொரு அரும்வாய்ப்பினை துரும்பிளை ஒன்றில் தொங்கவிட்டுவிட்டுத் தவித்து நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது. வாய்ப்பு அறுந்து விழுந்துவிடுமோ என்ற ஏக்கம் நல்ல நெஞ்சங்களை வாட்டுகிறது. அந்த ஏக்கத்தின் விளைவே இந்த ஒன்றுகூடல். ஆகி முடிந்தவற்றை அவசரமாகக் கணக்கெடுத்துப் பார்த்துவிட்டு, இனி ஆகவேண்டியவற்றை வகுத் தமைத்துக்கொள்வதே இதன் நோக்கு என நாம் நினைத்துக்கொள்ளலாம்.

இணைந்து கருமமாற்றுதல் என்றுமே நல்லது. நாடகம் கூட்டுக்கலை என்பதால் கூடிச்செயல்புரியும் பண்பை அது வளர்த்துவிட வாய்ப்பிருக்கிறது. அப்படி இருந்தும் நாடகக் கலைஞர் மத்தியிலும் பிளவும் பிரிவினையும் நிலவுகிறது. அப்படி இருந்துகொண்டு எப்படி நாம் அரசியல் வாதிகளைப்பார்த்து ஒன்றுபடுங்கள் என்று கேட்க்க முடியும்?

இதுதான் நிலைமை என்பதற்காக நாம் பேசாது இருந்துவிட முடியாது. கூடிப்பேச முடிந்தவர் முதலில் கூடிப்பேசுவோம். முடிந்தவற்றைப்பேச முற்படும்போது நடந்த தவறுகளை நல்ல முன்னேற்றத்துக்கான படிக்கட்டுக்களாக அமைத்துக்கொண்டு அவற்றின் மீது பாதம் வைத்து நடந்து மேல்நோக்கிச் செல்ல முற்படுவோம், முன்னேறுவோம்.

'அரசியல்' என்ற விஷயத்தைப் பரந்த பொருளில் பார்த்தால், மனிதன் சம்பந்தப்பட்ட அனைத்துமே அரசியல்தான். மதங்கள் கூட அரசியலுக்கு அப்பாற்பட்டவையாக இருந் ததில்லை; இருக்கப் போவதுமில்லை. இந்தக்கருத்துநிலையில் நின்று நோக்கினால், இலங்கைத்தமிழ் அரங்கு பேசியவை யாவுமே அரசியல்தான் என்று ஒரேயடியாகக்கூறிவிட முடியும். அவ்வாறு கூறுவதைப் பலர் விரும்பார். எனவே, சம்பிரதாய மரபில் நின்று 'பாடு பொருளை'ப் பல பிரிவுகளுக்குள் வகுத்து நோக்க முற்படுவோம்.

இலங்கைத்தமிழருக்கும் ஒரு தனித்துவமான அரங்கப்பாரம்பரியம் இருக்கிறது. அந்தப்பாரம்பரியத்தின் ஆரம்பகால ஆற்றுகைகளைக் 'கூத்துக்கள்' என நாம் பெயரிட்டுக்கொண்டுள்ளோம். 'கூத்து' என்பது தமிழ் கூறும் உலகுக்கு பொதுவான ஒன்றாக இருக்க. 'நாட்டுக்கூத்து' என்பது இலங்கைத்தமிழுக்குரியதாக உள்ளது. 19ம் நூற்றாண்டில் வந்த 'இசை நாடக'த்தையும் உள்ளடக்கி, இவை அனைத்தையும் 'பாரம்பரிய அரங்கு' என்போம். பாரம்பரிய அரங்குகள் யாவும் ஆடலையும், பாடலையும், கதை சொல்லலையும் தமது அளிக்கைச் சாதனங்களாக்கி கொண்டுள்ளன. அவை தமது கதைகளை ஐதிகங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள், வரலாறு என்பவற்றிலிருந்து பெற்றுக்கொண்டன. இவற்றை ஆடியோர் பெரும்பாலும் தமிழ்ச்சமூகத்தின் அடிநிலை மக்களாகவே இருந்தனர்.

இந்தப்பாரம்பரிய அரங்கு ஆற்றுகைகள் சிலவற்றில், சிலர் அந்த அந்தக்கால அரசியல் விஷயங்களையும் இடையிடையே சிறிய அளவில் பேசியுள்ளனர். இலங்கைத்தமிழர் தம் உரிமை பற்றியும், இலங்கையின் சுதந்திரம் பற்றியும், அந்நியருக்கு நாடு அடிமையாக இருப்பது பற்றியும் இவ்வரங்குகளில் பேசப்பட்டுள்ளது. பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளை அளிக்கை செய்த கலைஞர்களால்கூட தமது காலத்து அரசியலைப்பேசாது இருக்க முடியவில்லை என்பதை இங்கு நாம் உணரலாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலேயர் வருகையோடு வந்த நவீன காலத்தின் பேறாக எமக்கும் புதியதொரு அரங்கம் அறிமுகமாகிறது. அது ஆங்கில மொழி மூலம் எமக்கு அறியத் தரப்படுகிறது. ஆடல் பாடலோடு இருந்த எமது மரபுவழி அரங்கு போலல்லாது, அது உரைநடை அரங்காக இருந்தது. அது மேலைப்புல நாடகங்களின் மொழிபெயர்ப்புக்களையும் தழுவல்களையும் கொண்டதாகவும், அவற்றின் வடிவத்தைத்தழுவி எழுதப்பட்ட தமிழ் நாடகங்களாகவும் இருந்தன. தமிழ் நாட்டின் தமிழ் அரங்கு மூலமாகவே இவ்வரங்கு எமக்கு முதலில் அறிமுகமானது.

இவ்வரங்கில் பிரதானமாக ஈடுபட்டவர்கள் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவராவார். நாட்டின் அரசியலில் ஈடுபடுபவர் பெரும்பாலும் மத்தியதர வர்க்கத்தினராக இருந்த போதிலும் ஆரம்ப காலத்தில் இப்புதிய அரங்கை அறிமுகம் செய்தவர்கள் தமது நாடகங்களினூடாக எமது நாட்டு அரசியலைப்பேசவில்லை. அவர்கள் ஷேக்ஸ்பியரது நாடகங்களின் தமிழ்நாட்டுத் தழுவல்களையும், தமிழ்நாட்டார் தம் வரலாற்று நாடகங்களையுமே பெருமளவில் ஆற்றுகை செய்தனர். அவர்களில் ஒரு சிறுகுழுவினர் மட்டும் எமது தேசத்தின் தேசிய அரசியல் பற்றி அரங்கினூடே முதலில் சிந்தித் தவர்கள் என்ற முக்கியத்துவத்தைப் பெறுகின்றனர்.

மேலைத்தேச அறிவியல் செல்வாக்கால் இலங்கைத் தமிழ் அரங்கில் ஏற்பட்ட மாற்றம் ஷேக்ஸ்பியரை எமக்கு அறிமுகப்படுத்தியதோடு நின்றுவிடவில்லை. அது பல ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடகாசிரியர்களையும், மேலைத்தேய நாடக, அரங்க மோடிகளையும் வகைகளையும் அறிமுகப்படுத்திவந்தது. அந்த வகையில் எமக்கு அறிமுகமான இயல்பு நெறிவாதம், 1940, 1950களில் தமிழ் மக்களது அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளைத் தற்புதுமை நாடகங்களாக, காத்திரமான முறையில் படைக்கும் ஒருவரைத் தோற்றுவித்தது.

அந்த இயல்பு நெறிவாத நாடகங்கள் எமது மண்வாசனையைத் தூய்மையான முறையில் பரப்பி நின்றன. தமிழர்தம் அகமுரண்பாடுகளான சாதியம். செல்வச்செருக்கு. அந்தஸ்தின் அடியாக எழும் ஏற்றத்தாழ்வுகள். வர்க்கக்குணாம்சம், நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்பவற்றைப் பரந்த அளவில் அவை பேசிநின்றன. அத்தோடு இலங்கைத் தேசத்தின் அரசியல் பற்றியும், தமிழ்த்தேசியத்தின் அரசியல் பற்றியும் அவை பேசின. தமிழ்த்தேசியத்தின் அரசியல் பற்றிப் பேசுமிடத்து அரசியல் வாதிகளின் போலித்தனங்கள், சந்தர்ப்பவாதங்கள், இனவெறிப்போக்குகள், சுயநல அரசியல்கள், தன்னலப்போக்குடைத்தலைமைகள், பகைமுரண் பாட்டுப்பிடிவாதங்கள், ஒற்றுமையின்மை எனப் பலவற்றையும் எடுத்துக்காட்டி நின்றன. நேர்மையான முறையில், சரியான வழியில் நாட்டுக்காக உழைக்க இளைஞர் முன்வர வேண்டும் என்பதையும் இந்த நாடகங்களில் சில வலியுறுத்தி நின்றன.

இயல்பு நெறிவாத நாடக முறைமையை உள்வாங்கிய நிலையில், இலங்கைத்தமிழ் தேசியத்தின் பிரதான மன்னர்களில் ஒருவரது வரலாறும் நாடகமாக்கப்பட்டது. அந்த நாடகம் பற்றிப் பேசுமிடத்து, 'விடுதலை பெற்ற இலங்கையின் வரலாற்றைப் புதுமுறையில் ஆராய வேண்டும்', என்றும்; 'வரலாற்று வீரர்களைப்பொதுமக்கள் அறியவேண்டுமானால், வீரர்களின் வாழ்க்கையை நாடகமாக்க வேண்டும்', என்றும் அன்னவரால் அன்றே கூறப்பட்டது.

இந்தவாறு, மேற்கண்ட இயல்பு நெறிவந்த நாடகங்களும் வரலாற்று நாடகமும் சமூக விமர்சனங்களாகவும் அரசியல் விமர்சனங்களாகவும், சன்னதமற்ற சீர்மைச் செம்மை வாய்ந்த கருத்துரை களாகவும் அமைந்தன.

1956 இலங்கைத்தேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பணபாட்டுத்தளங்களில் பாரிய சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு காலகட்டத்தின் பிரதான மைல் கல்லாக அமைந்தது. அதேவேளையில் துரதிஷ்டவசமான இனமுரண்பாட்டுக்கான அத்திவாரம் இடப்பட்ட ஆண்டாகவும் அமைந்துவிட்டது. குறுகிய நோக்குடைய சுயநல அரசியல் தேசிய நோக்கின் கண்களை இறுகக்கட்டிவிட்டது. அதன் கட்டவிழ்ப்பு இன்னமும் சாத்தியமான ஒன்றாகத்தெரியவில்லை.

எது எவ்வாறு அமையினும், 1956 தேசிய சிந்தனையின் அடியாக எழுந்த பண்பாட்டுத் தேடலை இலங்கையின் இரு பிரதான இனங்கள் மத்தியிலும் ஊக்குவித்தது. தேசியத்தை நிறுவும், பலப்படுத்தும், பறைசாற்றும் மூலங்களில் ஒன்றாகப் பாரம் பரியக்கலைகள் அடையாளங்காணப்பட்டன. அக்கலைகளில், ஆடல், பாடல், கதை சொல்லல், விளையாட்டு, செய்துகாட்டல் என்ற கலை மூலங்களைக் கொண்டிருந்த பாரம்பரிய ஆற்றுகைகள் அதாவது இலங்கையின் மரபுவழி அரங்குகளின்பால் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையின் இரு இனங்களையும் சார்ந்த இரண்டு மூலங்கள் தனித்தனியே தத்தம் இனங்களின் பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளை மீள்கண்டுபிடிக்க முற்பட்டனர். அவர்களது அயராத அரும்பணி, அவரவர் சமூகத்தில் வியக்கத்து விழிப் புணர்வை, தேசியக்கலை நாட்டத்தை, பெருமிதத்தை ஏற்படுத்தியது. இவர்களது முன்முனைப்பு, சிங்கள, தமிழ் அரங்கியற் சிந்தனையில் பாரியமாற்றத்தை ஏற்படுத்தியது.

இலங்கைத்தமிழ் அரங்கைப் பொறுத்தவரையில், மேற்கண்ட செயலால் விளைந்த, பாரம்பரியக்கூத்தின் மறுமலர்ச்சி இன்றுவரை மிகுந்த ஆர்வத்தோடு நோக்கப்படுகிறது. கூத்துத்துறையில் ஈடுபடுவதென்பது தமக்குப் பெருமை சேரக்கூடிய ஒன்று என்று இன்றுவரை பலர் முனைப்போடு ஈடுபட முற்பட்டு வருகின்றனர். இவ்வாறு ஈடுபட்டு நிற்பவர்களுள், 'இலங்கைத் தேசியத்துள்' தம்மை நிறுத்திப்பார்க்கின்றவர்களும், 'தமிழ்த்தேசியத்துள்' தம்மை இட்டுக்கொள்கின்றவர்களும் உள்ளனர்.

மீள்கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க்கூத்துக்கள் தமது உருவ உள்ளடக்கத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த



படிப்பகம்

www.padippakam.com

முனையவில்லை. முக்கியமாக உள்ளடக்கத்தில் எந்த வகையான மாற்றமும் செய்வது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. எமது அரங்க ஆற்றுகையின் மூலவேர்களை எமக்கு அடையாளங்காட்டுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. எனவே, இவர்கள் தயாரித்த கூத்துக்களும் முன்னைய கூத்துக்களின் சுருக்கங்களாகவே இருந்தன. அவை வட்டக்களரிகளை விட்டிறங்கி வந்து படச்சட்ட மேடைகளில் ஏறிநின்று தமது ஆற்றுகைகளை நிகழ்த்தின. பழைய கூத்துக் களைப்போல இவையும் இதிகாச, புராண, வரலாற்றுக் கதைகளையே கூறின. அவற்றை அப்படியேதான் கூறின. எந்த அரசியற்பொடி வைத்தும் அவை ஆற்றுகை செய்யப்படவில்லை.

இருப்பினும், அவற்றின் பாடுபொருளாக இதிகாச புராணங்கள் கூறும் அறப்பொருள்கள் இருந்தபோதிலும் அவற்றின் பேசாப்பொருளாகத் 'தேசியம்' தொக்கு நின்றது. தமிழர் ஒரு தனி இனத்தவராக இலங்கையில் வாழ்கின்றனர் என்ற எண்ணத்தை அவர்களுக்கு அவை ஊட்டின. மலையகம், மட்டக்களப்பு, மன்னார், முந்தல், வன்னி, திருகோணமலை, யாழ்ப்பாணம் எனப் பரந்து வாழும் இலங்கைத்தமிழர் அனைவரும் மொழியால் மட்டுமல்லாது தாம் ஆடும் கூத்துக்கலைகளாலும் ஓரினத்தவர் என்ற நினைப்பை இவை கொடுத்தன. அரசியல் எண்ணத்தால் ஒன்றுபடுத்துவது கடினம் என்று இருந்த இவர்களை இவர்தம் கூத்துக்கலைகளால் ஒன்றுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. இவர்கள் ஒன்றுபடுவது இவர்தம் அரசியல் தேவையாக இருந்தது.

இங்கு இனங்களும் தமது தனித்துவ அடையாளங்களை நேசம் நிறைந்த நட்போடு நிலை நிறுத்துவதை விட்டு விட்டு, பகை மோதலோடு அவற்றை பயன்படுத்த தூண்டும் ஒரு அரசியற்சூழல் இந்தத்தேசத்தில் வளர்தெடுக்கப்பட்டுவிட்டது. இரு இனமும் ஒன்றைஒன்று பகையோடு நோக்காது தத்தம் இனத்துவ அடையாளங்ளை பெருமையோடு சூடிக்கொண்டு, இந்தத் தேசத்தின் வளங் களையும் வாய்ப்புக்களையும் சம உரிமையோடு நுகர்ந்து கொள்ளும் நாளுக்காக எமது எதிர்கால உழைப்பை நாம் ஊதியமாக்கத்தயாராக இருக்கிறோமா? இருக்கவேண்டும்; இல்லையேல்... விடை உங்களது.

1950, 1960களில் வேறு சில அரங்க ஆற்றுகைகளும் இடம்பெற்று வந்தன. அவற்றை பல வகையினவாகப் பிரித்துக்கொள்ளலாம்: 1. கிராமத்து இளைஞர்கள் தாம் பார்த்த சினிமாப்படங்களை ஒத்த முறையில் நாடகங் களாக தமது மகிழ்வுக்காக மேடையேற்றிவந்தனர். 2. கிராமங்கள் தோறும் ஒருசாரார் தமிழ்ப்பேச்சு மொழியைப் பயன்படுத்தி மக்களை மகிழ்விப்பதை அடிப்படையாகக்கொண்ட, புத்தளிப்புப் பாங்கிலமைந்த சுய ஆக்க நாடகங்களை கூட்டாக கலந்துருவாக்கி நடித்து வந்தனர். அவை சமூகத்தின் அன்றாட சமூக அரசியல் விஷயங்களைப் பேசின.

## மதம் கடந்த மானுடத்தை நோக்கி...

இந்து மதம் அல்லது சைவமதம்
என் அம்மா தந்த மதம்
யேசுவையும் தாய் மேரியையும்
போற்றும் கத்தோலிக்கம்
எனது தந்தைதந்த மதம்.

கிறிஸ்துவை மட்டும் நம்பும் கிறிஸ்தவம்
சமாதானம், அகிம்சை போதித்த பௌத்த மதம்
என்றிவை நான் ஓரளவு அறிந்த மதங்கள்
ஆனால் பெயரளவில்
சமணம், ஜென், இஸ்லாம் எனும்
பெயர்களும் சிலசிந்தனைகளும்
ஞாபகத்தில் உண்டு
இன்னும் மதம் இல்லா மானுடம் வேண்டும்
ஆமாம் 'மதம்' எனும் வெறி இல்லா- மானுடம்.

தமிழில் சொல்லுக்குப் பல பொருள்
'மதம்' என்றால் 'சமயம்'
'மதம்' என்றால் 'வெறி'
இந்தியாவில் இராமரின் தர்மத்துக்கும்
அல்லாவின் மார்க்கத்துக்கும் இழிபறி.
அல்லாவின் மார்க்கத்துக்கும்
கிறிஸ்தவ மார்க்கத்துக்கும்
மத்திய கிழக்கில் சண்டை வெறி.

இலங்கையிலோ அகிம்சைப் பௌத்தம்
ஏனைய மதங்களிடம் போர்வெறி
அனர்த்தம்- கோரம்- கொலைகள், அகதிகள்
அனாதைகள், புரிகிறது தெளிவு வருகிறது.

நாம் நம்மைப் புடம்போட
நன்நெறிகளைத் தரும் தர்ம நெறிகள் வேண்டும்
நல்லோரை நல்லவற்றை அழிக்கும் சமய வெறி
யானையின் 'மத்தம்' எனும் 'மதம்'
அந்த வெறி அந்த 'மதம்' நம் உலகுக்கு
வேண்டாம்.

சமதர்ம நெறியில் 'மதம்' இல்லை
நான் சொல்லா விட்டாலும்
என் உள்ளுணர்வே கூறும்
இது நான் காணும் புத்த நெறி
என் துக்க மனதை இதம் செய்யும் தர்ம நெறி!

எது எது நல்லதோ அவை கொண்ட அன்பு நெறி
நான் மதம் இல்லா மானுடம் நோக்கி
நகர விரும்புகிறேன்.






படிப்பகம்

www.padippakam.com

3. காத்திரமான முறையிலமைந்த இயல்பு நெறிவாத-யதார்த்தவாத நாடகங்களை கற்று எழுத்தாளர்கள் சிலர் எழுதி நடிக்கச் செய்தனர். அவையும் மக்கள்தம் பல்வேறு பிரச்சினைகளையும் ஆழமாக ஆராய்ந்தனர். 4. வேறு ஒரு சாரார், தமிழரசுக் கட்சியின் கொள்கைகளோடு உடன்பாடு கொண்டவர்களாக இருந்து கொண்டு, அன்றைய அரசுகளின் தமிழ் விரோதச் செயல்களை கண்டித்தும் தமிழர்தம் உரிமைக்கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழ், முஸ்லீம் வரலாற்று வீரர்களின் சுதந்திர உணர்வைச் சித்தரித்தும் தமிழ்த் தலைமைகளிடையே காணப்பட்ட சுயநலச் சார்பைச் சாடியும் நாடகங்களை மேடையேற்றினர். 5. பொதுஉடைமைச் சார்புடைய சிலர், தமது கட்சிகள் சார்பாக நின்று சாதியம், பெண்ணியம், வர்க்கம், இலங்கைத்தேசியம் போன்ற விஷயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நாடகங்களை தயாரித்தளித்து வந்தனர். 6. இந்தியாவின் மத்தியதர வர்க்கச் 'சபா' நாடகங்களிலும் எழுத்துருக்களை அடிப்படையாகக் கொண்ட சமூக நாடகங்களையும், வரலாற்று நாடகங்களையும் பலர் நடித்து வந்தனர். 7. திராவிடக்கழகத்தாரின் சமூக சீர்திருத்த நாடகங்களும் இங்கு பலராலும் நடிக்கப்பட்டு வந்தன. இவ்வரங்க ஆற்றுகைகள் யாவும் மக்கள் மத்தியில் நாடகம் பார்க்கும் பழக்கத்தை வலிமைப்பெறச்செய்ததோடு, தமது சமூக, அரசியல் பிரச்சினைகளை நோக்கும் தன்மை யையும் ஏற்படுத்தி வந்தன. எது எவ்வாறாயினும், வடக்கிருக்கும் இந்தியச்செல்வாக்கு என்றும் எம்மை அழுத்தியவாறே உள்ளது.அதைமீறி எதையும் நாம் சாதிக்க முடியாது என்பதையும் புரிந்து கொள்வது நல்லது. அடிக்கடி பெரியப்பரிடம் ஒருவரைப்பற்றி மற்றவர் மாறிமாறி முறையிடும் பெறாமக்கள் போல நாம் இராது, பெரியவரின் ஆசியோடு இருசாராரும் இணைந்து வாழ்ந்து முடிக்க முயல்வதும் நல்லது. 1960களின் கடையாண்டுகள் இரண்டு முதல் 1970களின் முதல் ஏழு ஆண்டு வரையான காலப்பகுதி இலங்கைத்தமிழ் அரங்கவரலாற்றில் உள்ளடக்கம், உருவம், அளிக்கை, அடிப்படைச்சிந்தனை என்ற அனைத்திலும் முக்கியமான பண்புகளையும் தாக்கங்களையும் கொண்ட நாடகச்சிந்தனைகளையும் செயற்திறன்களையும் ஆற்றுகைகளையும் வெளிக் கொணர்ந்த காலப்பகுதியாக அமைந்திருந்தது. இலங் கைத் தமிழ் அரங்க வரலாற்றில் காலத்துக்கு காலம் முனைப்புப் பெற்ற போக்குகள், பொதுமைகள் யாவற் றையும் உள்வாங்கிக் கொண்டு இந்த காலகட்டம், தனது சித்தாந்தக் கோட்பாடுகளை நாத சுருதியாகக் கொண்டு, எதிர்கால அரங்குக்கு காத்திரமானதொரு அடித்தளத்தை அமைத்தது. அந்தக்காலகட்டத்தின் முனைப்பை முன்னின்று உந்தியவர்கள், இலங்கை அரங்கின் வெவ்வேறு மரபுகளின் அனுபவத்தைப் பெற்று ஒன்றுசேர்ந்தவர்களாக இருந்தனர். கிராமத்தின் சமூக அரங்கு, சிங்கள அரங்கு என்பவற்றினை பகிர்வு பரிட்சயம் பெற்றவர்களாக இருந்ததோடு, இவர்களுள் கூத்தர்களும், பாடகர்களும், நடிகர்களும், நெறியாளர்களும், கவிஞர்களும், வழிகாட்டிகளும் இருந்தனர். பொதுவுடைமை வாத, சமுதாய வாத சித்தாந்தமே இவர்களை பெருமளவில் நின்று வழிநடத்திய மேற்கண்டவர்களது சங்கமத்தின் விளை பயனாக இலங்கைத்தமிழ் அரங்கு புதிய தரிசனங் களையும் புதிய படைப்புக்களையும் புதிய அரங்கு நெறிமுறைகளையும் தந்து நின்றது. அதன் தொடர்ச்சியின் தொடர்ச்சியும் தான் இன்றுவரை இலங்கைத்தமிழ் அரங்கில் தொடர்கின்றன. 'ஏற்புடைமை இல்லாத இன்றைய முரண்கள் நாளைய பொழுதின் வைதிகங்களாகிவிடுவது' தான் உலகின் அனுபவம்.

1970களின் இந்த அரங்கு வர்க்க முரண் பாடுகளைப்பற்றியும் தான் பொதுவாகப்பேசியது. இடதுசாரிச்சிந்தனை இலங்கைத்தமிழ் அரங்கின் காத்திரமான வளர்ச்சிக்கும் உதவியதை இங்கு நாம் கருத்தில் கொள்வது அவசியம். இவர்கள் அனைவருமே இலங்கைத் தேசியம் பற்றிய கருத்தினையே ஆணித்தரமாக கொண்டிருந்தனர். ஆயினும் அவர்களில் சிலர், இலங்கை அரசியலில் ஏற்பட்ட பல தவிர்க்கக்கூடிய விபத்துக்கள் காரணமாகத் தேசியத்தின் பால் பரிவு கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மாற்றப்பட முடியாத கருத்துக்கள் கூடக் காலத்தின் கெடு கோலங்களால் மாறிவிடுவதற்கான சான்றுகளாக இவை அமைகின்றன.

1970களின் இந்த அரங்கத்தார் இலங்கைத்தமிழ் அரங்கின் ஆற்றுகை முறைமையில் இருபுதுமைகளைப் புகுத்தினர். 1. மீளுருவாக்கம் செய்யப்பட்ட பாரம்பரியக் கூத்தின் அனுபவத்தைக்கொண்டு அ. ஒரு கூத்து மோடியின் வடிவத்தைத் தெரிந்தெடுத்து அதனுள் சமகால அரசியல், சமூகப்பிரச்சினைகளைப் புகுத்தியும், நாடக ஆற்றுகைகளை தயாரித்தனர். 2. அதே வேளையில் இவர்களில் சிலர் முற்றுமுழுதான இயல்பு நெறிவாதத்திலிருந்து விடுபட்டு மோடிமைப்படுத்தப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட யதார்த்தவாத முறை மையில் நாடகங்களைத் தயாரித்தனர். 3. மேலும், இவர்களில் கவிஞர்களாக இருந்தவர்கள், கவிதையை, நாடகத்தின் சொல்சார்ந்த தொடர்பாடல் ஊடகமாக மீண்டும் வலுவானதொரு முறைமையில் கொணர்ந்து நிலைநிறுத்தினர். 4. இவற்றோடு, யதார்த்தம் சாராத மேலைத்தேய அரங்க மோடிகளும் பண்பாட்டு மயமாகப்பட்டு அளிக்கை செய்யப்பட்டன. 5. அத்தோடு மொழிபெயர்ப்புத்தயாரிப்புக்களும் மேற்கொள்ளப் பட்டன. (இலங்கைத்தமிழ் அரங்கில் மொழிபெயர்க்கும் நாடகங்களுக்கும் நீண்ட வரலாறும் முக்கிய பங்கு இருந்து வருகின்றது.)

இந்தவாறு 1970களின் பிரதான நீரோட்டமாக இருந்துவந்த இவ்வரங்க முயற்சிகள், இலங்கைத்தமிழ் அரங்கை அழகு படுத்தியதோடு செழுமைப்படுத்தியும் நின்றன.

இந்தக்கால கட்டத்திலும், தமிழ்த்தேசியத்தை முன்னெடுக்கும் நாடக அரங்க நடவடிக்கைகள் தமிழ் பகுதிகளில் பரவலாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

வந்தன. இந்தத்தேசத்தில் தமிழர் சகல உரிமைகளோடும் வாழவேண்டும் என்பதை அவை வலியுறுத்திவந்தன. அந்த, தேசியமயப்பட்ட யதார்த்தவாத சமூக நாடகங்களும், வரலாற்று நாடகங்களும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வை ஊட்டிவந்தன. ஒரு இனத்தின் மத்தியில் இன உணர்வை ஊட்டி வளர்ப்பது எந்தவகையிலும் குற்றமாகாது. இனத்துவேஷத்தை ஊட்டித் தன்இன உணர்வை வளர்ப்பதுதான் மாபெரும் தவறாகும். அந்தத் தவறு இந்தத்தேசத்தில் நடந்து, நடந்து கொண்டும் இருக்கிறது. இனியாவது அது நடக்காமல் இருக்க நாம் அனைவரும் முயற்சிக்க முடியுமா? முடிந்தால் நல்லது; முடியாவிட்டால் எல்லாமே முடிந்துபோய்விடும்.

1980கள் இலங்கையின் வரலாற்றில் யுத்தத்தின் நாள்களை பிரசவித்த துர்ப்பாக்கியம் நிறைந்த காலகட்டமாக உள்ளது. 1983ல் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் ஆரம்பித்தது. அதற்கு முன்னதாகவே பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் தமிழ் பிரதேசத்தில், முக்கியமாக தமிழ் இளைஞர் மீதும் அரச காவல் துறையினர் மீதும் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அன்று தொடக்கம் இன்றுவரை எத்தனை கொலைகள், கொள்ளைகள், அவலங்கள், இழப்புக்கள் என்பவற்றை இலங்கை தரிசித்து வருகிறது!

இந்தக்காலகட்டத்தை, இலங்கையின் வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்ந்த பலர், வடக்குக்கிழக்கின் இருண்டகாலம் என்கிறனர். கலை, இலக்கிய முயற்சிகள் எதுவுமே இடம்பெறாத ஒரு காலகட்டம் என இதை அவர்கள் கருதிக்கொள்கின்றனர். ஆயினும் உண்மை அதுவல்ல. இந்தக் காலகட்டத்தில் இங்கு நிறையவே கலை இலக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்த்தேசியத்தை ஆதரிப்போரும், அதனை நிராகரித்தோரும், இலங்கைத் தேசியத்தை ஆதரிப்போரும்கூட இக்காலகட்டத்தில் தமது கலை இலக்கியப்பணிகளைத் தொடர்ந்தனர்.

நாடக, அரங்க நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் இக்கால கட்டம் அதற்கு மிகுந்த உத்வேகத்தை அளிப்பதாகவே இருந்து வந்தது. யுத்த சூழலும் யுத்த அவலங்களும் இல்லாது போயிருப்பின், இலங்கைத்தமிழ் அரங்கு வறுமைப்பட்டுப்போய் இருக்கும் என்று உறுதி படக்கூறமுடியும். ஆதிமுதல் அன்றுவரை சந்ததிக் கையளிப்புச் செய்யப்பட்டுவந்த இலங்கைத்தமிழ் அரங்கப் பண்புகளும் பாரம்பரியங்களும் 1980களில் ஏற்பட்ட புதிய சூழலுக்கும் எதிர்பார்ப்புக்களுக்குமேற்பத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டு புதிய ஆற்றுக்கை களை மக்களுக்கு அளித்தன.

இந்த சகாப்த்தின் தமிழ் அரங்கம், இதுவரை ‘பேசாப்பொருளாக’ இருந்தவை உட்பட அனைத்து விஷயங்கள் பற்றியும் பேச முற்பட்டது. அவை சின்னஞ் சிறிய சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும்

## உன்னைத் தொலைத்திட்டாய் மானுடா

பொன்னைத் தேடியும் பொருளைத் தேடியும்
உன்னைத் தொலைத்திட்டாய் - மானுடா
மானுடத்தின் தன்மைதனை அறிவாய் மண்ணில்!

உள்ளத்தால உயர்ந்த பொருள்
உலகத்தில் உண்டென்று
உள்ளத்தால் ஞானி கண்ட
கற்பனைப் பொருளே கடவுள் இங்கு...
இன்று மதமென்றால்...
அடிவிழும் அறைவிழும்
அடுத்த வீட்டில் வெட்டு விழும்
உதை விழும் அமைதி கெடும்
உலகமெலாம் உருக்குலைந்து ஊசலாடும்.

அயல்நாட்டிலிருந்து அமைந்து வந்து
ஆளுக்குத் தகுந்தபடி ஆலயம் அமைப்போம்
அதற்கோர் காரணம் வகுப்போம்
அதற்காய் வெளி நாட்டில் பணமாய் சேர்ப்போம்
பாவம் நம்மவர் அவர் நிலை புரிதாபம்
பணத்தை படைத்தது அவரே என்பர்
அவருக்கெதற்கையா பணப்படையல் - யாரறிவார்
சேரும் பணமெல்லாம் சேருவது
கணபதிக்கா? கணபதிப்பிள்ளைக்கா?

மரத்தை வைத்தோம் சிலை வைத்தோம்
மரம் மழையை தந்தது
எம் மதம் மழை தந்தது என்று பறையறைந்தோம்
காலவோட்டத்தில் மரத்தை வெட்டினோம் வீழ்த்தினோம்
வெப்பத்தைக் கூட்டினோம்
மழை பொய்த்து விட
தெய்வக் குற்றமென்றோம்.

கோயில்கள் பல அமைப்போம் குஷ்புவுக்குக் கூட!
கோபத்தில் அதை அழிப்போம் பாபர் மசூதியேப் போல!
ஆலயத்தில் படையமைப்போம்
அடிதடிக்கும் களம் அமைப்போம்
குதிரைக்கும் கழுதைக்கும் மணம் முடித்து வைப்போம்
மழைபெய்யும் என்று மல்லாந்து பார்த்திருப்போம்.

கொள்ளைகள் குறைய வேண்டி கோயிலுக்குச் சென்றிட்டால்
‘கொள்ளையர்கள் கவனம்’ என்று பதாகை தொங்கும் அங்கு
கொள்ளைகள் கூட இன்று கோயில்களிலே தான்
கொள்ளைகள் போவதெல்லாம் கோடிகள் உள்ள இடம்.

மானுடா ஒன்றைப் புரிந்துகொள்
மனதில் தோன்றிய மதம் கொண்டு என்ன செய்தோம்
அன்றிலிருந்து இன்றுவரை சண்டை செய்தோம்
அன்று அனல்வாதம் புனல் வாதம்
இன்று ஆட்டிலறி அணுவாயுதம்.

உழைப்பினைப் போற்றிடுவோம்
அன்பினை வளர்த்திடுவோம்
அகிலத்தை மாற்றிடுவோம் இனி.

-தங்கேஸ்வரன் பார்த்திபன்-



படிப்பகம்

www.padippakam.com

தேவைப்படும் அனைத்து விஷயங்கள் பற்றியும் பேசியது. கல்வி, பெண்ணியம், இனவிடுதலை, அகமுரண்பாடுகள், வர்க்கபேதம், போர் எனப் பலவற்றையும் பேசியது.

நடிகர் அல்லாதோர் கூடித்தமது பிரச்சினைகளைத்தாமே அரங்கச்செயலாக்கி விளக்கம் பெறும் இன்றைய ஒரு அரங்கமுறைமையின் தூரத்து முன்னோடியாக இக்காலத்தின் சில முக்கிய அரங்க ஆற்றுகைகள் அமைந்தன. ஆற்றுகைகளில் கல்வி பற்றி மாணவர்களை பேசிக்கொண்டனர். பெண்களது பிரச்சினைகள் பற்றி மாணவியரும் பெண்களும் பேசினர்; போராட்டம், இனவிடுதலை என்பன பற்றி இளைஞர், யுவதிகள், வளர்ந்தவர், முதியவர் எனச் சமூகத்தின் சகல சந்ததியினரும் பேசிக் கொண்டனர். இந்தவாறு, மக்களால்மக்களின் அரங்கு என்ற இலக்கின் ஆரம்பப்புள்ளியாக இவ்வாற்றுகைகள் அமைந்திருந்தன. தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு வேர்களிலிருந்து இவ்வரங்குகள் தமது ஆற்றுகை மூலங்களையும் அரங்க மொழிகளையும் பெற்றுக்கொண்டன. உலக அரங்குகளின் அனுபவத்தேட்டங்களும் தமிழ்ப்பண்பாட்டு மயமாக்கப் பட்டுக் கையாளப்பட்டன.

யுத்தம் தமிழ்ப்பிரதேசங்களில் ஒரு நாளை 12 மணித்தியாலங்களுக்குள் குறுக்கிவிட்டது. ஊரடங்குச் சட்டத்தால் மாலை ஆறு மணி முதல் காலை ஆறுமணி வரை ஊர் வீடுகளுக்குள் அடங்கி உறங்கிக்கிடக்கும். நாடகங்களை இரவில் நடிப்பது சாத்தியமற்ற ஒன்றானது. பகற்பொழுதுக்குள் செய்யும் எதையும் செய்து முடித்துவிடவேண்டும். 1980முதல் இன்றுவரை எழுதப்பட்ட எமது தமிழ் நாடக எழுத்துருக்களில் ஒளிவிதானிப்புப்பற்றிய எந்தவொரு குறிப்பும் இருப்பதில்லை. காரணம், அதற்குத்தேவை இருக்கவில்லை.

இராணுவக் கெடுபிடிகளால் ஊர்களில் நாடகம் மேடையேற்றமுடியவில்லை. இதனால் ஆற்றுகைகளை நிகழ்த்தக்கூடிய பாதுகாப்பான இடங்களாகவும், பகலில் நாடகம் நிகழ்த்தக்கூடிய இடங்களாகவும் பாட சாலைகளும் பல்கலைக்கழகங்களும் அமைந்தன. இதன் பயனாக சிறுவர் நாடகங்களும், பாடசாலை நாடகங் களும், பல்கலைக்கழக நாடகங்களும் முக்கியத்துவம் பெற்றன.

கிராமங்கள் பட்டணங்களில் நாடகம் மேடையேற்றுவதென்பது முற்றாக அற்றுப் போனது என்றும் கூறிவிடமுடியாது. பல்கலைக்கழக மாணவரும், போராளிக்குழுக்களைச் சேர்ந்த சிலரும் கிராமத்து இளைஞர் மன்றங்கள் சிலவும் ஊர்களில் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்திவரத் தவறவில்லை. பலவித இடர்களை எதிர்நோக்கியே அவர்கள் தமது பணியினைச் செய்யமுடிந்தது.

இந்தக் காலகட்டத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் கவிதா நிகழ்வு என்றதொரு புதிய ஆற்றுகை முறைமையும், தெருவெளி அரங்கச் செயற்பாடுகளும் இடம்பெற ஆரம்பித்தன. இவை மக்களது அன்றாடப்பிரச்சினைகள் பற்றியும் யுத்தம், விடுதலை என்பன பற்றியும், விடுதலைஎன்பன பற்றியும் பேசின. இவற்றின் செயற்பாடுகள், போராட்டக்குழுக்களில் இளைஞர் சென்று சேர்ந்து கொள்வதற்கும் வழிவகுத்தன என்பதும் உண்மையாகும்.

ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு மக்கள் கூட்டத்தினரின் அரங்க ஆற்றுகைப்போக்கில் ஏற்பட்ட பண்பு மாற்றங்களை வரையறுத்துக்கொள்வது தவறு என்ற போதிலும், நேரக்குறுக்கம் காரணமாகவும், தேசத்தின் வரலாற்று நிகழ்வுகளோடு இணைத்து அரங்க நடவடிக்கைகளை நோக்க வேண்டும் என்பதாலும் இங்கு ஆண்டுகளும் தசாப்தங்களும் ஓரளவு குறிப்பிடப் படுகின்றன.

1980களின் அரங்கப்போக்கு 1990களின் நடுப்பகுதிவரையிலும் சிற்சில அகநிலைப்பட்ட மாற்றங்களையும் புறநிலைப்பட்ட மாற்றங்களையும் பெற்றுவந்தது. 1985ஐச் சூழவுள்ள காலப்பகுதி தேசிய விடுதலைப்போராட்டத்தை அரங்கவடிவில் அங்கீகரித்த தோடு, மக்கள் யாவரும் இதுபற்றிச்சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்றும், மக்கள் யாவரும் இணைந்த ஒரு நடவடிக்கையாகவே அது இருக்கவேண்டும் என்றும், எமக்குள் ஒத்த கருத்தும் ஒற்றுமையும் இருக்கவேண்டும் என்றும் கூறியது. நல்லதைக்கூறவேண்டியது அரங்கின்பணி.

இந்தக்காலகட்டத்தில் படிப்படியாகப் போராட் டக்குழுக்களும் தமது உறுப்பினரையும் ஆதரவாளர் களையும் கொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும். போராட்டத்துக்கு அணிதிரட்டும் ஆள்சேர்க்கும் நாடகங் களையும் தெருவெளி அரங்கு ஆற்றுகைகளையும் நிகழ்த்தி வந்தன. தமிழ்த்தேசிய இனத்தின் உரிமை, விடுதலை என்ற கருத்துக்களே இவை அனைத்தினதும் பாடுபொருளாக இருந்தது. போரின் கொடுமையும் வக்கிரமும் இலங்கைத்தேசியம் பற்றிச்சிந்திக்கக்கூடிய மனநிலை யைத்தரவில்லை.

போரின் உக்கிரம் அதிகரிக்க அதிகரிக்க அரங்க ஆற்றுகைகளை உருவாக்கும் முறைமையிலும் மாற்றம் ஏற்பட்டது. கலந்துரையாடிக்கலந்துரையாடிப்பின் எழுதி நடிக்கப்பட்ட முறைமை, இப்போ களப்பயிற்சிகளில் கலந்துரையாடிக்கலந்துரையாடி, செய்துபார்த்துச் செய்துபார்த்து நடிகரல்லா ஆற்றுவோர் நிகழ்த்திக் காட்டும் ஒரு நடவடிக்கையாக உருப்பெற்றது. இவற்றில் உணர்ச்சி உள்ளடக்கம் என்பது படிப்படியாக உயர்ந்து வந்தது. ஒரே அரங்கக்குழுவினர் மேடைஅரங்க ஆற்றுகைகளையும் தெருவெளி ஆற்றுகைகளையும் நிகழ்த்திவந்தனர். பேருருவங்களும் பெருங்காட்சிப் பண்பும் இக்காலத்துச் சில அரங்க ஆற்றுகைகளில் முக்கியத்துவம் பெற்றது.

1995 வரையிலான காலப்பகுதி வரை மேற்கண்ட நாடக ஆற்றுகைகள் முக்கியத்துவம் பெற்றன. இவற்றோடு, விடுதலைப்போருக்கான நியாயப்பாட்டைப் பிரச்சாரம் செய்யும் நாடகங்களும் இடம்பெற்றுவந்தன. இக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் தமது இல்லிடங்களை விட்டு வெறுங்கையோடு அகதி முகாம்களில் வாழ நேர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

அவல நிலையும் ஏற்பட்டது. இதனால் மக்களது குறிப்பாக அகதிமுகாம்களில் வாழும் மக்களது ஆரோக்கியம், சுகாதாரம், சுத்தம் என்பன பற்றிய, கலந்துரையாடற் பாங்கிலமைந்த தெருவெளி அரங்க நடவடிக்கைகள், அகதிமுகாம்களில் மேற்கொள்ளப் பட்டன. அத்தோடு விடுதலை, தளைநீக்கம் பற்றிய தெருவெளி அரங்க ஆற்றுகைகளும் கிராமங்களில் நிகழ்த்தப்பட்டன.

இவற்றோடு, கலந்துரையாடி எழுத்துரு எழுதி, சம்பந்தப்பட்டவர்கள் நடித்து மேடைகளில் ஆற்றுகை செய்யப்படும் சில நாடகங்கள். போரால் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றி இக்காலத்தில் பேசமுற்பட்டன. குடும்பங்களின் சிதைவு, முதியோர் தனிமை, உளநலப்பாதிப்பு, பாலியல் வல்லுறவு, விட்டைப்பிரியும் அவலம், புலம்பெயர்வு எனப் போரின் காரணமாக மக்கள் எதிர்நோக்கிய அவலங்களை வெளிப்படுத்தின. போர் தொடரினும் போரால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு உரிய ஆறுதலும் பரிகாரமும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இவ்வரங்க ஆற்றுகைகளது உட்பொருளாக அமைந்தது.

மேலும் இக்காலத்தின் சில ஆற்றுகைகள் ஊமைப் பாங்கான முறைமையைத்தழுவி உரையாடல்கள் இல்லாது இசையினதும் அபிநய அசைவுகளினதும் துணையோடு போரின் கொடுமை பற்றியும் அமைதியின் அவசியம் பற்றியும் பேசின. இத்தகைய நாடகங்களும் கூத்துக்களும் ஏனைய சமூக நாடகங்களும் வடக்குக் கிழக்குக்கு அப்பாலும் நிகழ்த்தப்பட்டு வந்தன.

யுத்த நாட்கள் முழுவதுமே அவலம் நிறைந்த நாட்களாக இருந்துவந்த போதிலும், அவலம் முள் முடிதரித்த ஆண்டாக 1995 அமைந்தது. ஒரேநாளில் இலட்சக்கணக்கான மக்கள், மாடுமனை மக்கள் சுற்றம் விட்டுக் கால்நடையாக இடம்பெயர நேர்ந்தது. இத்தகைய இடம்பெயர்வு, யுத்தத்தின் பின் பலருக்கும் பலதடவை ஏற்பட்டுள்ளது. இந்த இடம்பெயர்வுகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கிராமத்தினதும் முகத்தை துடைத் தழித்துவிட்டது. முகமிழந்த கிராமங்களில், பல புது முகங்களின் மத்தியில் இரண்டொரு பழைய முகங்கள் திரும்பச் சென்று, தமது சூழலில் அந்நியர் போல் வாழ்கின்றனர். சுற்றம் புதிது, சூழல் புதிது, உறவு புதிது, நட்பு புதிது, அயல் புதிது, புடை புதிது ஆயினும் இடையில் வந்த படை மட்டும் உரிமையோடு எங்களுடன் இருக்கிறது. அதுவும் பாவம்; எம்மைப்போலத்தான்- பாவம், வாழ்வுக்காக , ஏவிவிட தன்இடம் பெயர்ந்து எங்கள் மத்தியில் வந்து விழுந்து கிடக்கிறது. காலம் வர அது தன் இடம் போகும்; நாம் எம்இடம் போவோம். படை என்றால் என்ன பிசாசா? இயக்கம் என்றால் என்ன பேயா? இரண்டுமே அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ள இந்தத் தேசத்து மக்களின் மக்களின் மகன்களும் மகள்களும்தானே? இனிவரப்போகும் மைந்தரின் அம்மை அப்பர் அவரல்லவா? இதை நாம் உணர்ந்து கொண்டால், உணர வைத்தால், காலம் கனியும்.

# நிலைமை

மு.தியாகராசா

பத்துப் பதினொன்றில்
பக்குவப்பட்டு
பன்னிரண்டு பதின்மூன்றில்
காதல் வயப்பட்டு
பதினாலு பதினைந்தில்
கடிமணம் புரிந்து
பதினாறு பதினேழில்
இருசிசு பெற்று
பதினெட்டு பத்தொன்பதில்
கைவிடப்பட்டு
இருபதில் பராமரிப்புக்கோரி
நீதிகேட்டு
நிற்கின்ற நிலைமை
எதனால்
பாழ்பட்ட சினிமாவால்
பரிதவிக்கும் இளசு...

இந்த இடர் மிகு காலத்திலும் தமிழரங்கு உறங்கிக்கிடக்கவில்லை. இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மத்தியில், முகாம்களில், முகாம்களை ஒத்த சேரிக்குடியிருப்புக்களில், மக்களுக்கு நம்பிக்கையூட்டி, உள்ளத்தையும் உடலையும் பாதுகாத்துக்கொள்ள, ஊர்வலம், விளையாட்டு, ஆடல், பாடல், வினைத்திறன்மிக்க செயல் என யாவும் கலந்ததொரு தெருவெளி ஆற்றுகை முறைமையை நடைமுறைப்படுத்தி வந்தது.

1995க்குப்பிற்பட்ட காலப்பகுதியில் சிறுவர் நாடகங்கள், போராட்டப்பரப்புரை நாடகங்கள் எனப்பல மேடை ஆற்றுகைகளாகவும், தெருவெளி அரங்க ஆற்றுகைகளாகவும், கலந்துரையாடல் அரங்க ஆற்றுகைகளாகவும், வெளித்தெரியா அரங்க ஆற்றுகைகளாகவும் வடிவெடுத்து நின்று செயற்பட்டன. இவை போராட்ட பிரச்சாரம், கல்வி, வறுமை, நோய்நொடி பரவுதல், வறட்சி, இயற்கை சுரண்டப்படுதல், மேலைக் கலாசாரத்தின் தாக்கம், எமது ஆற்றல் வீண்போதல், தேசியத்தை விட்டுத் தமிழ்த் தேசியத்தைப்பேசுவதற்கான நியாயம், ஏகாதிபத்தி



படிப்பகம்

www.padippakam.com

யங்களின் ஆதிக்கம், ஏமாந்து வந்த தமிழ்த்தலைமைகள், சிறைகளில் வாடும் தமிழ்க்கைதிகள், அரசுகள் பயன்படுத்திக்கொள்ளும் பொலிசு, இராணுவம், குடியேற்றப்படும் அப்பாவிச்சிங்கள மக்கள், போரால் துன்புறும் மக்கள் எனப்பலப்பல அரங்க ஆற்றுகைகள் நிகழ்ந்தவண்ணணம் இருந்தன- இருக்கின்றன.

இக்காலகட்டத்தில் 'வெளித்தெரியா' அரங்க நிகழ்வொன்று 45-50 தடவைகள் படைக் கட்டுப் பாட்டிலில்லாத தமிழ்ப்பகுதியில் நிகழ்த்தப்பட்டது. அது பல சுயவிமர்சனங்களையும் யுத்ததின் நிர்ப்பந்தையும், இரு இன மக்களினதும் நற்பண்புகளையும், காலம் எம்மைக்கொடுமைப் படுத்தியதையும், யுத்தம் தொடரமுடியாது என்பதையும் மக்களோடு மக்களாக மாறுவேடத்தில் நின்று பேசியது. மக்களும் மறைந்திருந்து பேசினர். பேச அஞ்சியோர் எழுந்து சென்றனர். இருந்து பேசியோர் அடித்தும் பேசினர்.

போர்க்காலத்தில் எழுந்த சில நாடகங்கள் திரும்பத் திரும்ப எங்கள் வரலாற்றைக்கூறுவனவாக அமைந்தன. அவற்றை எழுதியோர். வரலாற்றைத் தாம் நினைப் பதைக்கூறுவதற்கான முறையில் எழுதிக்கொண்டனர். இந்த விஷயத்தில் இரு இனத்தவரும் கவனமாக நடந்து கொள்வது நல்லது. வரலாறு என்பது உண்மை. உண்மை களைப்பதிவு செய்ய வேண்டுமேயல்லாமல் உண்மைகளை உருவாக்க கூடாது.

அண்மைக்காலத்து நாடகங்கள் சில, இடைப்பட்டு இன்னலுக்குள் உள்ளாகியது. இருக்கும் மக்களிடம் களப்பயிற்சி, கலந்துரையாடல் என்ற முறைகளை ஊடகமாக்ககொண்டுசென்று, அவர்களது நம்பிக்கைகளைப் பெற்று, அதன் அடித்தளத்தில் அவர்களது மனங்களைத்திறக்கச்செய்து, உள்ளத்தினுள்ளே உள்ளவற்றை கொட்டச்செய்து, ஒருவகையிலமைந்த உளவளத்துனை எனநிற்கின்றன. இவ்வாற்றுகை யாவும் மிகுந்த உச்சநிலையில் ஒவ்வொருவரும் தமது மன உணர்ச்சிகளை வெளிக்கொட்ட வைக்கின்றன. இவை ஒரு நற்சந்நதப்பரவச நிலைக்கு இட்டுச்சென்று அதனூடே மனச்சாந்தி காணும் நிலையை நோக்கியவாறு பயணிக்கின்றன. இம்முறையில் பரிட்சயமானவர்களைப், பின்னர் ஆற்றுவோராகக்கொண்டு மேடையில் நின்று பரவசம் காட்ட முற்படும் வேளையில், பார்வையாளர் இரண்டுபடுகின்றனர். அவர்களில் ஒருசாரார் உள்ளத்தில் ஒட்டாத உடற்சந்நதங்காட்டி கூடிச் செய்ததன் நோக்கினை கொச்சைப்படுத்துகின்றனர், பார்வையாளரில் பெரும்பாலானவர்கள் பெற்ற நிலையில் நின்று விடுப்புப் பார்க்கின்றனர். உள்ளார்ந்த உணர்வுகளை, நம்பிக்கைக்குரிய சூழலிலும், நெருக்கமானதொரு உறவுச்சூழலிலும் வைத்து வெளிக்கொணர்ந்து கொட்டிப்பரஸ்பரம் ஆறுதல டையப்பயன்படுத்தப்பட்ட ஒன்றை, பரவெளியில் பல்லாயிர கணக்கானவர் மத்தியில் உத்தியாகப் பயன்படுத்த முற்படும்போது உண்மை சோரம்போகிறது. உணர்வு சிதறிப் போகிறது. எந்த அரங்க வடிவமானாலும் தீவிர பிரசாரத் துக்கென புறப்பட்டுவிட்டால், அது தன் நாமம் கெட்டுத் தன்னைச் சார்ந்தவரையும் கெடுத்துவிடும்.

இன்று தமிழ் நாடகங்கள் சில போரின் மீதான வெறுப்பை வெளிக்காட்ட முற்பட்டுள்ளன. வேறு சில நாடகங்கள் சமாதானத்தின் அவசியத்தைப் பேசுகின்றன. இன்னும் சில, காணாமற்போனோர், கண்ணிவெடி, மிதிவெடி அபாயம் பற்றிப் பேசுகின்றன. பெண்ணியம் பற்றிப் பேசு கின்ற ஆற்றுகைகள் பலவும் உள்ளன. சிலர், ஆண்டுத் திவசம் போல ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட திகதிகளில் விழாவெடுத்து நாடகம் போட்டு மகிழ்கின்றனர். உள்ளத்து உணர்ச்சி போய்விட்டால் எதுவுமே பழஞ்சலிப்பாகத்தான் போய்விடும்.

இறுதியாக ஒன்றுமட்டும் கூறலாம். எங்கள் நாட்டில் கடைசியாகச்செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைக்குப் பெயர் 'புரிந்துணர்வு உடன்படிக்கை' இது புரிந்துணர்வு ஏற்பட்டபின் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையா அல்லது புரிந்துணர்வை ஏற் படுத்திக்கொள்வதற்காகச் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையா?

எது எவ்வாறானாலும், யுத்தம் இடை நிறுத்தப் பட்டிருக்கிறது. பெரும்பாலான மக்கள் மீண்டும் யுத்தம் வருவதை விரும்பவில்லை. எனவே சமாதானம் பற்றிப் பேசும் காலமல்ல இது. யுதமில்லா நிலையல்ல சமாதானம். யுத்தம் நின்று விட்டால் சமாதானம் வந்துவிட்டது என்று அர்த்தமல்ல. யுத்தம் ஏன்வந்தது? அது வந்ததற்கான காரணம் எதுவோ, அந்தக் காரணத்தை நாம் மறந்து விடக்கூடாது.

எதற்கும் காரணகாரியம் என்று ஒன்றிருக்கும். இந்த தேசத்தைப் பொறுத்தவரையில், 'அடிப்படை மனித உரிமை' என்பதுதான் 'யுத்தம்' என்ற காரியம் விளையக் காரணமாக இருந்தது. அந்த, அடிப்படை மனித உரிமை என்பதைப் பகிர்ந்துகொள்ளமுடியாது. பிறப்பால் ஒவ்வொரு மனிதனுக்கும் உரித்துடையதாவது அது. அதைப் பிரிக்கவோ, பகிரவோ, பிடுங்கி எடுக்கவோ எவருக்கும் உரிமையில்லை. கொடுக்கப்பெற்றுக் கொள்ளப்படுவதல்ல அது. உலகில் ஒரு மனிதன் இருக்கும் வரை அதுவும் இருக்கும். அதற்கு முட்டுக்கட்டைகள் முழுமூச்சுடன் போடப்படும்போது விளைவதுதான் போர். முட்டுக் கட்டைகள் நீங்க, போர் வராது. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு மகனும் மகளும் உரிமையோடு- அடிப்படை மனித உரிமையோடு வாழும் நிலைவந்துவிட, சமாதானம் தன்பாட்டில் வந்துவிடும்.


சமாதானமல்ல பிரச்சினை, அதுவல்ல அடிப் படைப்பிரச்சினை. 'அடிப்படை மனித உரிமை'- அதுவே தான் அடிப்படைப்பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்த்தால், இப்போதைக்கு எந்தப் பிரச்சினையும் வராது- ஆம், இப்போதைக்கு, 'மாற்றம்' என்பது இயற்கையின் நியதியல்லவா?

*



படிப்பகம்

www.padippakam.com



# மாறுபடும் நியாயங்கள்

வனஜா நடராஜா

பகவதிக்கு நெஞ்சின் பாரம் தாங்கமுடியவில்லை. ``மூத்தவளுடன் நான் பட்டேன் பாடு என்றால் இளையவளுடனும் உத்தரிக்க வேணுமா`` மனதுக்குள் எண்ணிக்கொண்டவள் தன்நெஞ்சின் சுமையை இறக்க இரத்தினம் வீட்டுக்குப் போவதற்கு ஆயத்தமானாள்.

ஆசிரியராகப் பணியாற்றும் பகவதியின் இளைய மகள் பாடசாலையிலிருந்து வருவதற்கு இன்னும் நேரம் இருந்தது. பகவதி வீட்டைப் பூட்டி, வீட்டுத்திறப்பை வழமையாக வைக்கும் இரகசிய இடத்தில் வைத்துவிட்டு இரத்தினம் விட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

பகவதி, இரத்தினம் வீட்டை அடைந்தபோது இரத்தினம் வெளிமுகப்பில் அரிசி புடைத்துக் கொண்டிருந்தாள். பகவதியைக் கண்ட இரத்தினம் ``வா பகவதி இண்டைக்கு நான் உன்னட்டை வருவம் எண்டு இருந்தனான். ஒரு விசயம் உன்னோடை கதைக்க வேணும். ஆனால் நீயே வந்திட்டாய்`` என்றாள்.

``இரத்தினம், நானும் உன்னோடை கதைத்து என்ரை நெஞ்சின் பாரத்தை கொஞ்சமாவது இறக்குவம் எண்டுதான் வந்தனான்``

``என்ன பகவதி, இப்ப அப்பிடி என்ன கவலை உனக்கு, மூத்தவளின்ரை கலியாணத்தை தான் ஒப்பேற்றிப்போட்டாயே``

``ஓம், ஒப்பேற்றிப்போட்டன்தான். என்ரை இளையதும் மூத்தவளின்ரை கோலமெல்லே கொண்டாடுகுது``

``ஏன் என்னவாம்``

``பேசுகிற ஒவ்வொரு மாப்பிளையிலும் குறை கண்டு பிடிக்கிறாள். படிப்பு காணாது, உத்தியோகம் காணாது,; இல்லாவிட்டால் வயதுகூட; பல்லுச்சொத்தி, மூக்குச் சரியில்லை... இப்படி ஒவ்வொரு மாப்பிளையிலும் குறை கண்டு பிடித்தால் எப்படி கலியாணம் கட்டி வைக்கிறது. மனிசனும் என்னட்டை பொறுப்பை விட்டுவிட்டு வேளைக்குப்போய்ச் சேர்ந்திட்டுது. நான் என்ன செய்யிறது. நீயே சொல்லு?``

``ம்...ம்``

``நான் பேசினால் கலியாணம் கட்டாமல் இருக்கப்போறாளாம். வயதும் ஏறிக்கொண்டு போகுது. எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை``

``என்ன பகவதி, உன்ர மோள் படிச்சவளெல்லே. படிச்ச பிள்ளையள் கதைக்கிற கதையோ கதைக்கிறாள். ஒரு பொம்பிளை கலியாணம் கட்டாமல் தனிச்சு வாழ முடியுமோ, பொம்பிளையளுக்கு கடைசிவரை கட்டாயம் ஒரு துணை வேணும். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை பகவதி. மூத்தவளின்ர மனசை புத்தி சொல்லி மாத்தினது நான்தானே.அவளும் உப்பிடித்தானே நிண்டவள். உன்ரை இளையவளோடை நான் கதைக்கிறன்``

``இப்பதான் இரத்தினம் என்ரை மனம் கொஞ்சம் லேசானது மாதிரி கிடக்குது. பொம்பிளைக்கடி கடைசிவரை ஒருதுணை வேணும்தான். என்ர மனிசன் உயிரோடை இருந்திருந்தால் எனக்கு இப்ப எப்பிடியும் ஒரு பலம் தானே இரத்தினம்``

``ஓமோம்``

``....``

``இரத்தினம், கொஞ்சம் பச்சைத்தண்ணி தருவியோ``

``இந்தா, இந்தா. நான் தேசிக்காய் கரைப்பம் எண்டு இருந்தனான்`` கூறிக்கொண்டே தனக்கு அருகில் இருந்த தண்ணீர் செம்பை எடுத்துக்கொடுத்தாள்.

தண்ணீர்ச்செம்பை வாங்கி மடமட எனத் தண்ணணீரைக் குடித்து தனது தாகத்தை தணித்துக்கொண்ட பகவதி, ``இரத்தினம், நீ என்னோடை ஏதோ கதைக்க வேணும் எண்டாய், என்ன விசயம்``

``பகவதி, என்ரை தம்பி கணேசுவின்ரை கலியாண விசயம் தான்``



படிப்பகம்

www.padippakam.com

``ஏன் ஏதாவது சரிப்பட்டு வந்திருக்கோ``

``எத்தனை பொம்பிளைகளின்ரை சாதகம் சரிப்பட்டுவந்திட்டுது. அவனோ செத்துப்போனவளையே நினைச்சுக்கொண்டிருக்கிறான்``

``ஏன் இரத்தினம், அவனுக்கு யோசிக்க மூளை இல்லையோ. அவள் செத்து ஒரு வருஷம் முடிஞ்சுதுதானே. இனி அவளை நினைச்சு என்ன பயன். நினைச்சவுடன் செத்தவள் வரவா போகிறாள். வாழவேண்டிய இளம் வயசு. பிள்ளைகள் இரண்டும் சின்னஞ்சிறிசுகள். இந்த சுமையை சுமக்க ஒருத்தி தேவைதானே. அத்தோடை அவள் கலியாணம் கட்டி வாழ்ந்து ஆக ஐஞ்சு வருசம்தானே``

``நான் என்னத்தை கூறட்டும் பகவதி. நான் கதைச்சால் என்னோடை எரிஞ்சு விழுகிறான். தனக்கு எல்லாம் தெரியுமாம். பகவதி என்னத்துக்கும் நீ ஒருக்கால் கதைச்சுப்பாரன்``

``நீ ஒண்டுக்கும் வருத்தப்படாதை இரத்தினம், அதெல்லாம் கதைக்கிறமாதிரி நான் கணேசுவோடை கதைக்கிறன்``

பகவதி இரத்தினத்துடன் பலதும் பத்தும் கதைத்துவிட்டு வீட்டுக்குப் போக ஆயத்தமானாள்.

``ஆ... பகவதி உண்மையாய் தீர மறந்துபோனன். தங்கம்மா உன்னைக் கண்டால் வரச்சொல்லிச் சொன்னவள். நீ கேட்டது கிடக்குதாம்``

``சரி, சரி அப்ப நான் தங்கம்மா வீட்டை போட்டு என்ரை விட்டுக்குப் போறன்`` பகவதி இரத்தினத்தி டமிருந்து விடை பெற்றுக்கொண்டாள்.

***

பகவதி, தங்கம்மாவிடம் கொஞ்சம் காசு கடனாக் கேட்டிருந்தாள். தங்கம்மா தன்னிடம் காசு இருக்கும்போது சொல்லி அனுப்புகிறேன் என்று கூறி இருந்தாள். இன்று தங்கம்மாவிடமிருந்து பதில் வந்தது பகவதிக்கு சந்தோசத்தையும் திருப்தியையும் அளித்தது. அதே நேரம் பகவதியின் மனதில் தங்கம்மா இப்ப வீட்டில் இருப்பாளோ என்ற ஐயம் வேறு தோன்றவே, ``ஆண்டவா, தங்கம்மா வீட்டிலை இருக்கவேணும்`` என்று மனதுக்குள் பிரார்த் தித்துக் கொண்டாள். ஏனெனில் பகவதிக்கு காசு இபொழுது அவசரமாகத் தேவைப்படுகிறது. பிரார்த்தித்துக்கொண்டே தங்கம்மா வீட்டுப் படலையை திறந்தாள். தங்கம்மா முற்றத்து வேம்பின் கீழ் இருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

``அப்பாடா`` என்று ஆறுதல் பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டாள் பகவதி.

``வா பகவதி இரத்தினத்திட்டைச் சொன்னனான். சொன்னவளோ`` பகவதியைக் கண்ட தங்கம்மா அவளை வரவேற்றாள்.

``ஓம் தங்கம்மா, இரத்தினம் சொல்லித்தான் வாறன்``

``ம்..ம்.. இப்படி இரு. நீ கேட்ட காசு என்னட்டை இப்ப இருக்குது. நான் உனக்கு தரலாம். நீ அதற்கு வட்டி ஒன்றும் தரவேண்டாம்``

``தங்கம்மா பெயரைப்போல உன்ரை மனமும் தங்கம் தானடி``

தங்கம்மாவுக்கு உச்சி குளிர்ந்தது. ``பகவதி ஊரிலை என்ன புதினம்`` என மெல்ல தனது வம்பளக்கும் வேலையை ஆரம்பித்தாள் தங்கம்மா.

``எனக்குத் தெரியாது தங்கம். நீ கேட்கிறதைப்பார்த்தால் உனக்குத்தான் ஏதோ தெரியும் போலை...`` பகவதியின் குரலில் ஆர்வம் மின்னியது.

``ஓமடி பகவதி உவள் பரமேஸ் மறுகலியாணம் கட்டிப்போட்டாளாம்``

``என்னடி தங்கம்மா புருஷன் செத்து ஒரு வருஷம் தானே ஆகுது. அவனின்ரை நினைவு கொஞ்சமும் இல்லாமலோ``

``இப்ப நடக்கிற அநியாயங்களை யார் தட்டிக்கேட்கிறது. அதுதான் உலகமும் இப்படி`` தங்கம்மா ஒரு உண்மையை கண்டு பிடித்து முன்வைத்தாள்.

``கலியாணம் கட்டாமல் எத்தனை பெட்டைகள் தனிச்சு வாழுகுதுகள். இவள் புருஷனோடை இரண்டு வருஷம் வாழ்ந்து ஒரு குழந்தையை கூட பெற்றுப் போட்டாள். அந்த நிறைவே போதும். இனி அவன்ரை நினைவோடை பிள்ளையை வளர்க்கிறது தானே. பிள்ளை வளர்ந்ததும் பிள்ளையின்ரை நிழலிலை ஒதுங்கலாம்``

``ஓமோம் சொத்தும் இருக்குது. அதோடை உழைக்கிறாள். ஆனால் பகவதி அவள் யாருக்கோ சொன்னாளாம் தனக்கு பாதுகாப்பு வேணுமெண்டு``

``இவையளுக்கு...`` தொடங்கிவிட்டு முடிக்காமல் பகவதி விட, தங்கம்மா ``ஓமடி எனக்கு விளங்குது. நாங்கள் ஏன் கேடுகெட்டதுகளின்ரை கதை கதைக்க வேணும்`` எனத் தங்கம்மா தான் தொடங்கியதற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.


## விழுதாகி வேருமாகி....



'பார்வைக்குப் புலனாகாத மாயப் போர்களாலும், காலவெள்ளத்தாலும் அழியாதவர்களாக, தலைமுறை கடந்தும் வாழ்பவர்களாக இவர் களை நிலைநிறுத் தவே இந்நூலை எழுதினோம்' –

இன ஒடுக்கலுக்கு எதிராக, பண் பாட்டின் பழைய நுகத்தடியை தூக்கி எறிந்து களமாடிய பெண் போராளி களின் கள அனுபவங்கள் உயிர்த்துடிப்புடன் அவர்களா லேயே பதிவாக்கப்பட்டுள்ளன.

–2ம் லெப்.மாலதி படையணி




படிப்பகம்

www.padippakam.com

# திறந்த சந்தைப் பொருளாதாரமும் வைரஸ் இராச்சியமும்




-றஜனி

உயிரினவியல் மண்டலத்தின் நிலம், நீர், வளி எங்கும் கற்பனைக்கு அப்பாற்பட்ட எண்ணிக்கையில் பல்கிப்பெருகி ஆவேசமான ஆக்கிரமிப்பை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நுண்ணங்கி வைரஸ் ஆகும். வைரஸ் இராச்சியம் மனித வளர்ச்சிக்கு பெரும் சவாலாக உள்ளது. அதி நவீன முறைகளில் வேலை செய்கின்ற நுண்ணுயிரியல் ஆராய்ச்சியாளர்கள், அதி உச்ச முன்னேற்றம் கண்டுள்ள மருத்துவ விஞ்ஞானிகள் முன்னேற்றமடைந்துள்ள மருந்தியல் விஞ்ஞானிகள் ஆகிய எல்லாத்தரப்பினருக்கும் ஈடுகொடுத்து 'வல்லது தப்பிப் பிழைக்கும்' என்கிற டார்வினின் கூற்றை பிசகாது நிருபிக்கும் நுண்ணுயிரிகளாக வைரஸின் பல்வேறு வகையின திகழ்கின்றன.

சாதாரண தடிமனில் தொடங்கி எயிட்ஸ், சார்ஸ் ஈறாக இன்று மனித குலத்தை பழிவாங்கத் தொடங்கியுள்ள பறவைக் காய்ச்சல் [Bird Flu] வரைக்கும் ஏராளமான நோய்களுக்கு பல்வேறு வகை வகையான வைரஸ் நுண்ணங்கிகளே காரணங்களாகின்றன. தகவல் தொழிநுட்பவியல் துறையினர், 'கணனி வைரஸ்' என்ற ஒரு பதத்தைப் பிரயோகித்து வருவதை அறிவீர்கள். சகல விஞ்ஞானத்துறைகளிலும் இன்று அதியுயர் வளர்ச்சி வீதத்தை எட்டியுள்ள இலத்திரனியல் விஞ்ஞானமான கணனி விஞ்ஞானத்துறை சார்ந்தோர் தமது கணனி வலை அமைப்புக்கும் அவற்றின் நுட்பத் தொழில் திறன்களுக்கும் தத்தமக்குள் எதிரும் புதிருமாக செயற்பட்டு ஒருவரை ஒருவர் கழுத்தறுத்து தத்தம் லாப நோக்கை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் நிபுணத்துவ விஷமிகளால் மேற்கொள்ளப்படும் தீர்க்க முடியாத , குணப்படுத்த முடியாத, ஒரு செயற்பாட்டு ஒழுங்கையே முற்றாகச் சீர்குலைத்து ஒழித்து விடக்கூடிய ஒரு நாசகாரச் செயலை அல்லது செயற்பாட்டு விளைவை கணனி வைரஸ் [Computer Virus] என்று அழைப்பர். குறிப்பிட்ட அந்த கணனி நிபுணத்துவ விஷமிகள் தாமாகவோ அல்லது பாதிக்கப்படுவோரோ குறிப்பிட்ட அந்த 'கணனிச் சீர்குலைப் புக்கு' வைரஸ் என்ற அடிப்பெயரோடு வெவ்வேறு பெயர்களை இடுவர். ஒரு நேர்த்தியான உயிரினவியல் மண்டலச் செயற்பாட்டையும் நிம்மதியாக வாழவேண்டிய மனித குலத்தையும் முற்றாகச் சீர்குலைத்து ஒழித்துவிடக்கூடிய உயிரியான வைரஸின் நாமத்தை கணனித்துறை சார்ந்தோரும் பொருத்தமாகத் தெரிவு செய்துள்ளனர் என்றே கூறலாம்.

எயிட்ஸ் வைரஸ் ஆராய்ச்சி உலகை அடியோடு ஈடாட வைத்துள்ளதோடு, சில தசாப்தங்களாக எயிட்ஸ் நோய் விளைவுகளை குணப்படுத்தும் நீர்ப்பீடன முறைகளையோ மருந்து வகைகளையோ கண்டுபிடிக்கும் முயற்சிகளில் விஞ்ஞானிகள் 'சாணேற முழம் சறுக்கும்' துர்அதிஸ்ட நிலையிலேயே உள்ளனர்.

அதற்கிடையில் கடந்த ஆண்டில் சீனா முதல் பல தென்கிழக்காசிய நாடுகளை சார்ஸ் [SAARS] வைரஸ் இனங்கள் தாக்கின. பலர் கொல்லப்பட்டனர். அதனால் உஷாரடைந்த அப்பிராந்தியத்தின் அரசாங்கங்களும் சுகாதாரத்துறையினரும் மக்களும் அலுத்துக் களைத்திருந்தனர்.

அந்தக் களைப்பு ஆறுவதற்கு முன்னர் அது சீனா முதல் ஜப்பான், கொரியா[குறிப்பாக தென்கொரியா], வியட்னாம், லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து, இந்தோனேசியா முதலிய தென்கிழக்காசிய நாடுகளில் கடுகதி வேகத்தில் பரவிவரும் மற்றுமொரு வைரஸ் நோய் பறவைக் காய்ச்சல் [Bird Flu] என்பதாகும். இது கோழிகளின் மூலமாக பரவுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைரஸ் பாகிஸ்தானுக்குப் பரவி, அதற்கு அயலிலுள்ள இந்திய மாநிலமான பஞ்சாப்புக்கும் பரவியிருப்பதாக கூறப்படுகிறது, மேலும் வியட்னாமில் ஏழு பேரும் பாகிஸ்த்தானில் இருவரும் இந்நோயினால் இறந்துள்ளனர். மேலும் பலர் நோய் தொற்றி வைரஸ் தாக்கம், சிகிச்சை முறைகளுக்கு அப்பாற்பட்டதனால் மரணப்படுக்கையில் உள்ளனர்.

இந்த பறவைக் காய்ச்சல் பரவலையடுத்து தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வதை ஐரோப்பிய ஒன்றியம் தடை



படிப்பகம்

www.padippakam.com

செய்துள்ளது. அவ்வாறே அமெரிக்க, ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளும் செய்யவுள்ளதாக அறியவருகிறது. தாய்லாந்திலிருந்து கோழிகளை இறக்குமதி செய்வதை தென்னாசிய நாடான இலங்கையும் தடை செய்துள்ளது. ஆனால் ஏற்கனவே பறவை காய்ச்சல் பரவியுள்ள மற்றொரு தென்னாசிய நாடான பாகிஸ்தானிலிருந்து கோழி இறைச்சி வகை பதனிடப்பட்டு கொழும்பிலுள்ள உயர்ரகமான உணவு விடுதிகளில் அழகாக காட்சிப் படுத்தப்படுவது வழமை. இந்தியா முற்றாகவே வெளிநாடுகளிலிருந்து கோழி உற்பத்தி சார்ந்த சகல பொருட்கள், கோழி இறைச்சி என்பன தனது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதை உடனடியாக நிறுத்தியுள்ளது.

உலக சுகாதார நிறுவனம்[W.H.O] மற்றும் உலக நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானி களும்பறவைக் காய்ச்சல் வைரஸ் இனங்களுள் இரண்டு வகையின் செயற்பாடுகள் பற்றி அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பில் பன்றிகள் போன்ற விலங்குகளும் சம்பந்தப்படுகின்றன. அத்துடன் மனிதர்களுக்கு சளிச்சுரக்காய்ச்சலை ஏற்படுத் துகின்ற வைரஸ் [Human Flu] பற்றியும் அவர்கள் பிரஸ்தாபிக் கின்றார்கள். எவ்வாறு எனில் பறவைக் காய்ச்சல் வைரஸ் நேரடியாக மனிதர்களில் தொற்றிக் கொண்டு வீரியமான உருமாற்றமடைந்து மனிதரைத் தாக்கி அழிக்கும் நிலை ஒன்று. மற்றையது கோழிகளில் தொற்றும் வைரஸ், மற்றும் மனிதர்களில் தொற்றும் [Human Flu] வைரஸ் ஆகியன இரண்டும் சமகாலத்தில் பன்றிகளில் தொற்றிக் கொள்கிறது என்றும் அங்கு இவ் விருவகை வைரஸ் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டினால் உருவாகும் ஒரு புது வகைக் கொடிய வைரஸ் மனிதர்களில் தொற்றுவதன் மூலமும் இறப்புக்கள் ஏற்படுகிறது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நோய் தொற்றிய கோழிகள் பண்ணைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்படும் காட்சிகளை தென்கிழக்காசிய நாடுகளின் தொலைக்காட்சிகளிலும் ஐரோப்பிய அமெரிக்கத் தொலைக்காட்சிகளிலும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் தென்கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்களும் அதன் அதிகாரிகளும் தத்தமது சமூகங்களின் நலன் கருதியும் உலக சமூகங்களின் நலன் கருதியும் சரியாக நேர்மையாக தொழிற்படும் அரசியல் பொருளாதார சூழமைவு அந்நாடுகளில் உள்ளதா?

தென்கிழக்காசியாவின் மேற் சொல்லப்பட்ட நாடுகளில் பெரும்பாலானவை திறந்த பொருளாதாரச் சந்தை அமைப்பையும் தனியார் ஆதிக்க வர்த்தகப் போட்டிச் சூழலையும் கொண்டுள்ளன. பொருளாதார உற்பத்தி சேவைத்துறைகளுக்கும், வர்த்தக கப்பற் போக்குவரத்து, தகவல் தொழினுட்பத் துறை ஆகியன கிட்டத்தட்ட தனியார் துறையின் பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அதைவிட அங்குள்ள அரச சேவைத்துறையும் அது சார்ந்த நிறைவேற்று அதிகாரிகள் குழாமும் முற்றிலும் ஊழல்களும் லஞ்சம், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன நிறைந்து சீரழிந்த நிலையிலுள்ளன. போதைப்பொருள் வர்த்தக நடவடிக் கைகளும் [Drugs Trafficking] விபச்சார விடுதி களும், கலாச்சாரக் கெடுதிகளும் தாண்டவமாடும் இந்நாடுகளில் ஒரு அமைச்சரையோ, அமைச்சின் செயலாளரையோ, உயர்நிலை அதிகாரிகளையோ மிக இலகுவில் விலை கொடுத்து வாங்கிவிடலாம்.

இந்நிலையில் அந்நாட்டு அரசாங்கங்களின் சட்ட வாக்கத்துறை, நீதித்துறை, நிறைவேற்று அதிகாரத் துறையும் பாதுகாப்புப் பிரிவினரும் எந்த அளவுக்கு தத்தமது சமூகங்களினதும், உலக சமூகங்களினதும் நன்னிலை, நலன்பேணுதல், அபிவிருத்தி சார்ந்து உரிய மனச்சாட்சியுடன் செயற்படுவர்?

ஊழல்ப்படுத்தப்பட்ட மோசடிகள் நிறைந்த, ஈவிரக்கமற்று உச்ச லாபமீட்டும் தனியார் துறை யினரான முதலாளிய சமூகமும் தென்னாசிய நாடுகளில் எவ்வாறு செயற் படுகின்றன என்பதற்கு அங்குள்ள எயிட்ஸ் நோய் பரவல் தடுப்பு முறைமைளிலுள்ள மிகப் பல வீனமான நிலைமைகளைச் சுட்டிக் காட்டலாம்.

இந்நிலையில் தற்போது பரவியுள்ள பறவைக் காய்ச்சல் தென்கிழக்காசியப் பிராந்தியம் முழுவதையும் ஓரிரு வாரங்களில் ஆக்கிரமித்து தென்னாசிய நாடுக ளான பாகிஸ்தான், இந்தியா வரை பரவியுள்ளது. இது தனியாக இலாபமீட்டும் நோக்குக் கொண்டிருந்த தென்கிழக்கு, தெற்கு ஆசிய தனியார் பண்ணை முதலாளிகளாலும், லஞ்சம், ஊழல், மோசடி நடவடிக் கைகளுக்குள், லயித்து மூழ்கிக்கிடந்த அந்நாட்டு அதி காரிகளாலும் விளைந் ததாகும். அந்நாடுகளில் நன் னோக்குள்ள சில அரசியல் தலைவர்கள் இருப்பினும் அரசாங்கத்தால் தெளிவான முறையில் கட்டுப்படுத்த முடியாத திறந்த சந்தைப் பொருளாதாரமும், உச்சலாபமீட்ட முயலும் தனியார்துறையும் முதலாளிகளும் அத்தலைவர்களை செயற்பாடற்று முடங்க வைத்துள்ளனர்.

பறவைக் காச்சல் பரவுவதாக செய்திகளும் ஆய்வுகளும் தெரிவிக்கத் தொடங்கியதும் தென்கிழக்காசிய தனியார் பண்ணை முதலாளிகள், தனியார் கப்பல் போக்குவரத்துக் கம்பனிகளுடன் இணைந்து தமது பண்ணைக் கோழிகளை, மிகப்பெருமளவில் பதப்படுத்தும் தனியார் ஆலைகளுக்கு [Canning Factories] அனுப்பியோ அல்லது வேறு தற்காலிகப் பதப்படுத்தல் முறைகளுக் கூடாகவோ கோழி இறைச்சியை அவசர அவசரமாக மலிவு விலையில், அயலிலுள்ள நாடுகளுக்கும் பாகிஸ்தான், மத்திய கிழக்கின் சில நாடுகள், ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றிற்கு அனுப்பி வைக்கக்கூடிய அவகாசமும் சாத்தியங்களும் இல்லாமல் இல்லை. ஏன் இலங்கைக்கு கூட அனுப்பப்பட்டிருக்கலாம்.

இக்கட்டத்தில் ஒன்று விளங்குகிறது. *இவ்வாறான கொடிய நோய் பரவுகையை கட்டுப்படுத்துவதில் விஞ்ஞான முன்னேற்றமும் மருத்துவ வளர்ச்சியும் அறிவாற்றலும் மட்டும் போதாது. உலக அபிவிருத்தி மேம்பாட்டை, சந்தை இலா பங்களுக்கு அப்பால் மக்களின் நலன்களுடன் இணைப்பதை இலக்காகக் கொண்ட அரசியல் சித்தாந்தம், பொருளாதார முறைமை என்பன நிச்சயமாகத் தேவைப்படுகிறது.*



படிப்பகம்

www.padippakam.com

# நாடக மேதைகள் கால் வைக்கத் தவறிய இடத்தில் தன்னைப் பதித்தவர் கலைஞர் ஏ. ரி. பொ.

-சோ.தேவராஜா



நாடகம் ஒரு கூட்டுக்கலை. கலைஞர்களின் சமூகக் கூட்டுச்செயற்பாடாக நாடகம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதனால் வரலாற்றின் அசைவியக்கத்துடன் தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. சமூகக் கூட்டுச் செயற்பாடு என்பது கிராமங்களிலேயே அநேகமாகச் சாத்தியமானதெனலாம்.

கிராமங்களை விட்டு நகர்மயவாக்கத்துக்கு இடம் பெயர்க்கப்பட்டபொழுது சமூக அசைவியக்கத்தில் அதன் கூட்டுச்செயற்திறன் வீரியமிழந்தது. நாடகம் நகரத்தை நோக்கி நகர்ந்தமை நாடக மேதைகளும், விற்பன்னர்களும் அங்கீகாரம் பெற வழிசமைத்ததோடு, இலங்கைச் சைவத் தமிழ்ச் சமூகத்தில் நாடகத்தை பிணமாகவேனும்பாதுகாத்துப் பேணியமை முக்கிய நிகழ்வெனலாம். கிறிஸ்தவ தமிழ்ச் சமூகத்தில் கொலனித்துவ – விதேசிய விரிவாக்கத்துக்கு நாடகம் மூலம் வாசல் திறக்கப்பட்டமை இன்னொரு விடயமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முற்கூறுகளில் யாழ்ப்பாணத்தில் நாவலர் பரம்பரையின்முன் கூத்துக்கலைபற்றிய குரோத உணர்வும், செயற்பாடும் மேட்டுக்குடிச் செல்வர்களிடமிருந்து நாடகக் கலையை கழுவேற்றியதெனலாம். "தீமைகளாற் பொத்திய சிற்றின்பப் பாடல்களாகிய அல்லிகதை, பவளக்கொடிமாலை முதலிய அபத்த நூல்களைக் கற்றல், கேட்டல், காமமாகிய விளக்கைக் கொழுத்தவல்ல கூத்து விளையாடல் பார்த்தல் முதலியனவும் அவற்றை விருத்திசெய்தற் பொருட்டு பொருளுதவி செய்தலுமாகிய இவைகளே, மானுடப் பிறவிகளிலே சம்பாதிக்கத்தக்க பெரும்பேறென்று, விபரீதவுணர்ச்சியினாலே கெடுமதிகொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் வீணாளாகப் போக்குகின்றர்ர்கள். என்பன போன்ற வட்டுநகர் மகாவித்துவான் மு.ஆறுமுகம்பிள்ளையின் கூத்துக்கெதிரான யுத்தப்பிரகடனம், கிராமியக் கலையாக– நாட்டார் கலையாகத் திகழ்ந்த நாடகக்கலை கிராமங்களில் எவ்வாறு ஓரங்கட்டப்பட்டது என்பதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

"என்செய்வது கிராமியப் பரம்பரையினரால் மேலெழுந்து வந்த தெருக்கூத்து, கரகாட்டம், கும்மி, காவடியாட்டம், வசந்தன் ஆட்டம், கோலாட்டம், மேடைக்கூத்து என்பன மறைந்து கொண்டு இருக்கின்றன. இவற்றினை முன்னெடுத்த ஆசிரியர்கள் கூட மறைந்து கொண்டே இருக்கின்றனர். ஏ.ரி. பொன்னுத்துரையோடு எஞ்சிய பயிற்சியும் மறையும் நிலையில்தான் உள்ளது." என்பது ஏ.ரி. பொ.வின் நண்பரான மாவையாதீனம் சு.து.ஷண்முகநாதக் குருக்களின் மனக்குறையாகும். இருபதாம் நூற்றாண்டின் முற்கூறுகளில் நாடகக்கலைக்கெதிரான விதைகள் நச்சு விருட்சமாகி இன்றுவரை நாடகக்கலை தமிழர் சமூகத்தில் எவ்வித அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை. கல்விக்காகவும் ஆசிரியத் தகுதிக்கான பாடநெறியாகவும் நாடகம் ஆக்கப்பட்டிருப்பதை இப்போதைக்குத் தப்பிப்பிளைக்க முடிந்துள்ளது. "மேற்கத்தைய கலை கலாச்சாரங்கள் சிவபூமிக்குள் ஊடுருவியதை" நாடகக்கலையின் வீழ்ச்சிக்குக் காரணம் எனக் குருக்கள் முடிவுக்கு வந்த போதும் சைவமக்களின் ஆசாரங்களில் நாடகங்கள் அங்கீகரிக்கப்படாமை எமது சமூக யதார்த்தமாகி விட்டமை வருந்தத்தக்க உண்மையாகும்.

ஷண்முகநாதக் குருக்கள் காளிதாஸரது நாடகப் பணிகளை மெச்சி அத்தகைய "நாடக உத்திகளை ரஸங்களோடு முன்னெடுத்தவர்" ஏ.ரி.பொ. என சிறப்பிக்கின்றார். ரஸனையின் மூலம் வாழ்வின் புனிதத்தன்மையை மேலெடுக்கும் அசைவுகளினாலும் கேட்டு ரசிப்பதனாலும் எழும் காவியத்தை 'த்ருஸ்ய காவியமென்றும், இதற்குத் துணை நூலாக சாகுந்தலம், உத்தமராம சரிதம், மாளிவகாக்நிமித்திரம்' விக்கிரமோர் வசியம் என்ற நாடக நூல்களையும் காளிதாஸர் இயற்றினார். காளிதாஸரது நாடகங்களில் மனித ஆற்றலுக்கான தெளிவான ஓர். சம்பவத்தை வெளிப்படுத்தி அச்சம்பவத்தினூடாக ரஸனைகளை வரவழைத்து, அவ்ரசனைகள் சார்பாக மனிதனுக்குத் தேவையான ஞானத்தை ஊட்டவே திருஸ்ய காவியம் எழுந்தன. நாடகங்கள் மூலம் ' த்வனி என்றும் 'வயங்கியம் என்னும் ஜீவசக்தி ஊட்டப்பட்டது. சிறந்த நற்கருத்துக்களை ஆழமாக்கி, அக்கருத்துக்களின் உயிர்ச்சக்தி கொண்ட தன்மைகளை முன்னெடுத்து மனிதனது மனதை மகிழ்விப்பதோடு அந்த மகிழ்ச்சியில் வாழ்வின் தகுதிகளை ஆற்றுப்படுத்தி தர்மார்ந்த, காம, மோசஷ சாதனைகளோடு மனிதன் வாழ அக்காலத்தைய நாடகங்கள் பலன் தந்துள்ளன. இத்தகைய சிறப்பிற்கு நாடகங்களின் 'ரஸத்வனி', 'அலங்காரத்துவனி', 'வசத்துவனி' எனும் தொனிகள் மூலம் மனதையும் உள்ளத்தையும் கவரக்கூடியதாக ஆடல்கள், பாடல்கள், நளினங்களோடும் பற்பல ரசனைகளோடும் அவை அமைந்தன. இத்தகைய அம்சங்கள் மூலம் நாடகத்தை உயிரூட்டிய தன்மை எங்குமே காணப்படவில்லை. 'ஷேக்ஸ்பியர்' நாடகங்களில் கூட இவை அமையவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வளவு சிறப்பு காளிதாஸரது நாடகங்களில் பொதிந்திருந்தன. இவை உ.வை. சுவாமிநாத ஐயரது கூற்றுமாகும்" என்று எடுத்துக் கூறுகிறார். சு. து. சண்முகநாதக் குருக்கள், காளிதாஸர் நாடகமரபில் மகிழ் நெறி நாடகங்களை ஏ.ரி.பொ.. உள்வாங்கியவர் என்பதை இத்தகவலின் மூலம் அறியமுடிகிறது. மேலும் அவர் தொடர்கையில் "நடேஸ்வராக் கல்லூரியில் 'லோபி' பாத்திரத்தின் மூலம் மேற்கூறிய அம்சங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்து குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆட்டக்காவடி, நிறைகுடம், மாவை முத்தமிழ்க கலாமன்றத்தின் பண்பின் சிகரம், பாசக்குரல், பரதன் நாடகங்களில் மேற்கூறிய யுக்திகள் அடக்கப்பட்டதனால் இந்த நாடகங்களை அவதானித்த கிராமியமக்கள் கூட அவற்றின் சாராம்சங்களை ஏற்று வாழ்க்கையோடு இணைத்து அவற்றின் கருத்துக்களை மனதில் பதித்து வைத்துள்ளமையை நோக்கும்போது அந்நாடகங்களின் உயிர்ச்சத்துப் பேறுகள் யாவும் எத்தகையதென உணரமுடிகிறது. ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களது நாடக உத்திகளையும், கருத்துக்களை தொனிகள் மூலம் வெளிப்படுத்திய தகைமைகளையும் காலங்காலமாகத் தொடர்ந்து வந்த கலாச்சாரங்களையும் நாடகமூலம் வெளிப்படுத்திய போதனைகளையும், இவற்றினால் எழுந்த உணர்வுகளையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்" என கூறுகின்றார். இதன் மூலம் எமது நாடக மேதைகள் பலரும் கால்வைக்கத் தவறிய இடமான கிராமத்தில் – கிராமிய மக்களின் மனத்தளத்தில் தன்னைப் பதித்துக்கொண்டவராக ஏ.ரி.பொ. விளங்கினார் எனத் தெரியவருகிறது. இத்தகைய பின்புலத்தில் நாடகத்தை போதனை அரங்காக – எல்லோரும் இன்புற்றிருக்கும் மகிழ்நெறி அரங்காக அனுபவித்து ஆனந்தங் கொண்டா டியவராக ஏ.ரி.பொ. திகழ்ந்தாரென்பது எனது துணிபு.

'ஆடலும் பாடலுந் தெரியாதவர் மேடை நாடகக் கலைக்குப் பொருத்தமற்றவர்' என்பது அவரது ஆழமான முடிவாகும். ஒரு நடிகர் அவற்றைத் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் சிறந்த நடிகராக மிளிரலாம் என்பது அவரது கருத்தாகும்.

'காலத்துக்குக் காலம் மக்கள் சமுதாயத்தின் எண்ணங்களையும் உணர்வுகளையும் அழகுணர்வுடன் வெளிப்படுத்திய அவரது (ஏ.ரி.பொ.) நாடகங்கள் மக்கள் வாழ்வின் பதிவேடுகளாயின. மக்கள் தம் பண்பாட்டைப் புரிந்துகொள்ளும் ஓர் அளவுகோலாகவும் இவரது நாடகங்கள் விளங்கின.

வாழ்வில் ஏற்படும் சோர்வையும் துன்பத்தையும் களைகின்ற கருவியாகவும் இவர் பயன்படுத்திய கலை விளங்கிற்று. ஏ.ரி.பொன்னுத்துரை என்ற மனிதனுக்கும் அவரைச் சூழவுள்ள சூழலுக்கும் இடையில் ஒரு இசைவை ஏற்படுத்தும் கருவியாக கலை விளங்கியது என்றால் மிகையில்லை' என்பது கோகிலா மகேந்திரனின் அவதானக் குறிப்புகளாகும்.

ஏ.ரி.பொ. தன்னை கலை உவகில் வளர்த்தவர்களாக ஷண்முகநாதக் குருக்கள், சானா, பேராசிரியர் சு. வித்தியானந்தன், க.இராசரத்தினம், கலையரசு சொர்ண – லிங்கம் ஆகியோரையும் தனது சகநடிகர்கள், இயக்குனர்கள், ரசிகர்களையும் குறிப்பிடுகின்றார். நாடக அரங்கக் கல்லூரியில் தாஸீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு போன்றோரின் நெறியாள்கையில் நாடகங்கள் நடித்ததில் மகிழ்வடைவார்.

ஏ.ரி.பொ. அவர்கள் 15 .05. 1928ல் தம்பிப் பிள்ளை– மாணிக்கம் தம்பதியினரின் மூன்றாவது புதல்வராக குரும்பசிட்டியில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை பொன். பரமானந்தர் வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், யாழ். பரமேஸ்வராக் கல்லூரியிலும் மேற்கொண்டிருந்தார். சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கலைப்பட்டதாரியானார். 1956ல் பாலாம்பிகை என்பவருடன் இல்வாழ்வில் இணைந்தார். பாலகுமார், சகிதேவி ஆகிய இரு பிள்ளைகளின் தந்தையானார்.

1942 முதல் நா க அரங்கில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்தார். நடிகராக, நாடகத் தயாரிப்பாளராக, எழுத்தாளராக, பேச்சாளராக விளங்கியதுடன் தாளக்காவடியை இசையுடன் பாடி ஆடுவதில் மிக்க வல்லமை பெற்றிருந்தார். 1942ல் கே.கே.வி.செல்லையாவின் 'நாட்டாமை நாகமணி' என்ற இசை நாடகத்தில் முதன்முறையாக நடித்தார். பாடசாலைகளில் 'அல்லி அர்ச்சுனா', உலோபியின் காதல் ஆகிய நாடகத்தில் நடித்தார்.

'விதியின் சதி' என்ற நாடகமே இவர் தயாரித்த முதல் நாடகம் 1951ல் சன்மார்க்க சபையில் மேடையேறியது. தாகம், இருமனம், நிறைகுடம் ஆகிய நாடகங்களும் இங்கு மேடையேறின.

'நிறைகுடம்' நாடகத்தில் எனக்கு கதாநாயகன் வேடம். கதாநாயகி பாத்திரத்துக்கு பெண்களையே நடிக்க வைத்துப் புரட்சி செய்தவர் ஏ.ரி.பொ. அவரது இந்நாடகம் பல மேடைகளைக் கண்டது' என்பது கவிஞர் வி.சந்தனத்தின் அனுபவப் பகிர்வாகும்.

1965 இல் யாழ் இலக்கிய வட்டத்தை அமைத்து அதன் முதல் தலைவராக இரசிகமணி கனக.செந்திநாதனும் அடுத்த தலைவராக ஏ.ரி.பொ.வும் செயற்பட்டனர்.

1978 இல் நாடக அரங்கக்கல்லூரி பயிற்சிப்பட்டறையில் பல கிராமத்து இளைஞர்களுடன் இணைந்து பயிற்சி பெற்ற தன்னுறுதி படைத்தவர் ஏ.ரி.பொ. அவர்கள் இப்பயிற்சிகள் பற்றி ஈழநாட்டு பத்திரிகையில் தனது பத்திரிகையில் அவ்வப்போது எழுதியுள்ளார்.

1986 இல் அநு.வை.நாகராஜன், கோகிலா மகேந்திரன், கலாநிதி நா.சுப்பிரமணியன் ஆகிய சிலருடன் இணைந்து தெல்லிப்பளையில் கலை இலக்கிய களம் என்ற அமைப்பை உருவாக்கி செயற்பட்டார்.

ஏ.ரி.பொ நாடகம், கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், மயில் ஆகிய நாடகச்சுவடிகளையும்; பாடசாலை நாடகம், தாளக்காவடி ஆகிய கட்டுரை நூல்களையும்; கலை உலகில் கால் நூற்றாண்டு சுயசரிதை நூலையும்; அரங்கு கண்ட துணைவேந்தர், நிஜங்களின் தரிசனம், அரங்குக்கலைஞர் ஐவர் ஆகிய வரலாற்று நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நாடக அரங்கக் கல்லூரியின் சங்காரம், பொறுத்தது போதும், கோடை ஆகிய நாடகங்களில் ஏ.ரி.பொ.வுடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புக்கிடைத்தது. இவ் அனுபவமும் இவரது நடிப்புத்திறனும் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



# நேரம்

நீ. பி. அருளானந்தம்

வவுனியா நகர்ப்பகுதியில் அமைந்திருக்கும் படைத்தளத்திற்கு முன்னால் பாரிய வெடிச்சத்தம் கேட்டதோடு சிப்பாய்கள் வெளிக்கிளம்பிவிட்டார்கள். அருகே நாங்கள் வசித்த கிராமத்துக்குள் அவர்கள் படையெடுத்து வந்தார்கள். அப்போது அவர்களது துப்பாக்கியிலிருந்து வெடிகள் பட்டாசுக்கட்டு கொளுத்தினாற்போல் சடசடவென்று வெடித்தன.

அவர்கள் வெளிக்கிளம்பிய நேரம் பொழுது புலரத்தொடங்கிற்று. வானம் உயரப்போய்விட்டமாதிரி இருந்தது. அதில் இருந்த வெள்ளிகள் மங்கிக் கொண்டு வந்தன. கிழக்கில் சிவப்பேறிற்று. அதேபோல ராணுவத்தினரது கண்களும் கொள்ளிக்கட்டை போல் `தகதக`வென்று இருந்தன.

அவர்களது படை நகர்வை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் பறை சாற்றின. நரகமே பூமியில் வந்தது மாதிரி அப்போது அங்கிருப்பவர்கள் எல்லோருக்கும் இருந்தது. இதனால் அந்த ஊருக்குள்ளே பின்பு ஒரு சனமும் துணிச்சலுடன் இருக்கவில்லை. கல்லெறியில் க்லைந்து பறந்த பறவைக் கூட்டம்போல அந்த இடங்களில் இருந்தவர்களெல்லாம் நாற்புறமும் சிதறி ஓடிவிட்டார்கள். கையில் கிடைத்த முக்கியமான பொருட்களை அவசரம் அவசரமாக தூக்கி எடுத்துக்கொண்டு தங்களுடன் குஞ்சு குருமான்களையும் கூட்டிக்கொண்டு எல்லோருமே தத்தமக்கு பாதுகாப்பு என்று கருதிய பாதையின் வழியே போய்விட்டார்கள்.

என்றாலும் அவர்களைப்போல வெளிக்கிளம்பிட முடியாது அந்த வீட்டில் தொண்ணூறு வயதைக் கடந்த அந்தக் கிழவி ஒருத்திதான் தனித்துவிடப்பட்டுப் போனவளாய் இருந்தாள். பாவம்... அவளுக்கு ஒழுங்காக நடக்கவும் முடியவில்லை. அவளை அவ்விடத்திலிருந்து நடத்திக் கூட்டிக்கொண்டு போக யாரும் உதவுவதற்கும் வரவில்லை. அந்த வீட்டுக்குள்ளே அவள் இருக்கின்ற இடத்தருகே ஒரு `பிஸ்கட்` பொட்டலம் மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது. அவள் தன் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்ற ஒரேயொரு செல்வமகள் அதைமட்டும் எடுத்து வைத்துவிட்டுப் போயிருக்கிறாள்.

தான் ஓர் அனாதை போல அவ்விடத்திலே இருப்பதை நினைத்து கிழவிக்கு துயரம் மேலிட்டது. குமுறிவரும் அழுகையை அடக்கிக் கொள்வதற்காக வானத்தை நோக்கி தலைநிமிர்ந்து அவள் பெருமூச்சு விட்டாள். அதன் பிறகு தான் வாழ்ந்த காலத்தில் நடந்த சம்பவங்களை சங்கிலித்தொடராக நினைத்துப் பார்த்தாள். நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாய் தெளிவான உருவம் பெற்றன.

அவளது இளமைக் காலத்திலேதான் இரண்டா வது உலகமகா யுத்தம் நடந்தது. இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்த காலத்திலும் யுத்தத்தைப்பற்றி அவளுக்கு எவ்வித பயமும் அப்போது ஏற்பட்ட தேயில்லை. அன்று நடந்த அந்த யுத்தமெல்லாம் எங்கு நடந்ததென்று அவளால் நன்றாக அறியவும் முடியவில்லை. அந்த யுத்தம் நடந்த காலத்திலெல்லாம் அவள் வசித்த வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் சிப்பாய்கள் போவதையும் வருவதையும் அவள் பார்த்திருக்கிறாள். காப்பிரிகள் என்ற இனத்தவரோடு இன்னும் பல நாட்டுக்காரர்களை அந்த நேரங்களில் அவள் கண்டிருந்தாள். என்றாலும் இந்த அட்டைக்கறுப்பு நிறத்தையுடைய காப்பிரிகளைப் பார்த்தால்தான் அவளுக்கு அதிக பயம் ஏற்படும். அச்சமயம் வீட்டுக்குள்ளே ஓடிச்சென்று கதவைச்சாத்தி தாழ்ப்பாள் இட்டுக்கொண்டு அச்சத்தோடு அவள் இருந்து கொள்வாள். அவள் பாடசாலைக்குச் சென்று கல்வி பயிலும் காலத்திலும் அந்த யுத்தம் நடந்துகொண்டு இருந்ததாக இன்றும் அவள் பலருடன் கதைத்துக் கொள்வாள். அந்த நேரம் விமானத்திலிருந்து குண்டுவீசும்போது கரிக்கோலை வாயில் வைத்து பற்களால் கடித்துக்கொண்டு அப்படியே கீழே நிலத்தில் விழுந்து படுக்கச்சொல்வார்கள். அவளைக்கல்வி கற்பித்த ஆசிரியர்கள். இன்றைக்கும் அவளால் சுலபமாக மறக்க முடியாத பிரமாதமான சம்பவங்கள் இவை. அதையெல்லாம் இன்று நடந்துகொண்டிருக்கும் இந்த யுத்த



படிப்பகம்

www.padippakam.com

காலத்துடன் அவள் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

அந்த நேரம் இந்த மண்ணில் கால்வைத்த பிறநாட்டு சிப்பாய்களே எங்களை எதுவிதத்திலும் இம்சைப் படுத்தவில்லை. ஆனால், இன்றைய நிலை. வேலியே பயிரை மேய்வதுபோல் நீதியற்ற செயல் நடக்கிறதே?- என்று அவள் சிந்தித்தாள்.

``கடவுளே இந்தச் சண்டையெல்லாம் எங்கட காலத்தோட முடியட்டும். இனிவாற சந்ததிகள் இந்தக்கொடுமையான நீசத்தனங்களையெல்லாம் ஒருமுறைகூட கண்ணால் காணாமல் சீவிக்கட்டும்`` என்று அவள் அதிலிருந்து கொண்டு நினைத்துக் கண்கலங்குகிறாள். அவள் இருக்கின்ற இந்த வீட்டில் ஒரேயொரு ஜன்னலைத்தவிர மற்றைய கதவுகளெல்லாம் முற்றாக பூட்டப்பட்டு இருக்கிறது. திறந்து இருந்த அந்த ஜன்னலின் ஊடே வீசிய காற்று அழுகுரல் போன்ற ஓசையுடன் அவளுக்குக்கேட்கிறது. அந்தக் காற்றின் இரைச்சலோடு ``கொறகொற`` வென்ற `டிரக்` வாகனத்தின் ஓசையும் காதுகளில் மந்தமாக அவளுக்குக்கேட்கிறது.

சதைப்பிடிப்பில்லாத தனது வளைந்துபோன கால்களை மடித்து வைத்துக்கொண்டு பயத்தோடு அந்த வீட்டுக்குள்ளே கிடக்கின்ற மேசைக்குக்கீழே அவள் குந்திக்கொண்டு இருக்கின்றாள். இப்போது என்ன நேரமிருக்கும்? என்று அறிந்து கொள்ள அவளுக்கு ஆர்வமாக இருக்கிறது. ஆனாலும், பக்கத்து சுவரில் இருக்கும் மணிக்கூட்டை சரியாய்க்கூட பார்க்க முடியாதபடி கிழவியினது பார்வை மங்கிப்போய் இருந்தது.

கிழவியின் வீட்டுக்குத் தொலைவாய் கேட்டுகொண்டிருந்த துவக்கு வேட்டுச் சத்தங்கள் கிட்டிய தூரத்திலிருந்து கேட்கத்தொடங்கியதும் தன்குழிவிழுந்த கண்களால் மிரண்டு மிரண்டு விழித்துக்கொண்டு மிகவும் பயப்பீதியில் நடுநடுங்கத் தொடங்கிவிட்டாள். சிறிது நேரத்தில் துவக்கு வெடியுடன் வெளிப்பட்ட மருந்து நெடியும் வந்து சுவாசத்தில்பட அவள் நிலைகுலைந்து போய்விட்டாள்.

இப்போது குய்யோ முறையோவென்று பக்கத்து வீட்டுக்குள் இருந்தும் ஒருசிலர் ஓலம் வைத்தழுகிறார்கள். அதைக்கேட்க, கிழவிக்கு பெரிதாக நெஞ்சடிக்கத் தொடங்கியது... அந்தக்குடும்பத்தினரும் எங்கும் வெளிக் கிட்டுப்போகாது வீட்டுக்குள்ளேயே இருந்திருக்கிறார்கள்- என்று அவளுக்கு அப்போது விளங்கிவிட்டது.

இந்தக்கிராமத்தில் எல்லோரும் வீடுகளிலே இராது வெளிக்கிட்டுப்போன பின்பும் தனியே குடும்பமாக இருக்கின்றவர்கள் இவர்கள்தான். நேற்றுத்தான் அந்த வீட்டிலிருந்து அந்தப்பிள்ளைகளின் தாய் இங்குவந்து தன்வீட்டு நிலைபரத்தை கிழவியிடம் எடுத்துக்கூறி வெகுவாகக் கவலைப்பட்டாள்.

``ஆச்சி, கையிலயெண்டால் ஒரு சேமும் இல்லை... இங்கினைப் பக்கங்களிலயும் ஏதாவது அப்பிடி யிப்பிடியெண்டு அசம்பாவிதமேதும் நடந்துதெண்டா வீட்டை விட்டுட்டு வெளிக்கிட்டுப் போய் வேற எங் கினையாச்சும் இருந்து என்னதான் செய்யேலும். இப்பிடி எங்கையும் அகதியெண்டதாய் வெளிக்கிட்டா அப் படிப்போற இடம்வழிய அதையிதை வாங்க காசு கையில வைச்சிருக்கவேணும். இந்தச்சின்னப் பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு ஒருபொட்டுப்பொடி கூட இல்லாம ஒட்டாண்டி கணக்காய் இருந்து கொண்டு போற இடம்வழிய பிச்சையெடுக்கிறதைக்காட்டிலும் வீட்ட இருந்து சாகிறதுதான் மேல்``

இப்படி அவள் தன்நிலைமையைச் சொல்லக் கேட்டதும் கிழவி, மிகவும் கவலைப்பட்டாள். அதோடு இதை கிழவியின் மகளும் கேட்டு வெகுவாய் மனம் நொந்தாள். அவளும் பக்கத்து வீட்டிலிருக்கும் இந்தக் குடும்பத்துக்கு இடையே அதைஇதைக் கொடுத்து வயிற்றுப்பசியாற்றி உதவி செய்துவந்தவள்தான்.

என்றாலும் இப்படியான யுத்தகாலத்தில் ஒருவர் கஷ்டத்தை இன்னொருவர் சுமக்க இயலாத நிலை. தன்குடும்பத்துத் தேவைகளையே பூர்த்தி செய்வதற்கு திண்டாடும் நிலைமையில் மற்றவர் குடும்ப கஷ்டத் தையும் சேர்த்து தலையில் தூக்கி வைத்துக் கொண்டு சுமக்க யாரால்தான் இயலும்?

முதலில் கொஞ்சம் மனஉறுதியோடு அந்த வீட்டில் இருந்தவர்களை அருகில் கேட்ட துவக்கு வெடிச் சத்தங்கள் பயத்தால் அவர்களை நிலைகுலையச் செய்துவிட்டது.

அவர்களுக்கு மூத்த பிள்ளை பெண்பிள்ளை. அவளுக்கு பத்துவயதிருக்கும். அடுத்தது ஆண்பிள்ளை அவனுக்கு ஆறுவயதாகிறது. மூன்றாவது தொட்டிலில் கிடக்கும் ஆறுமாதக்குழந்தை அந்தக் குழந்தையின் அழுகுரலை மேவி கணவன் மனைவி மற்றும் அந்த இருபிள்ளைகள் யாவரும் பலத்து அழுகிறார்கள்.

அந்தநேரம் அந்த வீட்டில் கதவு உடைக்கப்படும் சத்தம் கேட்கிறது. அதைத்தொடர்ந்து வீட்டினுள்ளே தொடர்ந்து கேட்கும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் நாற்றிசைகளிலும் எதிரொலித்து வானையும் பிளந்தாற்போலிருக்கிறது.

இதற்குப் பிறகு ஒரே மயான அமைதி. அந்த அழுகுரல்களும் நிலத்தினுள் அடங்கிப்போனது மாதிரியான நிலை.

வீட்டினுள் இருந்த கிழவிக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவளது எலும்புக்குருத்துக்குள் மின்சாரம் பாய்ந்தது போன்ற பேரதிர்ச்சியாய் இருக் கிறது. மனத்தைப்புரட்டும் துர்வாடை ஜன்னலினூடாக வருவது மாதிரி அவளுக்கு இருக்கிறது.

அந்த வேளையில் கிழவி இருக்கின்ற வீட்டுப் பின்கதவை யாரோ தட்டுகிறார்கள்.

``ஆச்சி... ஆச்சி... கதவைத் திறவுங்கோ``

கிழவி தன் காதை மூக்களவிற்கு விரித்துக் கொண்டு மூச்சை அடக்கிக்கொண்டு மீண்டும் கேட்டாள். கூப்பிடும்



படிப்பகம்

www.padippakam.com

# அதுபோதும் உனக்கு

-பவித்திரன்-

எங்கோ கண்காண முடியாத் தேசமொன்றில்
நீ வாழ்ந்திருக்கின்றாய்
தரையில் சிறுசெடி காவும்
மொட்டும் அரும்பி அரும்பி
மலராய் பூத்துக் குலுங்கும்
பின் உதிரும். நீ உதிர்வாய்
தளரா உள்ளத்துச் சிறுமியே
உனக்காய்ப் பிரார்த்திப்பேன்
உதடுகளையும் கண்களையும்
இறுகமூடி
சில கணங்கள்
மௌனமாய் அஞ்சலிப்பேன்

உயிர் குடித்த யுத்தமொன்றின்
தேசத்திலிருந்து எழுதுகிறேன்.
நாம் மனிதர்
மனிதம் உனது கவிதையில் வழிகிறது.
சுகந்தம் வீசியபடி
உன் இதயத் துடிப்பை
அது சுமந்து வருகிறது
காற்றை வானைக் கடந்து
எங்கும் வியாபிக்கிறது
வாழ்வை முழுமையாய் வாழ்ந்துள்ளாய்
அது போதும் உனக்கு

மழையின் பாடலை
இதழ் விரிக்கும் சிறுபூவை
வண்ணத்துப் பூச்சி ஒன்றின் உலாவை
ரசிக்கத் தெரிந்திருக்கிறது
அது போதும் உனக்கு

மெரிக்கோ ரவுண்டில்
விளையாடும் சிறுமிகளுடனான கூடல்
உனக்குப்பிடித்திருக்கிறது
ஏனென்றால்
உயிர் குடிக்கும்
யுத்தமொன்றின் தேசத்திலிருந்து
எழுதுகிறேன்
வரிகளில் நேசம் கவிகிறது
வலி தெரியவில்லை.

சிறுமியே
உனக்காய்ப் பிரார்த்திப்பேன்
உதடுகளையும் கண்களையும்
இறுக மூடி
சிலகணங்கள்
மௌனமாய் அஞ்சலிப்பேன்
ஏனென்றால்
தேசம் கடந்து கடல் கடந்து
வான் கடந்து எல்லைகள் கடந்து
நாங்கள் மனிதர்.

அந்த குரலுக்குரியவள், அவர்களது மூத்த மகள்தான் என்று பின்பு அவள் புரிந்து கொண்டாள். ஒருவாறாக தன் மரமரத்த கால்களில் கைகளை ஊன்றிக்கொண்டு அவள் எழுந்து நின்றாள். துக்கம் நிறைந்த நீண்ட பெருமூச்சின் சீற்றம் அவளிடம் ஒலித்தது. அவளது முழங்கால் எலும்புகள் ஆட்டம் கண்டன. அலை அலையா சங்கிலிக் கோர்வையாக வந்த இருமல் அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று. ஒருவாறாக எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு தள்ளாடித்தள்ளாடி நடந்துபோய் கதவுக்குமிழில் கைவைத்து பலம் கொண்டமட்டும் அதை திருப்பினாள். சிறியதொரு திருப்பலுடன் தடைப்பட்டாற்போல நிறுத்திக் கொண்டது அந்தக்குமிழ். பூட்டியிருக்கிறது கதவு என்று புரிந்துகொண்டாள் கிழவி. இதற்குள் அந்தச்சிறுமி கதவைத் தட்டுவது நின்றுவிட்டது.

``ஆச்சி.. ஆச்சி.. தண்ணி... தண்ணி...``

கடைசியாக அந்த அனுங்குதலோடு அடங்கியும் விட்டது. அவளது குரல், கிழவிக்கு விளங்கிவிட்டது. உடலில் துப்பாக்கி ரவை துளைத்த காயத்துடன் அவ்விடமாக அவள் வந்திருக்கிறாள் என்று அவள் ஊகித்துக்கொண்டாள். உடனே துயரத்தைத் தாங்காது, ``ஐயோ.. ஐயோ...`` வென்று அதிலிருந்தபடியே கதறினாள். அந்த இடத்தைவிட்டு தாண்டிப்போன ராணுவத்துக்கு கிழவியின் ஒப்பாரி கேட்கவில்லை. ஒன்றுமே அறியாத அப்பாவிகளான, அந்த ஏழைக் குடும்பத்தையே கொன்றொழித்து அதம் பண்ணிவிட்டு வெறித்தனமான மமதையில் ராணுவத்தினர் பிசாசு களைப்போல அவ்விடங்களில் போய்க்கொண் டிருந்தார்கள்.

கிழவியோ துக்கத்தை தாளமாட்டாது சுவரில் தனது தலையை ``டங்கு டங்கு` என்று மோதிக்கொண்டாள். பிறகு முகத்திலும் மண்டையிலும் கைகளால் அடித்துக் கொண்டு அழுதாள். அவளது மயிரற்ற இமையினுள் ளிருந்து பூஞ்சையடைந்த அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது. விழியோரங்களிலிருந்து கன்னத்தில் வழிந்த கண்ணீர் வாய்க்குள் இறங்கிக்கரித்தது. பல்லில்லாமல் உரு அழிந்துபோன அவள் வாயிலிருந்து சளிசளியாக வந்தது. முக்கலும் முனகலுமோடு கீழே நிலத்தில் சாய்ந்து தனது வளைந்துபோன கால்களை அவள் நீட்டிக்கொள்ள அதிக பாடுபட்டாள். அவளது தொண்டைக்குழியில் பிராணன் துடித்துக்கொண்டிருந்தது. கிழவியின் மூச்சு நிற்குமுன்பாக அவளது வெளுத்த முகத்தில் கடைசியாக கவலை படிந்த முறுவல் தோன்றி மறைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# நச்சு மரம்

த.ஜெயசீலன்

நச்சு மரம்
உங்கள் மனங்களிலே ஓராயிரம் ஆண்டின் முன்
நச்சுவிதையொன்று
நடப்பட்டிருக்கிறது.
அந்த விதைமுளைத்து அடுத்தடுத்துக்கிளைவிட்டு
ஒருபெரிய விருட்சமாய் உயர்ந்துநிறப்பூப்பூத்து
பூக்கள் கருக்கட்டப்
புதுவடிவிற் காய்காய்த்து
காய்கள் கனிய கனக்க நச்சு விதைகளினை
உங்கள் பரம்பரையின்
மனவயலில் விதைத்துளது.
உங்கள் மனவிருட்சம் உங்களோடே
இருந்திருந்தால்
எங்களுக்குப்பிரச்சனைகள் ஏதுமில்லை;
ஆனாலோ...
அந்தப்பெருவிருடசம் அயலிற் செழித்து எங்கள்
சந்ததியின் உயிருறுஞ்சித்
தழைத்து வளர்ந்து; பல
நச்சுப்பழங்களினை நட்டுள்ளோர் தின்னவைத்து;
எங்கள் நிழலான எழில்மரங்கள் கூட.. உங்கள்
சொந்தமெனச் சொல்லித் தொழவைத்து;
தொழாப்போது
எங்கள் நிலமரத்தை எரித்திடவும் நச்சுவிதை
தன்னையே பாவித்துத் தலையெடுத்து ஆடியதால்...
உங்கள் மனமரத்தின் உருப்பெருக்கும்
விஸ்வரூபம்
எங்கள் நிழல்மரத்தை ஏப்பமிட்டுப் போனதனால்..
உங்கள் மனமரத்தை
ஒவ்வொரு கொப்புகளாய்
எங்கள் தலைமுறைகள்
வெட்டிவீழ்த்தத்தொடங்கினவாம்.
சுதாகரித்துக்கொண்டதுங்கள் மனவிருட்சம்...
என்றாலும்
விடாப்பிடியாய் எம்மவர்கள் வெட்டவெட்ட...
ஆடியோயும்.
காட்டேறி போலக்களைத்து மிகப்பலங்குன்றி
எழும்ப முடியாமல்
அடிவேர் தனைக்காத்து
உறங்கு நிலையடைந்து ஓசையற்றடங்கிற்று.
உங்கள் மனவிருட்சம்
ஒடுங்கியோய்ந்து போனதால்
எங்கள் நிழல்மரங்கள் என்றும்போற்
கிளைத்தனவாம்.
உங்களிலே பலபேர்
அந்நச்சு விருட்சத்தை
'மறந்துவிட்டு' எங்கள் மனை வரைக்கும்
வந்தீர்கள்.
கரங்கூப்பிக்கொண்டோம்.
கட்டி அணைத்திட்டோம்.
''வருங்காலம் வசந்தமாய் மாறும்'' எனக்
கனாக்கண்டோம்,
ஆனாலோ இன்றும்
உங்கள் சிலர் மனதில்
நச்சு மரந்துளிர்த்ததென 'நனவு கதைக்கிறது'
நச்சு மரம், பழங்கள்
நச்சு விதைகள் இவை
நிச்சயமாய் 'எங்களுக்கும் உங்களுக்கும்'
நிம்மதியைத் தந்துவிடப்போவதில்லை,
யதார்த்தம் உரைக்கிறது.




ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

தொடர்புகளுக்கு...
தி.ஞானசேகரன்
19/7,பேராதனை வீதி,
கண்டி.



ஆத்மா
மனிதத்தின் இருப்பைத்தேடி
தொடர்புகளுக்கு...
பிரதம ஆசிரியர்
'ஆத்மா'
மனிதம் கலந்தாய்வுக்குழு
இல.40 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.




படிப்பகம்

www.padippakam.com






# உலகமயமாதல், பிராந்தியவாதம், ஜனநாயகம்- சில புரிதல்களும் தீர்வுகளும்

சமீர் அமீன்

ஆபிரிக்கத் தேசியங்களுக்கிடையில் பிராந்திய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருபவரான சமீர் அமீன் ஆபிரிக்க நாடான செனகலில் உள்ள மூன்றாம் உலகமன்றம் [Third world forum] என்ற அமைப்பை தலைமை தாங்கி நடத்திவந்தவர். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். "உலக மயமாதல் காலத்தின் முதலாளியம்" [Capitalism in the age of Globalization] பல மைய உலகத்தையும், சமச்சீரற்ற அபிவிருத்தியையும் நோக்கி - தொடர்புறவுச் சிதைப்பு [Delinking towards a Polycentric World and Unequal Development] ஆகியன அவற்றுள் முக்கியமான நூல்கள். அவரிடமிருந்து உலகமயமாதலின் பொருளாதார விளை வுகள் பற்றிய எண்ணக்கருக்கள் 'Multinational Moniter' என்ற இதழால் பெறப்பட்டது.

கேள்வி: உலக முதலாளிய அமைப்புமுறை ஸ்தம்பித நிலையை எதிர்கொள்வதாக தாங்கள் கூறுகிறீர்கள். அதன் மூலமாக நீங்கள் கருதுவது யாது?

தமிழாக்கம் : க.வேல்தஞ்சன்

அமீன்: இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னர் முதல் முப்பது ஆண்டுகளுக்குள் முதலாம் இரண்டாம் மூன்றாம் உலக நாடுகளில் என்றைக்கும் இல்லாத உயர் வளர்ச்சி வீதம் ஏற்பட்டிருந்தது. [முதலாளித்துவ உலகம் – மேற்கு, சோஸலிச உலகம் – கிழக்கு, மூன்றாம் உலக நாடுகள் – தெற்கு] இந்த மூன்று தசாப்த காலத்தினுடைய உயர் வளர்ச்சியும் அதற்கான முதலீடும் குறிப்பிடத்தக்கவை. முதலாளித்து வத்தினுடைய கடந்தகால வரலாற்றில் என்றைக்குமே முன்னர் அடையப்படாத ஒரு பாரிய முதலீடும் வளர்ச்சியு மென்றே அதைச் சொல்லலாம். இது எவ்வாறு எனில் சந்தைகள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையி னாலாகும். அதாவது ஒருபுறத்தில் முதலாளித்துவ மூலதனமும், மறுபுறத்தில் தொழிலாளர் வர்க்கமுமாக அவை இரண்டுக்குமிடையிலான தாக்குவிசைகளின் சமநிலைப் புள்ளியினாலேயே இது சாத்தியப்பட்டது. பாசிசத்துக் கெதிராகக் கிடைத்த ஜனநாயகத்தினுடைய வெற்றியும், காலனித்துவத்துக் கெதிராகக் கிடைத்த ஆசிய ஆபிரிக்க மக்களின் வெற்றியுமாக இந்த இரட்டை வெற்றியின் விளைவினால் மிக நீண்டகாலத்துக்கு முன்பாக முதலாளித்துவ மூலதனத்துக்கு இருந்த சாதகமான நிலைமையைக் காட்டிலும் இச் சமநிலைப்புள்ளி சாதகமற்றே இருந்தது. பிரபல்யமான இந்த இரட்டை வெற்றி தொழிலாள வர்க்கத்தினரது சமூகத் தேவைகளுக்கு ஏற்றதாக முதலாளிய மூலதனத்தை நிர்ப்பந்தப்படுத்தி நிபந்தனைகளை உருவாக்கியது. தொழிலாள வர்க்கத்தினரின் தேவைகட்கு முதலாளிய மூலதனத்தை



படிப்பகம்

www.padippakam.com

சரிப்படுத்துவது [the adjustment] என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைப்பொருளாதாரம் என்பதாகும். உச்ச இலாபத்தை உருவாக்குவது என்ற நியாய வாதத்தை முதலாளிய மூலதனம் ஒருதலைப் பட்சமாக அமுலாக்க முடியாமல் இருந்தது. அதனால்தான் என்னவோ உயர் வளர்ச்சி யினதும் ஒரு வித வேகமான வளர்ச்சியினதும் தளமாக அது அமைந்தது. ஆனால் காலப் போக்கில் படிப்படியாக குறிப்பிடத்தக்களவு பல்வகைக் காரணங்களினால் மேற்சொன்ன தாக்குவிசைகளின் சமநிலைப்புள்ளி முதலாளிய மூலதனத்துக்கு சார்பான நிலைக்கு இணங்கக் கூடியதாக மாற்றப்படலாயிற்று. மேற்குலகத் தினுடைய முதலாளிய மூலதன மையங்களை நாம் பார்த்தால் உலகமயமாதலின் அழுத்தங் களினால் நலன்புரி அரசுகளும் [Welfare State] சரியான செல்நெறியில் நகர்ந்திருக்க வேண்டிய ஜனநாயகமும் படிப்படியாக தேய்த்து அழிக்கப் பட்ட முறைமையினை கண்கூடாகப் பார்க் கலாம். அதாவது உலகமயமாதலின் அழுத் தங்களுக்கு இணங்கும் தேசிய பொருளா தாரங்கள் கஸ்டப்பிரசவங்கள் மூலம் பிரச விக்கப்பட்டன. மறுபக்கத்தில் கிழக்கில் சோச லிசம் என்று அழைக்கப்பட்ட முறைமை யினுடைய மட்டுப்படுத்தல்கள் மற்றும் உள்நாட்டு நிலைமைகளால் இச் சமநிலை குழம்பிப்போயிற்று. மற்றும் ஒரு புறத்தில் பூமியின் தெற்கில் குறிப்பாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்நாடுகளில் நிலவிய உட்பூசலகளால், அந்தக்காலத்தில் நிலவிய தேசிய ஐக்கியம் தேய்ந்துஅழிய ஆரம்பித்தது. தொழிலாளர் வர்க்கத்தின் தேவைகளுக்கு ஏற்றவகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முறைமை [இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னரான சூழ்நிலை] அழியத்தொடங்கியமை மேற்சொன்ன தாக்குவிசைகளின் விளை யுளினால் ஏற்பட்டிருந்த சமநிலையின் மீது ஒரு மாற்றத்தைக் கொண்டிருந்ததோடு ஏற்படுத் தப்பட்ட புதிய முறைமை முதலாளிய மூல தனத்துக்கு சாதகமானதாகவும் மாறியது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றீகனையும் பிரித்தானியாவின் இரும்புப் பெண் என்று வர்ணிக்கப்பட்ட பிரித்தானிய முன்னாள் பிரதமர் மாக்ரெட் தட்சரையும் இதன் முக்கிய அடையாளங்களாகவும் பிரகடனங்களாகவும் நாங்கள் கூற முடியும். றீகன் மற்றும் தட்சர் ஆகியோரின் விடயமாக மட்டும் இதனை நாம் பார்க்க முடியாது. சோவியத் அமைப்பும் அதன் அணியும் ஸ்தம்பித்துப் போனமையைப் போல தெற்கினுடைய தேசிய மரபுவாத ஆட்சிகளில் பல தமக்கான சட்ட அந்தஸ்தை இழந்து போனமையும் இதற்குக் காரணமாகும். இந்த முழு உலகையுமே ஒரு சந்தை முறைமையாக்கி அதன் மீதில் ஆட்சிசெலுத்துகின்ற முற்றிலும் ஒரு முதலாளித்துவக் கனவின் மீள் அவ தாரத்திற்கு இது வழிவகுத்தது. உலக சமூ கங்கள் அனைத்தையும் கீழ்த்தரத்துக்கு இறக்கி, வெறும் சந்தை அடிப்படைவாத உறவுகளை மட்டுமே வளர்த்து முதலாளிய மூலதனமே தனிக்கோலோச்சுகின்ற முறை மையே இதுவாகும்.

கேள்வி: அவ்வாறெனில் மூலதனத்தின் ஒழுங்காக்கல் அகற்றப்பட்டமை வளர்ச்சி யையும் அபிவிருத்தியையும் குழி தோண்டிப் புதைத்ததா?

அமீன்: சந்தையை ஒழுங்காக்கலை உருக்குலைக்கின்ற [Deregulation of the market] புதுத்தாராளமயப்பார்வை [New liberal view] என்கின்ற விடயம் – அது உண்மையில் என்ன வெனில் சமூக நலன்களை அடக்கி ஒடுக்கு கின்றதாகவே அர்த்தப்படுகின்ற அந்தப் பார்வை உயர் வளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தாமல் எதிர் விளைவையே ஏற்படுத்தியுள்ளது. முன்னைய தசாப்த காலங்களில் இருந்த நிலைக்கு அது வந்தது. இந்த மந்த நிலை 1970 களின் ஆரம்பத்தில் இருந்து தொடங்கியது. கைத்தொழில் மயமாக்கத்தின் சோவியத் தசாப்தத்தின் பொழுது ஏற்பட்ட அந்த உயர் வளர்ச்சி வீதங்களின் பிறகு இந்த மந்த நிலை மேற்கில் மட்டுமல்ல கிழக்கிலும் நிகழ்ந்தது, தெற்கிலும் நிகழ்ந்தது.1980க்குர் 1990க்கும் இடையில் இருந்த ஆபிரிக்க பொருளாதார வளர்ச்சி வீதம் 1960களில் இருந்த வளர்ச்சி வீதத்திலும் 1/2 மடங்கு குறைவாகும். 1980க் கும், 1990க்குமிடைப்பட்ட காலம் என்பது தற்போதைய கட்டமைப்புச் சரிப்படுத்தல் நிகழ்ந்த காலமாகும். இந்தச் சம காலத்தில் முதலீட்டு வீதங்களும் உற்பத்தித்துறை விரி வாக்கமும் வீழ்ச்சி கண்டது. முதலாளிய மூல தன மிகையினால் உருவான ஒரு புதுவகைச் சிக்கலுக்கு இது வழிவகுத்தது. மேற்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ உற்பத்தித் துறை முறைமையினுடைய விரிவாக்கத்தினுள் நுழை வதற்கான ஒரு நுழை வாயிலை கண்டு பிடிக்க முடியாமல் மிகையான அந்த முதலாளிய மூல தனம் தடுமாறிற்று. இந்த பிரச்சனையைத் தவிர்ப்பதற்காக இந்த மூலதனத்தினுடைய சொந்தக்காரரான முதலாளிகள் தங்கள் மூலதனத்திற்கான நிதியியல் சார்ந்த மாற்று நுழைவாயில்களை திறப்பதற்கு ஏற்ற சட்ட திட்டங்களை வடிவமைத்துக் கொண்டிருக் கிறார்கள்.உண்மையில் இது உயர் வளர்ச்சி வீதங்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்காமல் ஒப்பீட்டளவில் வளர்ச்சிக்கு எதிரான ஒரு ஸ்தம்பிப்பையே ஏற்படுத்தியுள்ளது.மேற் சொன்ன நாடுகளின் [OCED Countries] 1950களிலும் 1960களிலுமிருந்த வளர்ச்சி வீதத்தினுடைய அரைவாசி அளவுக்கு வளர்ச்சி வீதம் ஸ்தம்பிப்பதற்கான ஆரம்பமே இது. ஒரு ஒட்டுமொத்தமான ஸ்தம்பிப்பு இல்லா விட்டாலும் ஒவ்வொரு நாடுகளுக்குள்ளும் பூகோள மட்டத்தில் பல்வேறு நாடுகளுக்கிடையிலும் இந்த உலகின் ஒவ்வொரு இடத்திலும் வளர்ந்து செல்லும் சமத்துவமின்மையை நீங்கள் தரிசித்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் மேலும் அரசியல் ரீதியாகவும் சமூகரீதியாகவும் மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாததும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான நிலையாக இது இருக்கிறது. முதலாளிய மூலதனத்தினுடைய ஆழமான சிக்கலுக்கான காரணம் யாதெனில் அந்த முதலாளிய மூலதனத்தின் ஒருதலைப்பட்சமான ஆட்சியை உணர்த்துவதற்கான முற்றிலும் திட்டவட்டமான முயற்சியாக அது இருப்பதாகும். முதலாளிய மூலதனத்துக்குரிய ஒருதலைப்பட்சமான ஆளுகைக்கு இணங்க குறிப்பிட்ட இந்த உலகளாவிய பொருளாதாரத் தொகுதி இயங்க முடியாது.

கேள்வி: கடந்த இரண்டு வருடங்களாக மிக உயர்ந்த அளவில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வளர்ச்சியின் மீள்



படிப்பகம்

www.padippakam.com

புதுப்பிப்பு [Renewal of growth] ஏற்பட்ட வண்ணம் உள்ளது. இந்நிலையில் புதிய தொலைத் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் உலகப்பொருளாதாரத்தை சிலவேளை மீட்டு புத்துயிர்ப்பு அளித்தாலும் அளிக்கக் கூடும் என நினைக்கிறீர்களா?

அமீன்: இல்லை. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வெவ்வேறான கூட்டாளிகளை உடனடி உதாரணமாக எடுத்துக்கொண்டால், தொழில் நுட்பப் புரட்சியினுடைய இறுதி விளைவு [குறிப்பாக தொலைத் தொடர்பாடல்கள் சார்ந்தவை] ஒரு புறத்திலும் அந்தப் புரட்சியினுடைய விசேடித்த விளைவுகளும் அந்த வெவ்வேறான கூட்டாளிகளினுடைய ஒப்பீட்டளவிலான வெற்றிய டைவுகள் மீதான ஏனைய தொழில் நுட்பங்கள் மறுபுறமாக நாங்கள் வேறுபடுத்தி விளங்க வேண்டும்.

தொழில் நுட்பப் புரட்சியினுடைய விளைவுகள் தொடர்பில், முதலாளியத்தின் ஆழ்ந்த கட்டமைப்புசார் நெருக்கடிகளின் ஒவ்வொரு காலப்பகுதியும் கைத்தொழிற் புரட்சியினுடைய ஒரு காலப்பகுதியாக இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக 1873 தொடக்கம் 1896 வரைக்குமான காலப்பகுதியில் நிகழ்ந்த கட்டமைப்புசார் நெருக்கடியை எடுத்துக்கொள்ளலாம். இதுவே இரண்டாவது கைத்தொழிற் புரட்சிக் காலமாக இருந்தது. [ முதலாவது கைத்தொழிற்புரட்சி பத்தொன்பதாம் நூற்றாண்டினுடைய ஆரம்பப்பகுதியில் இடம் பெற்றது.] இந்த இரண்டாவது கைத்தொழிற் புரட்சியானது மின்சாரம், பெற்றோலியம், தானியங்கி இயந்திரசாதனங்கள் மற்றும் ஆகாய விமானங்கள் ஆகியனவற்றுடன் சம்பந்தமானது. இருபதாம் நூற்றாண்டின் கைத்தொழில் அபிவிருத்திக்கு அடிகோலிய தொழில் நுட்ப்பங்கள்தான் இவை. டொலரின் மிதக்கும் பாங்கு [Floating of the dollar], பிரிட்டன் வூட்ஸ் [Bretton Woods] ஆகியன முடிவுக்கு வருதலுடன் 1971 இல் தற்போதைய நெருக்கடி ஆரம்பமானது. இந்த நெருக்கடிகளுடன் மூன்றாவது கைத்தொழிற்புரட்சியை நாங்கள் எதிர்கொள்ளத் தொடங்கினோம். இந்த மூன்றாவது கைத்தொழிற்புரட்சி என்பது தகவலியல் [Informatics], உயிரின மரபியல் [Biogenitics] ஆகியனவும் அவற்றின் அபாயங்களும், விண்வெளி ஆராய்ச்சிகளும் அணு சக்திதொழில் நுட்பங்களும் அவற்றின் கேடுகளும் என்றவாறான அடிப்படைகளைக் கொண்டுள்ளது. உயர் வளர்ச்சிக்குரிய நிபந்தனைகளை உருவாக்குவதற்கு மேற்சொன்ன தொழில் நுட்பங்கள் – தத்தமது தற்போதைய பாங்குகளுடன் – போதியவையல்ல. ஏனெனில் வளர்ச்சியானது பல்வேறு அசைவியக்க சக்திகளின் சமநிலையொன்றில் தங்கியுள்ளது.

இவ்வாறான ஒவ்வொரு காலகட்டத்திலும் முதலாளிய மூலதனத்தின் தேவைகளும் நலன்களும் தமது ஒரு தலைப்பட்சமான சொந்த நன்மைக்காக கைத்தொழிற் புரட்சியை சுரண்டிவருவது கண்கூடு. ஏனெனில் ஒரு கைத்தொழிற்புரட்சி ஏற்படுகின்றதென்றால், அது கருதுவது யாதெனில் பழைய கைத்தொழில்கள் பாழடைய விடப்படுகின்றன என்பதும் கூட்டான உறுதிப்பாட்டை தொழிலாளர் அணியும் அதன் தொழிற்பயனுறுதியும் இழக்கிறது

## நோ எனும் சொல் பற்றி...

நோகிறது என்ற சொல் நோவின் விளைவான கண்ணீரினதும் ஓலத்தினதும் இடத்தைப் பிடித்து விட்டது. நோ எனுஞ் சொல் நோவின் வெளிப்பாட்டை விவரிக்கவில்லை.அதன் இடத்தைப் பிடித்துவிட்டது.

இவ்வாறு, நோவின் விடயத்தில் அது ஒரு புதிய நடத்தை முறையை உருவாக்கிவிட்டது.

அச்சொல் நோவுக்கும் நமக்குமிடையே ஒரு மௌனப் பாவனை போல வந்து விடுகிறது. அது ஒருமௌனமாக்கல், அது களி மண்ணுக்குங் குருதிக்குமிடையிலான தையலை அவிழ்க்கும் ஒரு ஊசி.

அச்சொல் ஒருவன் தன்னிடமிருந்து விடுதலை பெறுவதை நோக்கிய ஒருசிறு அடி.

வேறெவரேனும் இருப்பார்களாயின்... இருப் பார்களாயின்...

**விற்சென்ஸ்ற்றைன்**

என்பதோடு அத்தொழிலாளர் அணியினர் இலகுவில் பாதிக்கப்பட்டு இழிநிலை எய்தும் சந்தர்ப்பங்களுக்கும் உட்படுகின்றனர். ஆகையினால், முன்னைய கால கட்டங்களில் தொழிலாள வர்க்கம் வெற்றிகொண்டு தக்க வைத்திருந்த உரிமைகளை வேரோடு அறுத்தழித்துவிடும் நிலையில் முதலாளிய மூலதனமுள்ளது. ஒரு கைத்தொழிற் புரட்சியுடன் அட்டூழியங்களும் சமத்துவமின்மைகளும் ஓங்கிவளர்கின்றன. [முதலாளியத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் இடையில் மட்டுமல்ல – இந்நிலை பல்வேறு வகையான தொழிலாளர்களுக்கி டையிலும் உள்ளது.] ஒட்டுமொத்தமாக தொழிலாளர் வர்க்கங்கள் நொந்து நலிந்து தாக்கப்படும் நிலைமையிலுள்ளன.

கைத்தொழிற்புரட்சியை முதலாளிய மூலதனம் தனது விசேடித்த தனிப்பட்ட சுயநலத்துக்காக பயன்படுத்துவதுடன், ஒரு தலைப்பட்சமாக அது நகர்ந்தியங்கக்கூடியதாக இருக்கும் வரை நெருக்கடிகளுக்குள்ளிருந்து வெளியேற முடியாத நிலையிலேயே இருக்கும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த நிலைமையுடன் தற்போதைய நிலைமயை நாங்கள் ஒப்பிடமுடியும். அக்காலமென்பது ஒரு நீண்டகால நெருக்கடிக்குப் பின்னரான முதலாவது உலகமகாயுத் தத்துக்கு முன்னரான குறிப்பிட்ட பதினைந்து ஆண்டுகளாகும். அக்காலகட்டத்திலிருந்த வாதப்பிரதி வாதங்களுக்கிடை யிலான ஊடல்களும் கூடல்களும் 'தம்பட்டம்' அடித்தது எதுவென்றால், முதலாளிய மூலதனத்தின் ஒரு தலைப் பட்சமான ஆளுகையானது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நன்மைகளையும் வரப்பிரசாதங்களையும் அள்ளி வழங்கி அருள்பாலிக்கக் காத்திருக்கிறது என்பதாகும். அச்சொட்டாக அதையொத்த ஒரு சூழ்நிலையையே இன்று கண்முன்னே காண்கிறோம். அன்றைய காலமானது தொழிலாள வர்க்கத்தை


படிப்பகம்

www.padippakam.com

பலவீனப்படுத்திய காலமாகும். பிரிட்டனின் இன்றைய பிரதமர் ரோனி பிளையர், ஜேர்மனியின் தலைவர் ஹெர்காட் ஸ்சுரோடர் போன்றோரை நோக்கி – அதாவது வலதுசாரித்துவத்தை நோக்கி சோசலிசக் கட்சிகளின் இயக்கம் நகர்வதைப் பார்த்தால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோசலிசக் கட்சிகள் வலதுநோக்கி நகர்ந்தமையை அச்சொட்டாக ஞாபகப்படுத்துகிறது – அன்று கூறப்பட்ட காரணங்கள் என்னவாக இருந்தனவோ அதே காரணங்களே இன்றும் கூறப்படு கின்றன.

தனித்துப் பார்க்குமிடத்து கைத்தொழிற் புரட்சியானது வளர்ச்சிக்கு காரணமாக இருக்கிறது என்றோ இல்லையென்றோ நான் ஏதும் கூறவரவில்லை. முதலாளிய மூலதனத்தின் பக்கம் ஒரு பக்கச்சார்பாகச் செல்லாத வகையில், சமூக அசைவியக்கங்களின் ஒரு சமநிலையான சிறந்த நிலைமை உருவாக்கப்படுவதற்கான அரசியல், சமூக நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட முடிந்தால் கைத்தொழிற் புரட்சி வளர்ச்சிக்கு ஏதுவாகும்.

இன்னொரு பரிமாணத்தில் இது உலகின் வெவ்வேறு பாகங்களில் எப்படி வேலைசெய்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டுடன் ஐரோப்பா மற்றும் ஜப்பானை ஒப்பிட வேண்டியுள்ளது. இன்றைய வாதப்பிரதிவாதங்களுக்கூடாக *அமெரிக்காவில் ஒப்பீட்டளவில் அதியுயர் வளர்ச்சி வீதம் உள்ளது என அழுத்திச் சொல்லப்படுகிறது என்பது உண்மை தான். நீண்டுசெல்ல இருக்கும் வரலாற்று ஓட்டத்தில், இந்த வளர்ச்சி வீதம் சமுகரீதியாக தாங்கிக்கொள்ள முடியாததாக மாறும்; சமகாலத்திலும் அவ்வாறே. அமெரிக்காவின் தொழிலாளி வர்க்கம் கூட காலவரையறையற்று எதிர்க்கும் என்கிற அளவுக்கு வளர்ந்துசெல்லும் சமூக அநீதிகளையும் சமத்துவமின்மைகளையும் பாதகங்களையும் அது தன்னோடு கொண்டுள்ள 'வளர்ச்சியாக' உள்ளது. இந்த 'வளர்ச்சி' என்பது மிகவும் செயற்கைத்தனமானதும் ஏனைய வர்களின் செலவில் செழிப்பதாகவும் உள்ளது.* அமெரிக்க நாட்டினது வெற்றிகளின் விகிதாசார அளவுக்கு, உலகின் ஏனைய பாகங்களின் குறைவெற்றிகள் அல்லது தோல்விகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஐரோப்பாவையும் ஜப்பானையும் பார்க்கலாம். இதன் கருத்து யாதெனில் விதந்து சொல்லப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியமென்பது, விரைவில் சிதைந்து சிதைக்குப் போகக்கூடிய பலவீனமான தடுபொறிநிலையிலேயே உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன் ஏகாதிபத்திய நாடாக விளங்கியது. அது பாரிய ஏற்றுமதி மிகையை தன்னகத்தே கொண்டிருந்தது. அதாவது அப்பொழுது அந்நாடு கொண்டிருந்த, முதலாளிய மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் ஆற்றலின் நேரொத்த விளைவே அந்த பாரிய ஏற்றுமதி மிகை. அந்த நாடு ஆஜென்ரீனா, இந்தியா போன்ற நாடுகளில் புகையிரத சேவைக் கட்டுமானங்களை அமைத்தல் போன்ற விடயங்களில் நிதியிடலைச் செய்தது. தற்போதைய உலகமயமாதல் ஒழுங்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் பார்ப்போமானால் அன்றைய ஏகாதிபத்திய நாடான பிரிட்டனில் அன்று நிலவிய நிலைமைக்கு முற்றிலும் எதிரான நிலைமையே அமெரிக்காவில் காணப்படுகிறது. அமெரிக்க நாட்டின் வர்த்தகச் சமநிலை பாரிய துண்டு விழும் தொகையை (விழுக்காட்டை) கொண்டுள்ளது.

இந்தத் துண்டு விழும் தொகை மூலம் நாம் விளங்க வேண்டியது யாதெனில், அமெரிக்க ஏகாதிபத்திய வல்லாண்மை என்பது ஒன்றும் அமெரிக்காவுக்குள்ளேயே பிறப்பெடுப்பது அல்ல என்பதும் அது உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வடிந்தோடிச் சென்று அமெரிக்காவுக்குள் செல்கின்ற மூலதனத்தின் வடிவமே ஆகும் என்பதாகும். இதற்கு நிதியம் இடுவது யார்? இந்த முழு உலகமும்தான். குறிப்பாக ஐரோப்பியர்களும் ஜப்பானியர்களுமாகும். ஐரோப்பாவும் ஜப்பானும் காலவரையறையில்லாமல் இதை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நினைக்கவில்லை. இந்த நிலைமை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இரட்டை அச்சுறுத்தலாகும். இது சொல்லப்படும் அமெரிக்க உயர் வளர்ச்சிக்கு எதிரான அதன் சிதைவுக்கான சாத்தியங்களை இரண்டு மடங்காக்குகிறது.

கேள்வி: மத்திய நிலையிலுள்ள முக்கியமான நாடுகளில் ஸ்தம்பித்தலும் அவற்றின் வல்லாண்மை சுருங்குதலும் நடைபெறுகிறபோது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அதிகபட்ச நன்மைகளை அடையலாம் என்று ஆன்றே குண்டெர் பிராங் [Andre Gunder Frank] வாதாடுகிறார். தற்போதைய காலகட்டம் பற்றிய தங்களுடைய எண்ணப்பாடு என்ன?

அமீன்: ஆன்றே குண்டெர் பிராங்கின் ஒரு நண்பனாக நான் உள்ளேன். ஆனால் நான் அவரது எழுந்தமானமான மேலோட்டான பொதுத்தன்மைகளின் அடிப்படையிலான கருத்துக்களையிட்டு எச்சரிக்கையாக உள்ளேன். *நாங்கள் எந்தக் காலகட்டத்தில் நிற்கிறோம் என்பதில் அல்லாமல் வர்க்கப் போராட்டத்தில்தான் ஒவ்வொன்றும் தங்கியுள்ளது என நான் நினைக்கிறேன். சமூக, அரசியல் சக்திகள் உலகின் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறானவையாக, ஒத்த தன்மை இல்லாதவையாக இருப்பதன் காரணமாக அபிவிருத்தி மாற்றங்கள் உலகம் முழுவதும் சமமற்று காணப்படுகின்றன.* தற்போதைய நெருக்கடிக் காலகட்டத்தின் பொழுது மூன்றாம் உலக நாடுகள் எல்லாம் கஷ்ட நிலைக்குள்ளாகவில்லை. பிரதான நாடுகளான சீனா, ஓரளவுக்கு இந்தியா மற்றும் தென்கிழக்காசியாவில் கொரியா மற்றும் தாய்வான் இந்த நெருக்கடிகளால் கஷ்டப்படவில்லை. இந்நாடுகளின் சனத்தொகை உலகின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாகும். ஏனைய நாடுகளைக்காட்டிலும் உலகமயமாதலின் ஆதிக்கத்துக்கு, மேற்சொன்ன நாடுகள் குறைந்த அளவு இடமே கொடுத்ததால் அவை உயர் வளர்ச்சி வீதத்தைப் பேணி வருகின்றன. இந்த உலக முறைமைக்குள் தமது நகர்வை முறைப்படி ஒழுங்காக்கி அவை பேணிக் கட்டுப்படுத்தி வருகின்றன. அவை ஜனநாயகரீதியாக உள்ளனவா இல்லையா என்பது சர்ச்சிக்கப்படலாம். ஆனால் அந்நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்தினால் அவற்றின்



படிப்பகம்

www.padippakam.com

உள்நாட்டு ஆளும் தரப்பு ஒரு குறிப்பிட்டளவு தானும் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதற்கு மிக எதிர்மாறான நிலைமையே ஆபிரிக்காவில் உள்ளது. அதுவே உலகில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இன்னமும் மேலும் மேலும் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு' போகக்கூடிய கண்டமாகவுள்ளது. ஆபிரிக்காவில் தொழிலாளர் வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் உள்நாட்டு ஆளும்தரப்பு இல்லை. அவர்கள் கட்டுப்படுத்தும் நிலையிலும் எதுவுமில்லை. இவற்றின் விளைவாக அங்கு வளர்ச்சிவீதம் பூச்சியமாகவுள்ளது. தரகு முதலாளிகள் [Bourgeios Capitalists] கொள்ளக்கூடிய வெவ்வேறு வடிவங்கள் எண்ணப்பாங்குகள் என்பவற்றின் நிமித்தமாக இந்த உலக ஒழுங்கை கட்டுப்படுத்துவது தொடர்பில் உள்ளூர் ஆளும் வர்க்கத்தின் தகைமையளவின் மீது, ஒத்த அதே காலத்துக்குரிய வித்தியாசங்கள் தங்கியுள்ளன என்பதை நாங்கள் காண்கின்றோம்.

கேள்வி: செல்வந்த நாடுகளின் நெருக்கடிக் காலத்துக்குரிய முகாமைத்துவமே தவறாக வழிநடத்தப்படுகிறது என்றும் கட்டமைப்புச் சரிப்படுத்துகை என்பது தவறாக வழிநடத்தப்படவில்லை என்றும் நீங்கள் எழுதிவருகிறீர்கள். இதன்மூலம் நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

அமீன்: உலக வங்கியினாலும் சர்வதேச நாணய நிதியத்தினாலும் தென்னரைக் கோளத்தின் பெரும்பாலான நாடுகளிலும் முன்னாள் சோசலிச நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் சோவியத் யூனியனுக்குள்ளிருந்து பிரிந்த நாடுகள் ஆகியவற்றிலும் அமுலாக்கப்படுகின்ற 'கட்டமைப்புச் சரிப்படுத்துகை' [Structural Adjustment] ஒருதலைப்பட்சமானது. இந்நாடுகளின் பொருளாதாரங்களின் சரிப்படுத்துகை, ஆதிக்கம் மிக்க முதலாளிய மூலதனத்தின் தேவைகளுக்கு ஏற்றதாக ஏற்படுத்தப்படுவதாக உள்ளது. இதன் கருத்து வேறொன்றுமில்லை – அதாவது முக்கூட்டுப் பிணைப்பாளிகளான அமெரிக்க ஐக்கிய நாடு, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகியவையின் மூலதனத்துக்கு பங்கம் விளையாதவகையிலான சரிப்படுத்துகைதான் அது. இது கட்டமைப்பு ரீதியானது அல்ல. வெறுமனே ஒரு சூழ்நிலை நிமித்தமானது. இச்சரிப்படுத்துகை என்பது முதலாளிய மூலதனத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கான யுக்தியான நெருக்கடிகால முகாமைத்துவத்துக்கான கருவிகளாகும். [the tools of crisis management] அதாவது முதலாளிய மூலதன மிகைக்கு ஏற்ற வடிகால் அல்லது நுழைவாயிலை கண்டுபிடித்தலே அம் முகாமைத்துவத்தின் மிகப் பிரதான இலக்கு. மூன்றாம் உலக நாடுகளினதும் முந்நாள் சோவியத் யூனியனுக்குள் இருந்து பிரிந்த நாடுகளினதும் வெளிநாட்டுப் படுகடனுக்கான மூலகாரணம் மேற்சொன்ன இலக்கை நோக்கிய முகாமை ஆகும்.

மேற்சொன்ன முக்கூட்டுப் பிணைப்பாளிகளான அமெரிக்க ஐக்கிய நாடு, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகியவற்றின் ஆள்புல எல்லைக்குள் நிலவும் தாக்கங்களைவிட, உலகின் ஏனைய பாகங்களில் நிலவும் தாக்கங்கள் மிகவும் அபாயகரமானதாகவுள்ளன. இன்னொரு வடிவிலான உலக மயமாதல்தான் நாங்கள் வேண்டி நிற்பது. அதற்கு பல மாற்று வழிகள் உள்ளன.

கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தை புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் அதனை "நல்ல முறையில்" அமைந்த 'உலக ஒழுங்காக்கி' நிறுவனமாக மாற்ற வேண்டும் என்கின்ற விடயத்தில் தங்கள் சிந்தனை யாது?

அமீன்: இவ்வாறான – சர்வதேச நிறுவனங்களை மாற்றுவதன் மூலம் உலகத்தை ஒழுங்காக்கும் செயன் முறையை ஏதோ உச்சமான நிலையிலிருந்து நீங்கள் தொடங்கமுடியாது – என்றே நான் நினைக்கிறேன். அவ்வாறு மாற்ற முயற்சித்தல் அறிவீனமான, வெறும் அப்பாவித்தனத்தின் வெளிப்பாடாகவே அமையும். உச்சமட்டங்களில் பல்வேறு விசைகளின் சமத்துவமின்மை காணப்படுகின்றது. *ஒவ்வொரு தேசிய சமூகங்களிலும் அவற்றின் அடித்தளங்களிலிருந்து மாற்றத்துக்கான செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். மீண்டும் அது வர்க்கப் போராட்டம்தான்: சமூக மாற்றத்துக்கான புரிதலைப் பெறுவதற்கான பிரதான திறவுகோலும் வர்க்கப்போராட்டம்தான்.* ஒவ்வொரு இடத்திலும் உள்ள தொழிலாளர் வர்க்கம் நன்மைகளை அடையக்கூடிய வகையில் விடயங்கள் மாற்றப்படவேண்டும். *புதிய அமைப்பு வடிவங்களையும் செயற்பாடுகளையும் சட்டரீதியான தார்மீகமுள்ள இலக்குகளை மீள்கண்டு பிடிப்புச் செய்தல் என்பதே அதன் அர்த்தமாகும். இது மிக ஆழமான சமூகப் பரிமாணம் கொண்டது.* இது பிராந்திய அடிப்படையிலான இயக்கங்களால் ஆதரவளிக்கப்பட்டு அகலப்படுத்தப்பட வேண்டும்.

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள ஒரு தனித்த நாடோ அன்றேல் ஆபிரிக்காவில் உள்ள ஒரு தனித்த நாடோ இவ்

---

**சார்பியல் பற்றி..**

போல் வலெறி : ஐன்ஸ்ற்றைன் அவர்களே, நீங்கள் உங்கள் சிந்தனைகளுடன் எவ்வாறு செயற்படுகிறீர்கள்? மனதிற் தோன்றும் போதே அவற்றைக் குறித்துக் கொள்கிறீர்களா? அல்லது இரவிலா? காலையிலா?

அல்பேற் ஐன்ஸ்ற்றைன் : வலெறி அவர்களே, நமது தொழிலில் சிந்தனைகள் மிக அரியன. எனவே ஏதேன் அகப்பட்டால் அதை நிச்சயமாக அவன் மறக்கமாட்டான். ஒருவருடத்துக்காவது!

மிரோஸ்லாவ் ஹொலுப்
(செக்கோஸ்லவாக்கியா)

---



படிப்பகம்

www.padippakam.com

விடயத்தில் அதிக தூரம் செல்ல முடியாது என்பதை ஒருவர் விளங்க முடியும். ஆனால் முழு இலத்தீன் அமெரிக்காவோ முழு ஆபிரிக்காவோ சாதிக்கமுடியும். இந்தியா, சீனா போன்ற நாடுகள் தனித்தும் சாதிக்கமுடிம். தற்போதைய ஒழுங்கு முறைக்குள் சர்வதேச முதலாளிய மூலதனத்தினது நலன்களும் மேற்சொன்ன முகக்கூட்டுப்பிணைப்பாளிகளினது பின்னணிப் பலமும் உள்ளதால், உச்ச மட்டத்திலிருந்து மாற்ற முற்படுவது வெறும் அப்பாவித்தனமான அறிவீனமாகும்.

கேள்வி: பிராந்திய அணிகளை உருவாக்குவதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முற்பட்டவண்ண மிருந்தன; முற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான பிராந்திய ரீதியான பொருளாதார முகாமைத்துவத்துக்கான நிறுவனப்படுத்தப்பட்ட கட்டமைப்பு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

அமீன்: அது படிப்படியாக அடையப்படவேண்டும். அவ்வாறு சம்பந்தப்படக் கூடிய கூட்டாளி நாடுகளுடைய கைத்தொழில் அபிவிருத்திக்கும் விவசாய அபிவி ருத்திக்கும் இடையிலான சமப்பாடற்ற பொருண்மியப் பாங்கை, சமப்படுத்தி முழுமையான சமநோக்குத் தகமையுள்ள வடிவமொன்றை முயற்சித்து பலப்படுத்த வேண்டும். இது 'திட்டமிடல்' என்பதைச் சார்ந்த விடயமாகும். சுதந்திர வர்த்தக வலயம் என்ற நடைமுறை அல்ல இது. அதற்கு அப்பாற்பட்டதாகவும் இன்னமும் மேலும் மேலும் தேவைப்பாடுள்ளதாகவும் அது அமையவேண்டும். முதலீட்டை திட்டமிட்டு செயற்படுத்துவதன்மூலம் சம நோக்குத் தகைமையுள்ள வடிவமொன்றை முயற்சித்தலானது, தொழில் நுட்பம், தொலைத் தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்புச்சாதனங்கள், இயற்கை வளங்களைப் பயன்படுத்தல் ஆகியவற்றில் மேற்குலகத்தின் ஏகபோகத் தத்துவத்தை குறைப்பதற்கானதாக இருக்கவேண்டும். ஆனால் இது ஒரு அரசியல் பரிமாணம் கொண்டதாக உள்ளது. உள்நாடு சார்ந்தும், வெளிவிவகாரம் சார்ந்தும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பிராந்தியங்களின் தகைமையை படிப்படியாக இது பலப்படுத்தவேண்டும்.

இது வெறுமனே ஒரு 'பொலிசுக்காரத்தனம்' என்பதில் இருந்து வேறுபட்டு அர்த்தப்படுவதான பாதுகாப்பு அம்சம் மட்டுமல்ல. இப்பாதுகாப்பு அம்சம் என்பது தார்மீக சட்ட அந்தஸ்த்தில் தளங்கொண்டதாக இருக்க வேண்டும். இது ஜனநாயகம் சார்ந்த முழுதும் அளாவிய ஒரு பிரச்சனையாக இருக்கும்.

கேள்வி: விசேடமாக செல்வந்த நாடுகளாக உள்ள வெளிச்சக்திகளுடன் தொடர்பு கொள்கின்ற பிராந்திய அமைப்புகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

அமீன்: அமெரிக்காவிலும் நிறுவனரீதியான மாற்றங்களுக்கு வழிவகுக்கின்றதாக அது இருக்கின்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பிறகு உயர் வளர்ச்சி வீதம் நிலவிய ஒரு தசாப்த காலத்தில் அது இருந்து வந்திருக்கிறது. அக் காலத்தில் சர்வதேச மட்டத்தில் நாங்கள் கலந்துரையாடல்கள், பேச்சு வார்த்தைகளைச் செய்துவந்தோம். ஏதோ பலவீனமான நிலைமை இருந்தது எனினும் செய்தோம். அதுதான் உங்ராட் - வர்த்தகத்துக்கும் அபிவிருத்திக்குமான ஐ.நா மாநாடு [UNCTAD - the United Nations Conference on Trade and Development] செயற்பாட்டுக்காலம் தொழில் நுட்பங்கள் போன்றவற்றை இடமாற்றம் செய்வது பற்றிய பேச்சுக்கள் நிகழ்ந்தன. இனிமேல் அதை மீள அமைப்பது அல்ல ஆனால் அதன் உள்ளார்ந்த ஆத்மத்தை மீட்டெடுத்து உயிர்ப்பித்தல் [a revival of spirit] நிகழவேண்டும். அவ்வாறான விடயங்களைப் பொறுத்தவரையில் அக் கறையுள்ள சர்வதேச பேச்சுவார்த்தைகளில் ஐ. நா. பங்குபற்றுகையில் அது ஒரு பின்புலப் பங்களிப்பை வழங்கக்கூடிய ஏதுக்கள் உண்டு. ஆனால் நான் அதீத நம்பிக்கை எதையும் இதில் கொள்ளவில்லை. மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான தேசிய அரசுகள், உலகமயமாதல் - இப்போதுள்ள அதே வடிவத்துடன் [Globalization as it is] தொடர்வதை விரும்பாது அதற்கு எதிராகவே இருக்கின்றன.

கேள்வி: வெளியிலிருந்து உள்ளேவரும் வர்த்தக நடவடிக்கைகள், வெளியில் இருந்து உள்ளே பாயும் முதலாளிய மூலதனம் பற்றிய பிராந்திய அணுகுமுறைதான் என்ன?

அமீன்: இதுபற்றி கொள்கைகள் தத்துவங்கள் உள்ளன. முதலாவது அதிரடியாக விரைவாக இலாபமீட்டுகின்ற முதலாளிய மூலதனம் [that so-called hot money flows] உள்ளே பாய்வது தடைசெய்யப்பட வேண்டும் என்ற தத்துவமாகும். அம் மூலதனத்திற்கு எதிராக ஒழுங்கான பரிமாற்றக் கட்டுப்பாடுகளை நிறுவிக்கொள்வதற்கு நாடுகள் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது எல்லை கடந்த பல்தேசியப் பின்னல் கொண்ட உற்பத்தி முதலீட்டுவகைகளை தனித்தனியாக, ஒவ்வொன்றாக ஆராய்ந்து நன்மை தீமைகளைக் கணித்து நடவடிக்கை எடுத்தலாகும். அந்நிய மூலதனத்தின் தனியார் முதலீட்டை ஏற்றுக்கொள்ளாமல் சில தொழில் நுட்பங்களைப் பெறுவது கடினமாகும். ஆனால் அது பேச்சுவார்த்தைக்குட்பட்டு உரிய ஒழுங்குகளுடன் தீர்மானிக்கப்படலாம்.

இலாபம் வெளியேறிச் செல்வதைக் கட்டுப்படுத்தல், உள்ளூர் வளப்பாதிப்பையும் சுரண்டலையும் கட்டுப்படுத்தல், தொழிநுட்ப அறிவைப் பரிமாறிப் பகிர்ந்துகொள்ளுதல், சொத்துடமைகள் உரிமை போன்ற அதே பழைய கேள்விகளும் பிரச்சனைகளும் மீண்டும் எழவேசெய்கின்றன. செயற்பாட்டுத் திட்டத்தில் இடம்பெறவேண்டிய மிகமுக்கியமான விடயங்களாக இவை உள்ளன. இன்று இதுபற்றிப் பேசுவது 'பாஷன்' அல்ல; ஆனால் இவைதான் உண்மையில் தேவைப்படுவனவாகும். [It's not fashionable today to speak of that, but these are objectively needed].

நன்றி: Multinational Monitor



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நாட்டுக்குப் போகிறோம்.

எமது இரத்தமும் தசையுமானதல்லாத ஒரு நாட்டுக்குப் போகிறோம்.
அதன் மரங்கள் எங்களது என்புகட்கு சரியனவல்ல
அதன் கற்கள் குன்றத்துப் பாடல்களில் வாழும் வெள்ளாடுகளல்ல,
கூழாங்கற்களின் விழிகள் லில்லி மலர்களல்ல.
நமக்கு மேலாகச் சிறப்பாக ஒரு சூரியனைத் தொங்கவிடாத
ஒரு நாட்டுக்குப் போகிறோம்.
புனைகதைகளின் தலைமகளிர் நமக்காகக் கைகொட்டினார்கள்.
எமக்காக ஒரு கடல், எமக்கு எதிராக ஒரு கடல்
உமக்குக் கோதுமையும் நீரும் மறுக்கப்பட்டால்,
தமது காதலை உண்ணுங்கள், நமது கண்ணீரை அருந்துங்கள்.
கவிஞர்கட்குக் கரிய கைக்குட்டைகள்
ஒரு பளிங்குச் சிலை வரிசை எமது குரலை ஒலிக்கும்.
நமது ஆன்மாக்களின் காலத்தின் தூசு படியாது காக்க ஒரு சூடடிப்புக் களம்.
எமக்காக ரோசா மலர்கள், எமக்கு எதிராக ரோசாமலர்கள்.
உங்களுக்கு உங்கள் சீர்த்தி, எங்களுக்கு எங்கள் சீர்த்தி.
ஆ, காணப்படாத நமது இரகசியத்தை மட்டுமே நாம் காணும் நாடு
சீர்த்தி நமது நமது. வீட்டைவிட எல்லா வீடுகட்கும் நம்மைக் கொண்டுசெல்லும்
தெருக்களாற் கால் வெடித்த ஒரு சிம்மாசனம்.
ஆன்மா தன் ஆன்மாவை இங்கே தனது சொந்த ஆன்மாவிற் காணட்டும்,
இல்லையேல் இங்கேயே சாகட்டும்.

**(தமிழில் : மணி)**

படிப்பகம்

www.padippakam.com



தனது மண்ணைக் குறிவைக்கும்
ஆயுதமேந்திய அயலவன்மீது கல்லெறிகிறான்
ஒரு பலஸ்தீனச் சிறுவன்
விடுதலை கூப்பிடு தொலைவில், கல்லெறி தொலைவில்
என்கிறேன் நான்

படிப்பகம்